21668.

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

ஏப்ரல் 25, 1997 தொகுதி-34
எண் 1.

C

D
V211,31 N97
N97.34.1
6656.

வெளியீடு 4-5-98 Issued 4-5-98

1166/97

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25, 1997 – தொகுதி 34– எண் 1

**Friday the 25th April, 1997 – Volume 34 – No. 1**

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

N2 11, 21 4 97
N 97. 34-1
216656.

[Price Rs. 3.00

25–4–1997

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| (ii) Personnel of the Government of Tamil Nadu | vii-xii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| (iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. **இரங்கல் குறிப்பு--** | |
| முன்னாள் பேரவை உறுப்பினர் மறைவு | 1 |
| 2. **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-39 |
| 3. **அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 39 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 39 |
| 4. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--** | |
| (அ) தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997 | 39-40 |
| (ஆ) நகர்சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997 | 40-41 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 2--மாநில ஆயத் தீர்வைத் துறை<br>கோரிக்கை எண் 15--காவல் துறை<br>கோரிக்கை எண் 16--தீயணைப்புப் பணிகள் | 41-144 |
| திரு. ரா. ஈஸ்வரன் | 41-48,50 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 48,50-54 |
| திரு. தி.ப. மாயவன் | 54-58 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 58-66,72 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 67-70, 72-74 |
| திரு. ஜி. பழனிசாமி | 74-82 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 82-96 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 66-67,88,89, 96-138 |
| 6. அறிவிப்பு-- | |
| சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்து | 144 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 145 |


216656



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு. |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

**6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு பயிர் மேம்பாடு.

**7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

**10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே. என். நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரிய இடவசதிக் கட்டுப்பாடு.

**12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



**13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

**14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:**
வணிக வரிகள்.

**15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:**
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

**18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

**19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue, Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Veerapandi Thiru S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

| | |
|---|---|
| 7. **Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Tamil Official Language and Tamil Culture** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture. |
| 10. **Minister for Food, Public Distribution System and Co-operation.** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 13. **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 14. **Minister for Commercial Taxes** | .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes. |



| | |
|---|---|
| 15. **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest and Animal Husbandry** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry. |
| 18. **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. **Minister for Information and Publicity** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |
| 21. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments. |
| 22. **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes. |

| | |
|---|---|
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi and Printing** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*திரு. பி.டி..ஆர். பழனிவேல் ராஜன்*

**பேரவைத் துணைத் தலைவர்**

*திரு. பரிதி இளம்வழுதி*

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜுலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.பு. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ.,பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

18. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
19. திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
24. திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எட். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். .. உதவி விவாதப் பதிப்பாளர்
31. திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். உதவி விவாதப் பதிப்பாளர்
32. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ம. பிலிப், எம்.ஏ. .. தலைமை நிருபர்
34. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
35. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
36. திரு. எஸ். அய்யாத்துரை .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் செல்வராசு, திரு. ப. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
14. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி

24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு

25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்

26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

31. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை

32. இராமசாமி, திரு. வை. .. பண்ருட்டி

33. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்

34. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்

35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்

40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்

42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி

48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்

54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை

58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா... சிவகங்கை

59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 66. கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |
| 69. கோவிந்தன், திரு. வி. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 71. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 72. சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 73. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 74. சந்தானம், திரு. எல். | .. | சோழவந்தான் |
| 75. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ். | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 78. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 79. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 80. சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 82. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 83. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 84. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 85. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |



| | | |
|---|---|---|
| 87. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 89. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 90. சீனிவாசன், திரு. ஏ. ஆர்.ஆர். | .. | விருதுநகர் |
| 91. சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 92. சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 93. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 94. சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 95. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 96. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 97. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 98. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 99. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 100. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 103. சுரேஷ் ராஜன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 105. செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 106. செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராய நகர் |
| 107. செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 108. செல்வராஜ், திரு. டி. | .. | உடுமலைப்பேட்டை |

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

117. தங்கபாண்டியன், திரு. கே. .. அருப்புக்கோட்டை

118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

119. தங்கவேலன், திரு. சு.ப. .. கடலாடி

120. தங்கவேல், திரு. அ.ம. .. சேலம்-2

121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)

122. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு

123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருதாசலம்

124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர் .. அரக்கோணம் (செ.வ.)

126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

129. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்

130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி

133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்

135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்

136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

137. துரைமுருகன், திரு. .. காட்பாடி

138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

139. தேவராஜன், டாக்டர். மு. .. பெரம்பலூர் (செ.வ.)

140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி

142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)

144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

147. நேரு, திரு. கே. என். .. லால்குடி

148. பத்மா, டாக்டா .. நன்னிலம் (செ.வ.)

149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161 புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம், அ. .. நெல்லிக்குப்பம்



176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
180. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
188. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி, க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு. க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

வெங்கடபதி, திரு. கே.வி. .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 12, ஈஸ்வர — திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை"

எல்லா வகைகளும் நிறைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாமல் போரிடக்கூடியதாகவும் உள்ள படை ஓர் அரசின் மிகச் சிறந்த செல்வமாகும்.

## 1. இரங்கல் குறிப்பு

*முன்னாள் பேரவை உறுப்பினர் மறைவு*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பி. ராஜகோபால் அவர்கள் 21-4-1997 அன்று மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பி. ராஜகோபால் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையிலே பணியாற்றி உள்ளார்கள். அன்னாரது மறைவினால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உறுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 661, திரு. செ. மதிவாணன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**661 —**

### அச்சரப்பாக்கத்தில் கல்லூரி அமைத்தல்

***2258** — திரு. செ. மதிவாணன்:

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கத்தில் அரசுக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ): இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 662. திரு. கோ. சண்முகம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**662 —**

### மகளிர் கலைக் கல்லூரி அமைத்தல்

*** *2827*** — **திரு. கோ. சண்முகம்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பத்தூர் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) : இல்லை.*



**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருப்பத்தூர் தொகுதியிலே, திருப்பத்தூர், மடுவாளம், பொன்னேரி, மெட்டூர், பூங்குளம், ஜோலார்பேட்டை ஆகிய இடங்களில் அரசினர் மேல்நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. திருப்பத்தூரிலே மீனாட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. ஜோலார்பேட்டையிலே மகளிர் மேல்நிலைப் பள்ளி உள்ளது. ஆனால், கல்லூரி எதுவும் கிடையாது. ஒரு தனியார் கல்லூரி மாத்திரம் உள்ளது. இருக்கிற கல்லூரியில் ஆண்களுக்கு இடம் கொடுத்தால், பெண்களுக்கு இடம் கொடுப்பது கிடையாது, பெண்களுக்கு இடம் கொடுத்தால் ஆண்களுக்கு இடம் கொடுப்பது கிடையாது. ஆகவே, பெண்களின் உரிமைக்காகப் பெரிதும் போராடும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எங்கள் பகுதியிலே திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி ஒன்று அமைத்துக் கொடுக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி வசதியை அரசே வழங்க இயலாது. மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றின் தேவைகளை, நூற்றுக்கு நூறு தேவைப்படுகிற இடத்தில் நிறைவேற்ற வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் கல்லூரி அமைக்க அரசு நிதியொதுக்க வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 663. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**663 —**

### மின் இணைப்பு வழங்குதல்

*** *3002*** — **திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியார் மாவட்டத்தில் மின் இணைப்பு காலதாமதமாக வழங்கப்படுவது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விரைவில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தொழிற்சாலை மற்றும் விவசாயத்திற்கான மின் இணைப்புகளுக்கான இலக்கீடு (Target) ஒவ்வொரு வருடமும் தமிழக அரசால் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த இலக்கீடு மின் பகிர்மான வட்டங்கள் வாரியாக பிரிக்கப்பட்டு அந்தந்த வருடத்திற்கு உரிய இலக்கீட்டிற்கு ஏற்ப தாமதமின்றி மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் மின் இணைப்பு வேண்டி 6, 7 மாதங்களாக மின் இணைப்பு கிடைக்காத சூழ்நிலையில், பலமுறை அதிகாரிகளைக் கேட்ட நேரத்தில், மீட்டர் இல்லை, கம்பிகள் இல்லை, அதற்குத் தேவையான மின் கம்பங்கள் இல்லை என்று கூறியதன் அடிப்படையில், மின் மீட்டரைப் பரிசோதிக்கக்கூடிய தொழில்நுட்ப உதவியாளர்கள் இல்லை என்று சொல்லி வந்த சூழ்நிலையில், தங்களிடமும், தமிழ்நாடு மின்சார வாரியப் பொறியாளர்களிடமும் அதனை எடுத்துச் சொல்லி, கடந்த வாரத்தில்தான் உபகரணங்கள் எல்லாம் அனுப்பப்பட்டதாக என்னிடத்திலே கூறினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்காலத்திலே வேகமாக மின் இணைப்பு கிடைப்பதற்கும், அதே போல உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்து 6 மாதம் ஆகியும்கூட எஸ்.ஸி., எஸ்.டி.-பிரிவுகளுக்கு வீதி விளக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்படாததால் எந்த அடிப்படையில் எதிர்காலத்திலே மின் இணைப்பு கொடுக்க இருக்கிறீர்கள் என்பதையும் அதேபோல, பேரூராட்சி ஊராட்சிக்கு பொது தொகுப்பிற்கு எந்த அடிப்படையிலே மின் இணைப்பு விரைவாக கொடுக்க இருக்கிறீர்கள் என்பதையும் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மின் கம்பங்கள் இல்லை, மீட்டர் இல்லை என்ற குறைபாடு எல்லாம் இப்போது இல்லை. ஆனால் விவசாயத்திற்கும் தொழில்களுக்கும் மின் இணைப்பு கொடுப்பதிலே பிரையாரிட்டி பேஸிஸ்-யார் முன்னாலே பதிவு செய்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் முதலில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயத்தைப் பொறுத்தவரையிலே 4,73,000 விண்ணப்பங்கள் இன்னும் நிலுவையிலே இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டுக்கும் நாம் 40,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தருகிறோம். எனவே சராசரியாகப் பார்த்தால் பதிவு செய்த 10 ஆண்டுகள் அல்லது 11 ஆண்டுகள் கழித்துத்தான் மின் இணைப்பு விவசாயிகளுக்கு கொடுக்க முடிகிறது. ஆனால் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே





அந்தந்தப் பகுதிகளுக்கு, இந்த ஆண்டு 453 பெரிய தொழிற்சாலைகளுக்கும் 16,000 சிறிய தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க இருக்கிறோம். அதுவும் வரிசை அடிப்படையிலே கொடுக்கப்படும். அதிலே குறைந்தது 6 மாதத்திற்குள்ளாக மின் இணைப்பு கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. தெரு விளக்குகளைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின் பேரில் 50,000 தெரு விளக்குகள் இந்த ஆண்டு பொருத்த இருக்கிறோம். அடுத்த ஆண்டு மீதம் உள்ள 20,000 தெரு விளக்குகளையும் பொருத்திவிடுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 664. திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**664 —**

**குடியாத்தம் மருத்துவமனையை விரிவுபடுத்துதல்**

* 3339 — **திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் அரசு மருத்துவமனையில் போதிய இடவசதி இல்லாததால் தென்பகுதியில் கூடுதல் மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடியாத்தம் அரசு மருத்துவமனையின் தென் பகுதியில் தற்சமயம் போதுமான இடவசதி இல்லாததால் கூடுதல் கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கேள்வியிலே தென் பகுதி என்று குடியாத்தம் பகுதியினுடைய தென் பகுதியைத்தான் நான் குறிப்பிட்டேன். இருந்தாலும் குடியாத்தம் மருத்துவமனைக்கு தினசரி சுமார் 2,000 பேர் வெளி நோயாளிகளாக வருகிறார்கள். அங்கு இருக்கக்கூடிய படுக்கை வசதியோ சுமார் 100-க்குள்ளாகத்தான் இருக்கிறது. அதுவும் அல்லாமல் மழைக் காலங்களிலே அந்த மருத்துவமனை தரை மட்டத்தைவிட சுமார்

3 அடி, 4 அடி பள்ளத்திலே இருக்கிற காரணத்தினால் வெள்ளம் புகுந்து விடுகின்றது. பிரசவப் பகுதியிலே 2 அடி தண்ணீர் தேங்கி விடுகிறது. ஆகையினால், குடியாத்தத்தினுடைய தென் பகுதியிலே அந்த மருத்துவமனையைக் கட்டினால், ஒரு பிரசவ விடுதியாவது அந்தப் பகுதியிலே கட்டினால் நலமாக இருக்கும் என்ற கருத்தில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அரசு மருத்துவமனையிலே 100-க்கும் குறைவாக படுக்கைகள் இருப்பதாகச் சொன்னார்கள். 118 படுக்கைகள் இருக்கின்றன. சராசரி வெளி நோயாளிகள் 2,000 பேர் என்று சொன்னார்கள். 1172 பேர்தான் சராசரியாக வருகிறார்கள். அங்கே எல்லாவிதமான வசதிகளும்—குருதி வங்கி, முடநீக்குப் பிரிவு, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, குடும்ப நல அறுவை சிகிச்சைப் பிரிவு, சித்த மருத்துவப் பிரிவு, நுண் கதிர் பிரிவு மற்றும் ஆய்வுக் கூடம் அத்தனையும் குடியாத்தம் மருத்துவமனையிலே வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 15 மருத்துவர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள் இருந்தாலும்கூட அங்கே இட வசதி காரணமாக கட்டிடம் கட்டுவதற்கு இதுவரையிலே எங்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரை இலாக்கா கேட்டுக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியினுடைய நன்மையைக் கருதி அவரும் உடன் இருந்து ஒரு நல்ல இடத்தை வாங்கித் தருவாரேயானால் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 665, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**665 —**

**மேல்மலையனூர் தொகுதியில் குடிநீர் வசதி**

*** *541* — டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-



மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள 302 குடியிருப்புகளில் இன்றைய நிலவரப்படி 83 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி முழுமையாக செய்து தரப்பட்டுள்ளது. 219 குடியிருப்புகளுக்குப் பகுதி அளவு குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையினுடைய அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் குறைந்து விட்டது. கடல் நீர் நிலத்தடி நீருடன் கலக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. வருங்காலங்களில் குடிநீர்ப் பஞ்சம் அதிக அளவில் மக்களை வாட்டி வதைக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் அஞ்சுகின்றனர். இந்த நிலையில் நம்முடைய அரசு செயற்கை மழையைப் பயன்படுத்தி குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு முயலுமா? ஆம் எனில், அதன் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் மீண்டும் 21 குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டப்பணிகளைத் துவக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு குடிநீர் வசதிகளை அளிப்பதற்கான வாய்ப்பு வசதிகளை ஆராயவேண்டும். எங்கெங்கு நீர் ஆதாரம் இருக்கிறது, எங்கிருந்து எங்கு கொண்டு வரவேண்டும் என்பவை எல்லாம் முன் கூட்டியே திட்டமிடப்பட்டிருக்கின்றன, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் கிடைக்கிற 'ரிப்போர்ட்டை' வைத்து அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 666, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**666 —**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

*** *2124* — திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 25

அரியலூர் தொகுதி, இலுப்பையூர் ஊராட்சி, பொய்யாதநல்லூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் தொகுதி, இலுப்பையூர் ஊராட்சி, பொய்யாதநல்லூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, குடிநீர் விநியோகம் நடந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி, இலுப்பையூர் ஊராட்சி மற்றும் பொய்யாதநல்லூர், மேட்டுப்பாளையம், காவேரிப்பாளையம், இராயபுரம், திண்டிவனம் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு 400 அடி ஆழத்திற்குமேல் ஆழ்குழாய்க் கிணறு தோண்டி அதிலே தண்ணீர் கிடைக்காதபடியால், அங்கிருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சரியான முறையில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இது குறித்து பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியைப் பொறுத்தவரை ஒரேயொரு குறிப்பிட்ட கிராமத்தைப் பொறுத்த கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். அதற்கான விடையைத்தான் நான் தயாரித்திருக்கிறேன். இருப்பினும், தொகுதிகளை எடுத்துக்கொண்டு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்படுமா என்று ஒரே நேரத்தில் கேட்பது நியாயமா என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கூடுமானவரையில் எந்தெந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் 10 அல்லது 15 நாட்களுக்குள்ளாக முதன்மையாக இத் திட்டத்தை எங்கெங்கே எந்தெந்தத் தொகுதியில் அமல்படுத்துவது என்பதை அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 667, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 25]

667—

## வண்ணப் பருத்தி ரகங்கள் உற்பத்தி

* *5075*—**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பலவித வண்ணங்களில் பருத்தி ரகங்கள் உற்பத்திக்கான ஆய்வு எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தீவிர ஆய்விற்குப் பிறகு, வண்ணப் பருத்தி உற்பத்தியில் போதிய மகசூல் இல்லாததாலும், இப்பருத்தியில் பூச்சி தாக்குதல் அதிக அளவில் உள்ளதாலும் வண்ணப் பருத்தி ரகங்களை உற்பத்தி செய்வது தற்போது ஊக்குவிக்கப்படவில்லை.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த வண்ணப் பருத்தி வகைகள் பயிரிடப்பட்டனவா? அதில் மத்திய மாநில அரசுகளின் பங்கு என்ன? பூச்சிகளின் தாக்குதலால் அதிக மகசூல் கிடைப்பதில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதைத் தடுத்து இப்பருத்தி வகைகள் நடப்பாண்டில் பயிரிடப்படுமா? இதற்கு மானியம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்கி, இளம் சிவப்பு, மர நிறம் மற்றும் இளம் பச்சை ஆகிய முக்கியமான நிறங்களிலே மெல்லிய பருத்தி கிடைக்கிறது. பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்கக்கூடிய வகைப் பருத்திகள் குறைவான உற்பத்தியளவைக் கொண்டதோடு, தரமும் இல்லாதவைகள். இவ்வகைப் பருத்திகளை வெண்ணிறப் பருத்தியோடு விளைச்சல் செய்தால் வெண்ணிறப் பருத்தியின் தரத்தையும் கெடுத்து, உற்பத்தியளவையும் குறைத்துவிடும் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்திருக்கின்ற காரணத்தினால், அரசாங்கம் இந்தப் பருத்தி வகைகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்கப்படுத்தவில்லை. ஒருங்கிணைந்த பருத்திப் பெருக்கத் திட்டத்தின்மூலம் 1996-97-ல் திட்டச் செலவு ரூபாய் 250.11 இலட்சங்கள் அளவுக்கு வழங்குகிறோம். வெண்மைப் பருத்திக்குத்தான் இந்த மானியம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 668, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**668—**

### விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்

***6372**—திரு. என்.ஆர். அழகராஜா:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1994-95-ம் ஆண்டு முதல் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், ஏக்கருக்கு எவ்வளவு தொகை?*

*(இ) எந்த ஆண்டு முதல் வழங்கப்படும்?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்கள் விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக இருந்தும்கூட அவை தரிசாகக் கிடக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களிலே மரங்கள் நடுவதற்காகிலும் அரசு உதவி செய்து கொடுக்க வேண்டும். ஐந்து ஏக்கர் தரிசாக இருந்தால் அதிலே ஒரு போர் வெல் போட்டுக் கொடுத்து மரங்களையாவது உற்பத்தி செய்து மழை வருவதற்கான ஒரு ஏற்பாட்டையாவது அரசு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் செய்வதற்கான வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தரிசு நில மேம்பாடு, நீர்ப் பிரிவிலே மேம்பாடு இவைகளிலே நாம் விவசாயத்திற்குப் பயனுள்ள வகையிலே கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் டாக்டர் குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கின்றார்கள். அந்தக் குழு விரைவிலேயே அறிக்கை தர இருக்கிறது. அந்த அறிக்கை



கிடைத்தவுடன் அதுபோன்ற உதவிகளைத் தரிசு நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 669, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**669 —**

### காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பாசன வசதி

***594**—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

*மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொப்பையாற்றின் குறுக்கே காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நீர்ப்பாசன வசதிக்காக கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தொப்பையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதில்லை என்பது பற்றி கேள்வி கேட்டிருக்கிறார். காடையாம்பட்டி ஒன்றியத்தில் தொப்பையாற்றின் குறுக்கே எந்தவிதமான அணையும் கட்டப்படவில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி மாவட்டத்து எல்லையிலே காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே இந்தத் தொப்பையாற்றிற்குக் குறுக்கே, தர்மபுரி மாவட்ட எல்லையிலே அந்த அணை இருக்கின்றது. ஆனால், அதன் நீர்ப் பிடிப்புப் பகுதி முழுவதும் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்றது. இந்தப் பகுதியிலே பாசனத்திற்குப் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தினால் திறந்து விடப்படுவது இல்லை என்று அறிகிறேன். இதன் அருகே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவிலே அம்மன் ஏரி என்ற ஒரு ஏரி இரண்டு மலைப் பகுதிகளுக்கு நடுவே 100 ஏக்கர் பரப்பிலே இருக்கிறது. வருடம் முழுவதும் அதிலே தண்ணீர்

இருக்கின்றது. சமீபத்திலே சேலம் வந்த சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு கூட அதனைப் பார்வையிட்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொப்பையாறு நீர்த் தேக்கத்திலேயிருந்து அம்மன் ஏரியையும் இணைத்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயார் செய்தால் அந்தப் பகுதியிலே உள்ள சுமார் 50 ஆயிரம் மக்கள் நிரந்தரக் குடிநீர் வசதி பெறுவார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மூலக் கேள்விக்கு, காடையாம்பட்டி ஒன்றியத்தில் தொப்பையாற்றின் குறுக்கே அப்படி ஒரு அணை கட்டப்படவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் செக்காரப்பட்டி அணையைக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். அது தர்மபுரி மாவட்டத்தில் இருப்பது. செக்காரப்பட்டி அணையில் இருக்கிற தண்ணீர் மேச்சேரிக்கும், தர்மபுரியில் இருக்கும் நலம்பள்ளி ஒன்றியத்திற்கும் போகுமே தவிர. அது காடையாம்பட்டி ஒன்றியத்திற்கு வராது. அவர் கேட்டது நீர்ப் பாசனத்திற்கு. இப்பொழுது கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கிறார்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த நீர்ப் பாசனத் திட்டம் கடந்த ஆட்சியிலே ஏற்கனவே திட்டமிடப்பட்டது. ஓமலூர் தொகுதிக்காகத்தான் அந்தப் பாசனத் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியாளர்களால் அது மேச்சேரி ஒன்றியத்திற்குத் திருப்பிவிடப்பட்டது. ஆக, மீண்டும் அந்த திட்டத்தைப் பரிசீலனை செய்து, இந்த ஓமலூர் தொகுதிக்கு அந்தப் பாசன வசதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து உறுப்பினர் சொல்வதைப் பற்றி அரசு ஆராயும். அப்படி இருக்குமானால் அதுகுறித்துப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொக்கர் அவர்கள் காடையாம்பட்டி, தொப்பை ஆற்றைப் பற்றித்தான் கேட்க விரும்புகிறார் என்று நினைக்கிறேன். திரு. ஆர். சொக்கர்,

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடையாம்பட்டி, தொப்பை ஆற்றில் கட்டப்பட்ட அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது இல்லை என்பதுதான் மூலக் கேள்வி.





அதைத் தொடர்புபடுத்திச் சொல்ல வேண்டுமே என்றால். தென் மாவட்டங்களில் அணைக் கட்டுக்களைத் திறந்து விடுவதற்கே தண்ணீர் இல்லை. அதுதான் நிலைமை. தொடர்ந்து வறட்சியாக இருக்கிறது. அங்கே உள்ள அணைக்கட்டுக்களில் தண்ணீரைத் தேக்கி, அதைத் திறந்துவிட வேண்டுமென்றால், மேற்கு நோக்கி வீணாக அரபிக் கடலிலே பாயக் கூடிய பம்பை, அச்சன்கோயில் ஆறுகளிலிருந்து உபரியாக உள்ள 23 டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வர முடியும் என்று என்.டபிள்யூ.டி.ஏ., கேரள அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஒரு கருத்துரு அனுப்பியிருக்கிறது. அங்கேயுள்ள மக்களெல்லாம் என்ன நினைக்கிறார்கள் என்றால்., தென் மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றி முறையாக எடுத்துச் சொல்வதில்லை; இந்த அரசும் கேரள அரசுடன் முறையாகப் பேசுவதில்லை என்ற தவறான எண்ணம் இருக்கிறது. ஆகவே, கேரள அரசுடன் இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசி, 23 டி.எம்.சி. பாசன வசதிக்காக. அது இல்லை என்றால் 3 டி.எம்.சி.யாவது குடிப்பதற்காகப் பெறுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் தனிக் கேள்வி போட வேண்டுமென்று பதில் சொன்னால் எனக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. (சிரிப்பு)

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்கள் அனுமதித்தால் இப்பொழுதே பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர்தான் பம்பா, அச்சன்கோயில் இவற்றைப்பற்றிக் கேட்டார் என்பதை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்கிறார். அதுதான் அவருடைய எண்ணமாக இருக்கும். ஆனால் தேசிய நீர்வளக் குழுமம் இதுகுறித்து ஆய்வு செய்தது. அவர் சொன்னதைப் போல 22 டி.எம்.சி. தண்ணீர் வந்து, ஒரு இலட்சம் ஏக்கர் தென் மாவட்டங்களிலே பாயும். அதற்குப் பிறகு பம்பா-அச்சன்கோவில் வைகை இணைப்பைப் பற்றித்தான் ஆரம்பித்தார்கள். பிறகு அதற்கு ஒரு துணைக் குழுவை போட்டு அதை மாற்றி அமைத்துவிட்டு பம்பா-அச்சன்கோவில் வைப்பாறு இணைப்பைப் போட்டுக்கொண்டு வந்து இருக்கிறார்கள். அது இன்னும் சாதகமாகும். இந்த அரசு மத்திய சர்க்கார் இடத்திலே கேட்கவில்லை, கேரள அரசோடு பேசவில்லை என்று சொல்கிறார்கள். கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுகுறித்து கேரள

[1997 ஏப்ரல் 25

அமைச்சரோடு நான் பேசி இருக்கிறேன். மத்திய நீர் வளத் துறை அமைச்சரோடு பேசி இருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஒருபடி மேலே போய் அவர்களிடம் தண்ணீர் கொடுங்கள், குடிப்பதற்குக் கொடுங்கள், பயிருக்குக்கூடப் பிறகு கொடுங்கள் என்று கேட்டேன். மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இதற்குத் தராவிட்டால் அது தர்மம் ஆகாது என்று கூறினார்கள். ஆனால் கேரள அரசு பம்பா-அச்சன்கோவிலோடு பல ஆறுகள் போகின்றன. அதற்குத் தனியாக நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அங்கே வெம்பாநாடு என்ற ஒரு நாடு இருக்கிறது. அங்கு உப்புத் தண்ணீர் வருகிறது. அதையும் போக்குவதற்கு இந்தத் தண்ணீர் உதவும் என்று நாம் மாற்றுக் கருத்தைச் சொல்லி இருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் பம்பா-அச்சன்கோவில் திட்டம் பற்றிக் கேட்டார்கள். அதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். நீங்கள் கேட்பதைவிட வேகமாக கலைஞருடைய அரசு, கேரள அரசோடு பேசிக் கொண்டு இருக்கிறது, மத்திய அரசோடு பேசிக் கொண்டு இருக்கிறது. இதுகுறித்த எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 670, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**670 —**

### அரம்பள்ளி பாறை நீர்த்தேக்கத் திட்டம்

*** *2325*—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், கவுஞ்சிக்கு அருகில் உள்ள அரம்பள்ளி பாறை நீர்த்தேக்கத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கவுஞ்சிக்கு அருகில் அரம்பள்ளி பாறை நீர்த்தேக்கம் அமைப்பதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முதல் அறிக்கை அரசுக்கு கிடைத்திருக்கிறது.



1997 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 671, திரு. மீ.அ. வைத்தியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**671 —**

### இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

*** *1660*—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு தாம்பரம்-முடிச்சூர் சாலையை வேளச்சேரி சாலையோடு இணைத்து இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இது நீண்ட நாட்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட விடை என்பதால் இல்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக ஜப்பான் உதவியோடு, தாம்பரம் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 37.5 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தின் பரிந்துரையோடு ஜப்பான் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவில் இதற்கான அனுமதி கிடைக்குமானால் இந்தப் பணி நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்று. இந்தத் திருத்திய விடை பேரவைத் தலைவருக்கும் வந்திருக்க வேண்டும். ஆனால் எனக்குக் கொடுத்த விடையிலே 'இல்லை' என்ற பதில்தான் இருக்கிறது.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையினுடைய நுழைவு வாயிலாக இருக்கின்ற தாம்பரத்தினுடைய நெருக்கடியைக் குறைப்பதற்கு இது அதிமுக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்கிற காரணத்தால், நம்முடைய அரசு ஜப்பான் அரசுக்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாகத் தெரிவித்து இந்தப் பணியை

விரைவுப்படுத்த வேண்டும். இதிலே மாநில அரசினுடைய பங்கு இருக்கிறதா, அப்படி இருந்தால் எவ்வளவு தொகை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். என்னிடம் கையொப்பமிட்ட கேள்விகள் வரும்போது 8 மாதங்களுக்கு முன்பே விடையைக் கொடுத்து விடுகிறோம். ஆனால் சட்டமன்றத்திலே கேள்வி வருகிறபோது முதல் நாள்தான் வருகிறது. இந்தப் பதிலை உடனடியாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் துரப்படுகிறது. இனி அப்படிச் சொல்கிறபோது நிச்சயமாக உங்களுக்கும் அதனுடைய நகலைக் கொடுத்து விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. உங்களுக்கு கடைசியாகக் கிடைத்தத் தகவலைக் கொடுப்பதுதான் முறை. இதிலே பிரச்சினை என்னவென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்த விடைத்தாள் வந்துவிடுகிறது. இதிலே 50 நகல் எடுத்து பத்திரிக்கையாளர்களுக்கு முதலில் கொடுத்து விடுகிறோம். இந்த வினா-விடை நேரம் முடிந்தவுடன் பத்திரிகைகளில் அவர்கள் போடலாம் என்று கொடுத்துவிடுகிறோம். ஆனால் அவர்கள் திருத்திய விடையைப் பார்க்காமல் இந்த விடையைப் போட்டு விடுகிறார்கள். அதற்காகத்தான் அப்படிக் கூறினேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதைப்போல இந்த அரசு அதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 672. திரு. பி. இராசமாணிக்கம் மற்றும் திரு. மா. இராமச்சந்திரன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**672 —**

## சோழன் போக்குவரத்துக் கழகக் கிளை அமைத்தல்

***2059—திரு. பி. இராசமாணிக்கம்:**
**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் சோழன் போக்குவரத்துக் கழகக் கிளை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90-ல் ஒரத்தநாட்டில் சோழன் போக்குவரத்துக் கழகக் கிளை அமைக்கப்படுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, மிகப் பெரிய விழா நடைபெற்றது. அதற்குப் பின்னால் வந்த அ.இ.அ.தி.மு.க அரசு வேண்டுமென்றே அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை. நம்முடைய அரசு நிச்சயமாக அதை மறுபரிசீலனை செய்து, திருவோணம், ஒரத்தநாடு தொகுதியினுடைய பேருந்து வசதியை, பொது மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் சோழன் போக்குவரத்துக் கழகக் கிளையை அமைக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டைச் சுற்றி வடக்கில் 22 கிலோ மீட்டர் தூரத்தில் தஞ்சாவூரின் அங்கே மூன்று பணிமனைகள் இருக்கின்றன. அதேபோல, 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பட்டுக்கோட்டையிலே ஒரு பணிமனை இருக்கிறது. 22 கிலோ மீட்டர் தூரத்திலேயுள்ள மன்னார்குடியிலே ஒரு பணிமனை இருக்கிறது. பணிமனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 40 கிலோ மீட்டர் தூரமாவது இடைவெளி இருக்க வேண்டும். சுற்றிச் சுற்றி பணிமனைகள் இருக்கின்ற காரணத்தினால் ஒரத்தநாட்டிலே பணிமனை உருவாக்குகின்ற சூழ்நிலை தற்சமயத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1989-ல் கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் கால்கோள் விழா நடத்திய பணிமனை. ஆகவே, தலைவர் கலைஞர் அவர்களால் கால்கோள் விழா நடத்திய அந்தப் பணிமனையைத் துவக்குவதுதான் நல்லது.

ஆகவே, அமைச்சர் சுற்றிச்சுற்றி பணிமனையிருப்பதாகக் கூறினார். பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணிக்கு 30 கிலோ மீட்டரிலே ஒரு பணிமனை இருக்கிறது. ஆகவே, ஒரத்தநாட்டிலே ஒரு தாலுக்காவினுடைய தலைமையகத்திலே அமைக்கலாம். இடம் சரியாக அங்கே தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு போர்டும் இருக்கிறது பணிமனை என்று. ஆகவே மறுபடியும் பரிசீலனை செய்து, அதை அவசியம் கொண்டுவருவது நியாயம் என்பதைத் தெரிந்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி அந்த இடத்திலே பேருந்துகள் அதிகம் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மீண்டும் இந்த அரசு விதிவிலக்கு அளித்து அதை உருவாக்குவதற்கு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 673, திரு. கே. சுப்பராயன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**673 —**

## மகாகவி பாரதியாரின் படைப்புகளை வெளியிடுதல்

*** 5778 - திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாகவி பாரதியாரின் படைப்புகள் முழுவதையும் தொகுத்து மலிவுவிலை பதிப்பாக வெளியிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற கொடுமை உலகில் இல்லை ஆக வேண்டுமென்ற





கவிதையைப் படைத்த பரதியாருக்குமா இல்லை! தன்னுடைய வாழ்நாள் எல்லாம் சாதிகளாகப் பிரிந்து கிடக்கின்ற சமூகத்தை தேசமாக ஐக்கியப்படுத்துவதற்குத் தன்னையே தேய்த்துக்கொண்ட அந்த மகாகவிக்கு நாம் செய்கிற அஞ்சலி, மிகப் பொருத்தமான அஞ்சலி, அதுவும் இன்றைய தமிழ்நாட்டு சமூகத்தை, சாதிகளாகப் பிரிப்பதிலேயே குறி வைத்துச் செயல்படுகின்றவர்களுக்கு மக்கள் இரையாகிவிடாதவாறு அவர்கள் ஊக்கப்படுத்துகிற ஆழமான கருத்துக்களைக் கொண்ட பாரதியாரின் கவிதைகள், கதைகள், நாவல்கள், கட்டுரைகள் ஆகியவற்றையெல்லாம், தயவுசெய்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புவது, மலிவுவிலைப் பதிப்பாக வெளியிட அரசு முன்வர வேண்டும். முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் நாட்டுடைமையாக்குவது என்ன என்பதைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே, அறிஞர் அண்ணாவினுடைய படைப்புகள், மறைமலை அடிகள், தேவனேயப் பாவணர், பாரதியார், பாவேந்தர், பட்டுக்கோட்டை ஆகியோருடைய படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு எந்த ஒரு நிலையத்திற்கும், யாரும் உரிமம் தரவேண்டிய தேவையில்லை. யார் வேண்டுமானாலும் வெளிப்படுத்தலாம். பாரதியாருடைய படைப்புகள் இப்போது முழுமையாகக் கிடைக்கின்றவகையில் பல்வேறு பதிப்பகங்கள் நிறைய வெளியிடுகின்றன. அப்படியே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் விரும்பினாலும் அவரே வெளியிட்டுக்கொள்வதற்கும், அதை விற்பனை செய்வதற்கும் அவருக்கு முழு உரிமையிருக்கிறது. எனவே, நாட்டுடைமையாக்குவதற்கு ஒரு அரசு பணம் ஒதுக்குகிறபோதே இதை அனைவரும் விரும்பியவாறெல்லாம் பதிப்பித்துக்கொள்ளலாம் என்று முழு உரிமையும் தரப்படுகிறது. அந்த உரிமையை மாண்புமிகு உறுப்பினர் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள இயலாது போயிற்று என்று கருதுகிறேன். பாரதியாருடைய பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டன. நான் தெரிந்துகொள்ள விரும்புவது இந்த மாநில அரசு மிகக் குறைந்த வருமானத்தில் உள்ளவர்கள்

[1997 ஏப்ரல் 25

எளிதில் வாங்கி படிக்கின்றவகையில், மாநில அரசே மலிவு பதிப்பாக அவரது படைப்புகளை வெளியிடுமா என்று அறிய விரும்பித்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். எனவே, தயவுசெய்து அத்தகைய மலிவுப் பதிப்பாக மாநில அரசு வெளியிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த ஒரு பதிப்பையும் அரசு ஏற்க முன்வராது. காரணம் ஏற்கெனவே, நியூ செஞ்சுரி புத்தக நிலையமும், வெவ்வேறு நிலையங்களும் மலிவுப் பதிப்பாக பாரதியாருடைய படைப்புகளைப் போட்டிருக்கின்றன. வேண்டுமானால், நண்பர் என்ற முறையில் நான் அவற்றை வாங்கித்தர தயார். அதே நேரத்தில் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு அப்பால் வேறு சில அரிய பதிப்புகளைத் தமிழக அரசு வெளியிடுகிறது. அரிய தமிழ் நூல் அகராதி, வேறு வகையான சுருக்கெழுத்து நூல்கள், இவற்றைத்தான் அரசு வெளியிடுவதற்கு நிதி ஒதுக்கமுடியும். அதனால்தான் ஒட்டுமொத்தமாக ஒரு மிகச் சிறந்த கவிஞனை, பாரதியை இன்னும் சொல்லப்போனால், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த அந்த நிலாவை முழுமையாக இந்த நாட்டுக்கு உடைமையாக்கி அனைவருக்கும் இது உடைமை, யார் வேண்டுமானாலும் பதிப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலையில் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. நண்பர் அவர்கள் தனக்கு வேண்டிய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அவற்றை மலிவுப் பதிப்பாக வெளியிடச் செய்யலாம்; நாங்களும் துணை செய்வோம்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நண்பர் என்று சொல்லக்கூடாது. உறுப்பினர் அவர்கள் என்று சொல்லவேண்டும். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 அல்லது இலட்சக்கணக்கான நூல்கள் செய்ய முடியாத மிகப்பெரிய காரியத்தை ஒரு திரைப்படம் செய்து விடுகிறது என்பதில் ஐயமில்லை. பொதுவாக, மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட வரலாறுகளைத் திரைப்படங்கள்தான் மக்களுக்கு எடுத்துரைத்தன. வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், ஏன் சிலப்பதிகாரம் என்ற காவியத்தைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'பூம்புகார்' என்று எழுதியபோதுதான் அது மக்களைச் சென்றடைந்தது. அந்த வகையிலே



1997 ஏப்ரல் 25]

மகாகவி பாரதியார் அவர்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள். தன்னுடைய வாழ்க்கையைத் தமிழுக்காகவும் தமிழ்நாட்டிற்காகவும் அர்ப்பணித்தவர்கள். அவர்களுடைய வரலாற்றைத் திரைப்படம் ஆக்கும் முயற்சியிலே பிரபல இயக்குநர்கள், குறிப்பாகச் சொன்னால், திரு. கே. பாலச்சந்தர், திரு. கமலஹாசன் போன்றவர்கள்கூட முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லையென்று அறிகிறேன். இந்த நிலையிலே, ஒரு உயர்ந்த தமிழனுடைய, நாட்டுப்பற்றுடைய தமிழனுடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்கி மக்களுக்கு அளிக்கும் முயற்சியிலே அரசு ஈடுபடுமா அல்லது முயற்சி எடுக்கின்ற நிறுவனங்களுக்கு அரசு நிதியுதவி செய்யுமா என அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அப்படிச் செய்வதன் மூலம்தான் ஒரு தியாக உணர்வை மக்களிடையே பரப்ப முடியும் என்ற எண்ணத்தையும் நான் வெளிப்படுத்த விரும்புகின்றேன். இதைச் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கப்பலோட்டிய தமிழன் போன்ற அந்தப் படங்களிலேயே பாரதியாருடைய வரலாறு ஆங்காங்கே காட்டப்பட்டிருக்கிறது. பாரதியாருடைய வரலாற்றைப் படமெடுக்கப் பிரபல இயக்குநர்கள் முயன்றும் அந்த முயற்சி தொடரவில்லை என்று குறிப்பிட்ட பிறகு, ஒரு அரசு அந்த வரலாற்றைப் படமாக்குவதென்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாரதியாரைப் பற்றி பாரதிதாசன் படைத்த கவிதையை நம்முடைய மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 'பாரதியைப்பற்றி பாரதிதாசன் ஆக்கிய அனைத்தும் அவனுக்கும் பொருந்தும்' என்று கண்ணதாசன் பாடியிருக்கிறார். நாட்டு விடுதலைக்காகக் கவிதைகளை வழங்கிய பாரதியைப் போல, தாய் மொழியாம் தமிழ் மொழியின் விடுதலைக்கும், தமிழ்ச் சமுதாயத்தின் விடுதலைக்கும் கவிதைகள் வழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய அஞ்சல் தலையை வெளியிட மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த நம்முடைய தமிழ் ஆட்சிமொழி

[1997 ஏப்ரல் 25

மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 674, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**674 —**

### நியாயவிலைக் கடைகள் அமைத்தல்

*** 2835 — திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும் பொதுமக்கள் ஒரு கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிருப்பதை மாற்றி ஒரு கிலோ மீட்டருக்குள் நியாயவிலைக் கடைகளை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு நியாயவிலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விடையிலே 'இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது தமிழகமெங்கும் உணவுப் பொருள்கள் வாங்குவதற்காக இரண்டு கிலோமீட்டர், மூன்று கிலோ மீட்டர் என்று செல்கின்ற நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காகச் சேவை நிறுவனங்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகம் செய்யக்கூடிய உரிமங்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அனுமதியை ஆங்காங்கு இருக்கின்ற பெண்களால் நடத்தப்படுகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குக் கடந்த



1997 ஏப்ரல் 25]

ஆட்சிக் காலத்திலே வழங்கியிருக்கிறார்கள். அப்படி ஒரேயிடத்திலே 200 அல்லது 300 குடும்ப அட்டைகளைத் தாங்களாகவே பெற்றுக்கொண்டு, தங்களுக்குள்ளேயே பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், அதுபற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம், மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே தங்களுடைய கொள்கைக் குறிப்பின் அடிப்படையில், இரண்டு கிலோமீட்டர் இருந்தால் அங்கே இருநூறு குடும்பக் கார்டுகள் இருந்தாலும்கூட கிராமங்களிலே பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்கப்படுமென்றும், நகரங்களிலே வார்டுக்கு ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்கப்படும் என்றும் அறிவித்திருந்தும்கூட, கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இன்னமும் வேகமாக எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா? எதிர்காலத்தில் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடைய பரிந்துரைகளை ஏற்று, தேவையான இடங்களிலே விரைவாகப் பகுதிநேர நியாயவிலைக் கடைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன் ஏழை எளிய மக்கள் புசிக்கின்ற பொருள்களை வாங்கிக் கொள்கின்ற அந்த உரிமையை, 30 நாட்களுக்கும் அந்தப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரிலே, கடைகளிலே அவ்வாறு வழங்கப்பட்டது. ஆனால், பல்வேறு இடங்களிலே 1,500 கார்டுகள், 2,000 கார்டுகள் என்று இருக்கின்றதால் பெரிய கூட்டம் அங்கே சேர்கின்றது என்று சொன்னவுடன், அரசினுடைய பணம் அதிகமாகச் செலவழியும் என்றாலும்கூட, உடனடியாக ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நமது நிதிநிலை அறிக்கையிலே, தமிழ்நாட்டிலே மேலும் 1,000 கடைகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருந்தாலும்கூட எல்லையாக 5,000

கடைகள் என்று வைத்திருக்கிறோம். முதல் கட்டமாக 1,000 கடைகள் என்று அறிவித்திருந்தாலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஆணையர் அவர்களுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது, குறிப்பிட்டு அந்தப் பகுதியைச் சொல்வார்களானால் உடனடியாக அங்கு இருக்கின்ற அதிகாரிகளோடுத் தொடர்பு கொண்டு விரைவாக அந்தப் பணியை முடிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது பற்றி, இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு மூன்று விதமான குடும்ப அட்டைகளை நாங்கள் வழங்கப் போகிறோம என்று அறிவித்திருந்தது. முதல் கட்டமாக ஆறு மாநகராட்சிகளில் கணக்கு எடுக்கப்பட்டு, இந்த ஏப்ரல் மாதத்திலேயே கார்டுகள் கொடுக்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். அந்த வருமானத்தைக் கணக்கிடுவதில் பல குளறுபடிகள் இருக்கின்றன. அதைப் பொதுமக்கள் எல்லாம் வரவேற்கவில்லை என்றுகூட கருத்து இருந்தது. ஏப்ரல் மாதம் முடியப்போகிறது. இதுவரை எந்தக் கார்டுகளும் கொடுக்கப்படவில்லை. அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிட்டதா? அது பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சிறப்பானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், ஒவ்வொரு முறையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எவ்வளவோ பணிகளுக்கிடையிலும் நேரிடையாக துறையினுடைய அதிகாரிகளோடு ஆய்ந்தறிந்து அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அல்ல, பொதுமக்கள் இதனை வரவேற்றிருக்கிறார்கள். தொடர்ந்து ஆறு மாநகராட்சிகளிலும் ஆய்வு செய்வதற்காக அதிகாரிகள் ஒவ்வொரு இல்லமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். விரைவிலே ஆய்வு செய்கின்ற பணி முடிந்து, இன்னும் ஓரிரு வாரங்களிலே புதிய கார்டுகள் வழங்குகின்ற பணி தொடங்கப்பட விருக்கின்றது. அதிலே எந்தவிதமான தாமதமும் இல்லை. இதில் அடுத்த கட்டமாக, மாநகராட்சிப் பகுதிகளிலே முடித்து, நகராட்சிப் பகுதிகளிலே இந்தப் பணியைச் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு,



ஓரிரு வாரங்களில் அந்தப் பணியும் தொடங்கப்படவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கடைகள் சம்பந்தமாகச் சொல்கின்றபோது, இத்தனை கிலோமீட்டருக்குள்ளே ஒரு கடை என்ற விவரத்தைத் தந்திருக்கின்றார்கள். ஆனால், மலைப் பாங்கான பகுதிகளில், தற்போதுகூட ஐந்து கிலோ மீட்டர், ஆறு கிலோ மீட்டர் வரையிலும் சென்றுதான் உணவுப் பொருட்களை வாங்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை உள்ளது. அந்தப் பகுதிகளிலேயாவது, குறைந்தபட்சம் இரண்டு கிலோ மீட்டருக்குள்ளே ஒரு கடையை வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் போடப்பட்டிருக்கின்ற அரசாணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 500 கார்டுகள் இருந்தால் புதிய கடை என்றும், 500 கார்டுக்குக் குறைவாக இருந்தால்தான் பகுதிநேரக் கடைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும், அந்தப் பகுதி நேரக் கடையை தாய்க் கடையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே ஆரம்பிக்கலாம் என்றும் அரசு உத்தரவிலே இருக்கிறது. மலைவாழ் பகுதி மக்கள் மேலும் பயனடையத்தக்க அளவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சொல்லி, நிச்சயமாக அந்த மக்கள் பயனடையத்தக்க அளவிலே புதிய கடைகளைத் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நியாயவிலைக் கடைகளை ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்தால் பகுதி நேரக் கடைகள் ஆரம்பிக்கலாம் என்பதும், 500 கார்டுகளுக்கு மேல் இருந்தால் தனி கடைகள் ஆரம்பிக்கலாம் என்பதும் அரசாங்க ஆணை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்ற வேகத்திற்கு, நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிற வேகத்திற்கு, நம்முடைய அரசு இருக்கிற வேகத்திற்கு கீழே இருக்கிற அதிகாரிகள் இல்லையென்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பெரிய குற்றச்சாட்டு. எங்களுடைய மாவட்டத்தில் இப்படிப்பட்ட கடைகள் எதுமே துவக்கப்படவில்லை. காரணம், அந்தப் பொதுவிநியோகத்தில் கூட்டுறவு இலாகா வருகிறது. பொதுவிநியோக இலாகா வருகிறது. வருவாய்த் துறை வருகிறது, காவல் துறை வருகிறது. இந்த நான்கு இலாக்காக்களையும் ஒருங்கிணைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, இந்தக் கடைகளைத் திறப்பதற்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த அதிகாரமும் வழங்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும்கூட என்னுடைய மாவட்டத்தில் இன்னும் ஒரு கடைகூட துவக்கப்படவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும்...

*(முற்பகல் 10-10)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினா சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தாக்கீது அனுப்பி, இந்த 2 கி.மீ. தொலைவிலே இருக்கக்கூடிய துணைக் கடைகளும், 500 கார்டுகளுக்கும் மேலே இருக்கக்கூடிய பகுதிகளுக்கு தனிக் கடையும் ஆரம்பிப்பதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து சொல்வது எனக்குக் கொஞ்சம் புதிதாக இருக்கிறது. தினமும் அவர்கள் என்னைச் சந்திக்கிறார்கள். அவருடைய பகுதியிலே இதுபோன்ற பிரச்சினை இருக்கிறது என்று சொல்லி இருந்தால், உடனடியாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியருக்கோ அல்லது அங்கு இருக்கின்ற இணைப் பதிவாளருக்கோ ஒரு குறிப்பிட்ட கடையைப் பிரிக்க வேண்டும் அல்லது புதிய இடத்திலே கடையை ஆரம்பிக்க வேண்டுமென்று மனு அளித்தால் அதன்மீதான நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 675, திரு. கே. மணிவர்மா. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**675 —**

## குப்பந்தாங்கலில் கூட்டுறவு நியாயவிலைக் கடை

***4180 — திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, குப்பந்தாங்கல் கிராமத்தில் கூட்டுறவு நியாயவிலைக் கடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட இதே கேள்விக்கு 'இல்லை' என்று பதில் கூறினேன். ஆனால் இப்போது அந்தப் பகுதியிலே கடை திறப்பதற்கான அரசு உத்தரவு தரப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய கடை திறக்கப்படும் என்று புதிய பதிலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பதிலைச் சொன்னதற்குப் பிறகு துணை வினா எதற்கு?

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தண்டராம்பட்டு, பவுத்திரம், மலையனூர் சிக்கடி போன்ற இடங்களிலுள்ள கடைகளை இரண்டாகவும், கல்லேரி, ஏந்தல், இராதாபுரம், பீமரப்பட்டி போன்ற பகுதிகளில் பகுதி நேர கடைகளை ஏற்படுத்துவதோடு கூட்டுறவுக் கடைகளை இரண்டாகப் பிரித்ததைப்போல பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கடையைப் பற்றி மட்டும் கேளுங்கள், மற்றவற்றைக் கேட்க விடமாட்டேன். நன்றி என்று சொல்லிவிட்டு உட்கார வேண்டியவர், எதை எதையோ கேட்கிறீர்களே? சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. கே. மணிவர்மா:** 15, 20 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை இரண்டாகப் பிரிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்று முன்தினம் இக்கோரிக்கையை என்னிடம் தந்தார்கள். அது பதிவாளருக்கு அனுப்பப்பட்டு அதைப் பிரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்வதற்காகத்தான் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது என்பது உறுப்பினர் அவர்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 676. திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**676—**

### அரியூர் கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்துதல்

***2526—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தாலுக்கா, அரியூர் கூட்டுறவு நூற்பாலை நலிவடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நவீனப்படுத்த அரசு சிறப்பு நிதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எல்லா 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் ஒட்டு மொத்தமாக உதவித் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. அது செயல்படும்போது, அரியூர் ஆலையும் பயன்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடி இருக்கக்கூடிய ஆலைகளை எல்லாம் திறப்பதுதான் இந்த ஆட்சியினுடைய கொள்கை என்று சொல்லி, பல ஆலைகளைத் திறக்கின்ற இந்த அரசு எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மட்டும் டிசம்பர் 6-ஆம் தேதி மூடிவிட்டது. 15 கோடி ரூபாயை நலிந்த கூட்டுறவு ஆலைகளுக்காக, போன பட்ஜெட்டிலே, 9 மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வர்



1997 ஏப்ரல் 25]

அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படி இருந்தும்கூட அந்தப் பணம் என்னுடைய அரியூர், கூட்டுறவு நூற்பாலைக்கு ஏன் வழங்கப்படவில்லை? அந்தப் பணம் வழங்கப்பட்டு இருந்தால் அந்த ஆலை மூடப்பட்டு இருக்காது, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இன்று நட்டாற்றிலே விடப்பட்டிருக்க மாட்டார்கள். மானியக் கோரிக்கையின் விவாதத்திலே பதில் அளிக்கிறபோது கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே வாரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். உங்களை மானியக் கோரிக்கையில் பேசவா அழைத்து இருக்கிறேன்? ``முதலமைச்சர் ஒதுக்கிய பணத்தை எங்களுடைய ஆலைக்குக் கொடுக்கவில்லை`` என்பது தானே உங்களுடைய கேள்வி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு ஆலைகளைத் திறப்பதில், ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு சங்கடமான, பொருளாதார ரீதியான சிக்கல்கள் இருக்கின்றன. அரியூர் ஆலையைப் பொறுத்தவரையில், ஓர்க்கிங் கேப்பிடல்-க்கு பணம் வேண்டும், இயந்திரங்கள் நிர்மாணம் செய்யப்படாமல், பழைய ஆட்சியில் தொழிலாளர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்ட காரணத்தால் வாலண்டரி ரிட்டையர்மெண்ட் ஸ்கீம் என்ற அடிப்படையில் ஒரு பகுதியில் சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அதையொட்டி Statutory dues என்று சொல்லக்கூடிய அளவிற்கு, சட்டபூர்வமான கடன் குறித்து மற்ற அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

முற்பகல் 10-15

அதேபோல, Maintenance என்ற அடிப்படையில் அதற்கும் ஒருதொகையை ஒதுக்கவேண்டும். இதுபற்றியெல்லாம் அரசு தரப்பிலே தெளிவாக முடிவு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த 15 கோடி ரூபாயில், 3 கோடி ரூபாய் போக, மீதியுள்ள 12 கோடி ரூபாயில் அரியூர் ஆலைக்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாயை ஒதுக்குவது என்று அரசு தரப்பில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, Statutory dues என்ற அளவில் அதிகாரிகளோடு பேசி தவணை முறையைப் பெறுவதற்கும், Voluntary Retirement Scheme-ல் வெளியே செல்பவர்களுக்குப் பணத்தை எப்படி அளிப்பது என்பதற்காக தொழிலாளர்களிடம் பேசுவதற்கும், கடந்த 21-4-1997 அன்று எடுத்த

முடிவையொட்டி, இப்பொழுது பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அரசு தரப்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1½ கோடி ரூபாய் அளித்தால் அதைச் செயலாற்ற இயலும் என்ற ஒரு கணக்கு வந்திருக்கிறது. Voluntary Retirement Scheme-ல் வெளியே செல்பவர்களுக்கு மூன்று தவணையாகவோ அல்லது நான்கு தவணையாகவோ பணத்தைக் கொடுக்கலாம் என்ற சூழ்நிலை இருப்பதால், அவர்களோடும் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. Statutory dues என்ற வகையில், சட்டபூர்வமாக நாம் அதற்குத் தவணை கேட்கவேண்டிய நிலை இருப்பதால், அதுபற்றியும் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. எனவே, அரசு தரப்பிலே 1½ கோடி ரூபாய் என்ற அளவில் அதற்கு அளிக்க இயலும் என்ற தெளிவான முடிவு எடுக்கப்பட்டு இப்பொழுது பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புவதெல்லாம், டிசம்பர் 6 ஆம் தேதி முடிய அந்த ஆலையை எப்பொழுது திறக்கப்போகிறார்கள் என்பதுதான். மானியக் கோரிக்கையின்போது ஒரு வார காலத்திற்குள் அந்த ஆலை திறக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று போய்க் கொண்டே இருப்பதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கோபமாகப் பேசாதீர்கள். அமைதியாகப் பேசுங்கள் *(சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கிய பிறகும்கூட, பேச்சுவார்த்தை என்ற அளவிலேயே இருக்கிறது. எப்பொழுது அந்த ஆலையைத் திறக்கப் போகிறார்கள். என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இன்றே முடிவு எடுத்து, குறிப்பிட்ட தேதியில் ஆலை திறக்கப்படும் என்ற செய்தியையாவது அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேதியைக் குறிப்பிட்டுச் சொல்லி ஒரு உறுதிமொழியைத் தருவதற்கு என்னால் இயலாது. ஏனென்றால், இதில் விற்பனை வரி மற்றும் சேமநல நிதி ஆகிய அதிகாரிகளோடும் பேசி முடிவு எடுக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, இவைகளையெல்லாம்



முறைப்படுத்துவதற்குக் குறைந்தபட்சம் 10,15 தினங்களாவது ஆகும். தொடர்ந்து 21-4-1997 லிருந்து பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. இதற்காக வரதராஜன் தலைமையிலே அமைக்கப்பட்ட குழுவும் செயல்பட்டு வருகிறது. எனவே, நிச்சயம் ஆலை திறக்கப்படும் என்ற உறுதியை மட்டும் என்னால் தர முடியுமே தவிர, இந்தத் தேதியில் திறக்கப்படும் என்று deadline வைத்து என்னால் சொல்ல இயலாது. நான் மட்டும் முடிவு எடுக்கின்ற நிலையில் இல்லை. மற்ற துறைகளும் ஒப்புக் கொண்டு, இந்தத் தொகைக்கு ஈடுகட்ட முடியும் என்ற நிலை இருந்தால்தான் தொடர்ந்து அந்த ஆலையை இயக்க முடியும். இல்லையென்றால், மீண்டும் மூடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே, ஆலை திறக்கப்பட்டால் தொடர்ந்து ஓட வேண்டுமென்ற அடிப்படையில் தான்பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. நிச்சயம் திறக்கப்படும் என்ற உறுதியை மட்டும் தர முடியுமே தவிர, deadline வைத்து இங்கேயே அதைத் தெரியப்படுத்த என்னால் இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.ஞானசேகரன் உறுதிமொழிக் குழுத் தலைவராக இருக்கின்ற காரணத்தால், தேதி குறிப்பிட வேண்டுமென்று கேட்கிறார். அமைச்சர் உறுதிமொழி கொடுத்துவிட்டால், குழுவிலாவது போய் வலியுறுத்திக் கொண்டிருப்பார். அதனால்தான் கேட்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் தேதி கேட்டார். நான் சொல்கிறேன், ஜூன் 31ஆம் தேதி அந்த ஆலை திறக்கப்படும் *(பலத்த சிரிப்பு)*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் மாதம் 30 ஆம் தேதியோடு முடிகிறது. 31-ஆம் தேதி கிடையாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நானும் தெரிந்துதான் வேடிக்கையாகச் சொன்னேன். விரைவில் ஆலை திறக்கப்படும். ஞானசேகரன் கவலைப்பட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கோவிந்தன்.

**திரு. வி. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியூர் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நலனைக் கருதியாவது அவர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அம்மையார் ஆட்சியில் பல கூட்டுறவு நூற்பாலைகளை தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதுபற்றிய விவரம் அரசுக்கு வந்துள்ளதா? அதன்மீது நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல்10-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எந்த முடிவும் இந்த அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பாலைக்கு 50 இலட்சம் ரூபாய் மட்டுமே அமைச்சர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். மற்ற ஆலைகளுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியதுபோல, இந்த ஆலைக்கும் ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலைக்கு 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கினால் முறையாகச் செயல்பட முடியும் என்ற கணக்கைப் போட்டுத்தான் அதற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் மேலூரிலுள்ள கூட்டுறவு நூற்பாலை மின் கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. அது அரசின் கவனத்திற்கு வந்ததா? மின் பாக்கி கட்டப்பட்டுவிட்டதா? ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற ஆலைகளிலே மேலூர் ஆலையும் ஒன்று. நான் கடந்த மானியக் கோரிக்கையிலே மேலூர் ஆலையையும், சாரம் ஆலையையும் பற்றித்தான் கவலையோடு பல கருத்துக்களை இங்கே தெரிவித்தேன். மேலூர் ஆலையை விரைவிலே திறப்பதற்காக நாங்கள் இப்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலை பற்றிக் கேள்வி வந்தாலே 'நலிவுற்ற' என்ற வார்த்தையும் வந்துவிடுகிறது. நூல் என்ற காரணத்தினாலே மெலிந்து, நலிந்து விடுகிறதோ என்பது இங்கே கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே 18 நூற்பாலைகள் சம்பந்தப்பட்ட கருத்துக்களை ஒன்று திரட்டி, நம்முடைய மாநில அரசு ஒரு நல்ல முடிவினை எடுத்து நூற்பாலைகள் இலாபகரமான முறையிலே இயங்குவதற்கான தனித்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே.' பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நலிவடைந்த ஆலைகளை மீண்டும் திறப்பது என்ற அடிப்படையிலேதான் கடந்த 24-3-1997-ல் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரைத் தலைவராகவும், நிதித் துறை கூடுதல் செயலாளர், தமிழ்நாடு மாநில தலைமை வங்கியினுடைய முதன்மைச் செயல் அலுவலர், ஓய்வு பெற்ற, மதிப்புறு அறிவுரையாளர் திரு. ஆர். வரதராஜன், ஐ.ஏ.எஸ்., மற்றும் அரசு துணைச் செயலாளர், கைத்தறி, கைவினைப் பொருள்கள், துணிநூல் மற்றும் கதர் துறைத் துணைக் குழு உறுப்பினர் ஆகிய ஐவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆலோசனை அடிப்படையில் நான் தெரிவித்த கருத்துக்கள் எல்லா ஆலைகளுக்கும் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 677, திரு. டி. மணி, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 25

677—

**அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு போனஸ் உயர்த்துதல்**

***1799—திரு. டி. மணி:**

*மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படும் அரசு ரப்பர் கழகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படும் அரசு ரப்பர் கழகத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு உரிய போனஸ் வழங்கப்பட்டு வருவதால் அதனை உயர்த்தும் திட்டம் தற்போது எதுவுமில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்குகின்ற போனஸ் அளவு குறைவு என்பது என்னுடைய கருத்து. அந்த மாவட்டத்தில், தனியார் துறையிலே இருக்கின்ற ரப்பர் முதலாளிகள் 20 சதவீத போனசும், அதற்கு மேலே 1,2,3 என்ற சதவிகித அளவிலே எக்ஸ்-கிரேசியாவும் வழங்குகிறார்கள். அரசு ரப்பர் கழகம் இலாபகரமாக நடக்கவில்லை என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது. அந்த வாரியத்தில் இருக்கின்ற கமிட்டியிலே மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டு, மாதந்தோறும் கண்காணிப்புக் கூட்டங்கள் நடத்தினால், இன்றைய சூழ்நிலையில் அந்தக் கழகத்தினை இலாபகரமாக இயக்க வழிவகை ஏற்படும். அந்த நடவடிக்கையை எடுத்தால் அதிகப்படியான போனஸ் வழங்குவதற்கான ஒரு வாய்ப்பும் இருக்கும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96ஆம் ஆண்டுக்கு ரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு 8.33 விழுக்காடு போனசும், 9.67 விழுக்காடு கருணைத் தொகையும், ஆக 18 சதவீத போனஸ் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அறிவுரைக்கிணங்க 20 இலட்சம் ரூபாய் கூடுதலாக, போனசுக்காக கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 678, திரு. வி. திருஞானசம்பந்தம். மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

678—

**கால்நடை கிளை நிலையம் அமைத்தல்**

***7552—திரு. வி. திருஞானசம்பந்தம்:**

*மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு கிராமத்தில், கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 679, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

679—

**தொழிற்கூடங்களை சிறுதொழில் முனைவோருக்கு விற்பனை செய்தல்**

***6528—திரு. உ. திசைவீரன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பரமக்குடி தொகுதி, அரியனேந்தலில் நீண்ட காலமாக திறக்காமல் இருக்கும் தொழிற்கூடங்களை சிறுதொழில் முனைவோருக்கு குறைந்த விலையில் விற்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[1997 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். நானும் கண்டிப்பாக இதை விட்டுவிடப் போவதில்லை. பரமக்குடி தொகுதி தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதி. தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆனாலும், சிட்கோ தொழிற்சாலைகளை மற்ற இடங்களிலே பார்க்கின்றபோது, தொழிற்கூடங்களைக் கட்டி வைத்துக் கொண்டுதான் தொழில் முனைவோர்களைத் தேடுவார்கள். ஆனால், பரமக்குடியைப் பொறுத்தவரையில், முன்பணம் பெற்றுக் கொண்டுதான் 13 தொழிற் கூடங்களைக் கட்டியிருக்கிறார்கள். எனவே, அந்தத் தொழில் முனைவோர்கள், தாங்கள் கட்டிய முன்பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, அல்லது கூட்டு வட்டி, மொத்த வட்டி என்று கணக்குப் பார்க்காமல், பொது ஏல முறையிலே அந்தத் தொழிற்கூடங்களை தொழில் முனைவோர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கூடங்களுக்குரிய முன்பணம் முழுவதையும் செலுத்தாத காரணத்தினால்தான், அவர்களுக்குத் தொழிற்கூடங்கள் வழங்கப்படவில்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் விட்டுவிடப் போவதில்லை என்று. அவர், குறைந்த விலையிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஆனால், அரசினால் குறைந்த விலையில் கொடுக்க இயலாது. அடிப்படை விலை என்று ஒரு விலையை நிர்ணயம் செய்து, 'அப்-செட் ப்ரைஸ்' என்ற அடிப்படை விலையை நிர்ணயம் செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கேற்ப ஏலத்தில் விடுவதற்கு அரசு பரிசீலித்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்கள், சென்ற ஐந்தாண்டு காலத்தில் இதுபோன்று ஒருசில இடங்களில் தொழிற்கூடங்களைக் கட்ட ஆரம்பித்து, கட்டுமானப் பணிகளையெல்லாம் அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்து,



1997 ஏப்ரல் 25]

இன்றைக்கு அவை கட்டி முடிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. குறிப்பாக, பர்கூரிலே ஒரு தொழிற்கூடத்தைக் கட்ட ஆரம்பித்து, அது கட்டி முடிக்கப்படாத நிலையிலேயே அன்றைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு கூடங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுகின்ற பணிகள் இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றன. காரணம், அந்தப் பணி அவர்களுடைய கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, தயவுகூர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, அவற்றைக் கட்டுகின்ற பணியினை ஆரம்பித்து, கட்டி முடித்து, தொழில் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, கட்டுகின்ற பணி எங்கேயும் நிறுத்தப்படவில்லை. ஏற்கெனவே கட்ட ஆரம்பிக்கப்பட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அப்படி, குறிப்பிட்டதொரு இடத்தில் பணி நிறுத்தப்பட்டிருந்தால், பர்கூரில் பணி நிறுத்தப்பட்டிருந்தால், உறுப்பினர் தனிக்கேள்வி கொடுத்தால், அதற்குரிய விளக்கத்தினைத் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 680, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**680—**

## மலைப்பகுதி இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்

***2918—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம், அந்தியூர் ஒன்றிய மலைப்பகுதிகளில் வசிக்கும் மலையாளிகள், நரிக்குறவர், லம்பாடிகள், குரும்பர், குரும்பா, குருபர் மற்றும் படகர் ஆகிய இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் வசிக்கும் மலையாளிகள், நரிக்குறவர், லம்பாடிகள், குரும்பர், குரும்பா, குருபர் மற்றும் படகர் ஆகிய இனத்தவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மைய அரசுக்கு இவ்வரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், 25-10-1996-இல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையாளிகள் சமூகத்தினர் தமிழ்நாடு முழுவதும் பழங்குடியினர் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், பெரியார் மாவட்டம், சத்தி, கடம்பூர் மலையிலும், அந்தியூர் தேவர் மலையிலும், சம்புவராயர் மாவட்டம் ஏலகிரி, ஜவ்வாது மலைகளிலும் வசிக்கின்ற மலையாளி இன மக்களுக்கு பழங்குடி மக்கள் என்று சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. அதேபோன்று, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள், தங்களுடைய சாதிப் பெயர்களைச் சொல்கின்றபோது, பேச்சு வழக்கின் அடிப்படையில் சொல்லி விடுகின்றார்கள். அப்படிச் சொல்வதை அதிகாரிகளும் பதிவு செய்துவிடுகின்ற காரணத்தினால், குரும்பர் என்பதைக் குரும்பா என்று சொல்லிவிட்டால் அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் கொடுப்பதில்லை. இதுபோன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக, பழங்குடியினர் பட்டியலில் இருக்கின்ற சாதிகளின் அடிப்படையில், பேச்சு வழக்கில் சொல்லிய சாதிப் பெயர்களைப் பதிவு செய்திருந்தாலும், அவர்களுக்கு உரிய முறையில் சாதிச் சான்றிதழ், இடையூறின்றிக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணைப் பட்டியலை, மத்திய அரசு வெளியிட்டபடிதான், அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்க முடியும். மேலும், ஆங்கிலத்தில் சொல்லும்போது, 'குரும்பா' என்றும், சொல்லும்போது, 'குரும்பர்' என்றும் வழக்கு இருக்கிறது. தமிழில் 'குரும்பா' என்றாலும், 'குரும்பர்' என்றாலும் ஒன்றுதான் என்பதற்கு, மத்திய அரசுக்கு விளக்கம் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பதில் வந்தவுடன், 'குரும்பா'-க்கும் 'குரும்பர்'-க்கும் ஒரே சலுகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. சுப. தங்கவேலன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. சுப. தங்கவேலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 21 முதல் 23 வரையிலான, 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 17 முதல் 19 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வைத் துறை—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 15 — காவல்துறை—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகள்மீது, தொடர்ந்து விவாதம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், நேற்றையதினம் பேசிய தனது பேச்சை முடிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த பிறகு, அவரை மீண்டும் பேச அழைப்பது முறையல்ல என்று கருதுவதால், திரு. ஈஸ்வரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்று 10 மாதங்களுக்குமேல் ஆகின்றது. இந்த 10 மாதங்களுக்கு முன்னால், இதற்கு முன்னாலிருந்த அரசு, சென்னை தலைநகரத்தில் மட்டும், எந்தமாதிரி அதன் ஆட்சி நடைபெற்றது என்பது, முன்பிருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், காவல்துறையைச் சிறப்பான முறையில் முடுக்கிவிட்டு, நல்லமுறையில் பணியாற்ற வேண்டுமென்று, காவலர்களுக்கு உத்தரவு வழங்கப் பட்டிருக்கிறது. ஆனால், முந்தைய அரசு சென்னையில் இருக்கக்கூடிய காவல்துறைக்கு ஒரு கடுமையான உத்தரவு வழங்கி, சட்டமன்ற உறுப்பினர்களேகூட தலைமைச் செயலகத்திற்குப் போகமுடியாத சூழ்நிலைதான் இருந்தது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். 10 நிமிடம், 15 நிமிடம் என்று சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசு அதிகாரியாக இருந்தாலும் சரி, அல்லது மருத்துவமனைக்குப் போகக்கூடிய நபர்களாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு இடத்திலும் காவல்துறையினர் மக்களைத் தடை செய்து அதனால் 15 நிமிடங்கள், 20 நிமிடங்கள் காலதாமதம் ஏற்பட்ட நிலைமைகள் எல்லாம் உண்டு. இன்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அந்த நிலைமைகள் எல்லாம் மாறி மாண்புமிகு முதல்வர் அவர்கள் போகும்போது எந்த இடையூறுமே இல்லை. அவர் பின்னால் இரண்டு சக்கர வாகனங்கள், மற்ற அனைத்து வாகனங்களுமே காலதாமதம் இல்லாமல் செல்ல முடிகிறது. எனவே அதை அனைத்து மக்களும் பாராட்டுகிறார்கள். நானும் பாராட்டுகிறேன். ஏற்கெனவே இருந்த நிலைமைகள் மாறியிருக்கின்றன.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதுமட்டுமல்லாமல் காவல் துறையைப் பொறுத்த அளவில் பல மாவட்டங்களில், பல இடங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் டிவிஷன்களிலும், தாலுக்காகளிலும் கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய காவலர்களிலிருந்து ஆய்வாளர்கள் வரை இன்னும் திருந்தவில்லை. அதை எல்லோரும் நன்கு அறியமுடியும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 10000 காவலர்களை நியமனம் செய்வதற்கான ஆணையிடப்பட்டு நியமனமும் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-35

அதுமட்டுமல்லாமல் 5000 பெண் காவலர்களையும் நியமனம் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் காவலர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளம் போதுமானதாக இல்லை. சாதாரண காவலர்கள், தலைமைக் காவலர்கள், துணை ஆய்வாளர்கள் போன்றவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிற சம்பளம், சாதாரண இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தில் ஒரு பகுதி தான் இருக்கமுடியும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே அவர்களுக்குக் கூடுதலாக சம்பளம் வழங்கினால் சில தவறுகள் நடைபெறுவதைத் தடுக்க முடியும்.



அதுமட்டுமல்லாமல் தென் மாவட்டங்களில் எப்போதும் சாதிக் கலவரங்கள் நடைபெறுகின்றன. சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் அங்கு பல ஆண்டுகளாக கலவரங்கள் நடைபெறுகின்றன. அதுபோன்ற வன்முறையைத் தூண்டக்கூடியவர்கள், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அரசுத் துறை அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது சாதிச் சங்கத்தைச் சேர்ந்த எந்த சாதிச் சங்கத்தின் தலைவராக இருந்தாலும் சரி, சாதியினுடைய உணர்வைத் தூண்டிவிட்டால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது அவரைக் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் போட வேண்டும் என்று நான் மிக அன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியாக இருக்கக்கூடிய தென்மாட்டங்களில் சாதியின் பெயரால் அரசியல் இலாபம் தேடவோ அல்லது அதற்குப் பின்னணியாய் இருந்து ஒரு சமுதாயத்திற்கும், இன்னொரு சமுதாயத்திற்கும் மோதலை ஏற்படுத்தி, பல்வேறு உயிர்ச் சேதங்களுக்கும், பல்வேறு பொருட் சேதங்களுக்கும் காரணமாக இருப்பவர்களை அனுமதிக்கக்கூடாது. அதற்குப்பிறகு அவை சம்பந்தப்பட்ட வழக்குகளைச் சரி செய்ய வேண்டும் என்பதற்காக, பாதிக்கப்பட்ட மக்களிடமே பணத்தை வசூல் செய்வதையும் நான் பார்க்கிறேன். இந்தமாதிரி நிலைமைகளில் அப்பாவி ஏழை எளிய மக்களை ஆட்படுத்துபவர்கள் அவர்கள் எந்த சாதிச் சங்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, எந்த அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, எந்த அரசுத் துறை அதிகாரியாக இருந்தாலும் சரி, அவர்களில் யார் வன்முறையைத் தூண்டிவிட்டாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி தமிழகத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் காவல் நிலையங்களில், கிராமங்களுக்கு இருக்கக்கூடிய முக்கிய பெரிய மனிதர்கள் சொன்னால், அங்கே இருக்கக்கூடிய ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, டி.எஸ்.பி. ஆக இருந்தாலும் சரி, ஊரிலிருக்கக்கூடிய சாதியினுடைய பெரியவர்கள் சொன்னால் அதைக் கேட்டு, உடனடியாக சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய நிலை இருந்தது. அந்தப் பெரிய மனிதர்களுக்கு ஒரு மரியாதை கொடுக்கக்கூடிய நிலைமை அப்போது இருந்தது. ஆனால் அந்த நிலைமை இப்போது மாறி, காவல் நிலையங்களில் சாதாரண கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கள்ளச் சாராயம் விற்கக் கூடியவர்கள்,

கோயில்களில் திருடக்கூடியவர்கள், பிட்பாக்கெட் அடிக்கக்கூடியவர்கள் எல்லாம் பெரிய மனிதர்களாக இருக்கிறார்கள் அரசியல்வாதிகள் சொன்னால் நடைபெறுவதில்லை. அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரிய மனிதர்கள் சொன்னால் நடைபெறுவதில்லை. ஆனால் இவர்கள் அங்கே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் எஸ்.ஐ. முன்னால் அமர்ந்துகொண்டு, சிகரெட் கொடுங்கள் என்று வாங்கி, எஸ்.ஐ. மேலேயே ஊதுகிறார்கள். இதுதான் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இதுதான் தமிழ்நாட்டில் இப்போது இருக்கக்கூடிய நிலைமை.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல, முந்தைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மா ஒரு உத்தரவைப் போட்டார்கள். பெண்கள் எல்லாம் மிகவும் அவதிப்படுகிறார்கள். பெண்களுடைய நலனை கருதி நான் முதல் கையெழுத்தாக இடுகிறேன் என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு பாருங்கள், காவல் நிலையங்கள் பூராவிலும் அவர்களே ஏலம் விட ஆரம்பித்துவிட்டார்கள்— முந்தைய அரசின் 5 ஆண்டு காலத்தில்— அரசாங்கம் எவ்வளவு ஏலம் விட்டதோ அதைவிட கூடுதலாக முந்தைய ஆட்சியாளர்கள் 5 ஆண்டு காலத்திலே ஏலம் விட்டார்கள். முந்தைய அரசு 500 கோடி ரூபாய்க்குமேல் ஏலம் விட்டிருந்தாலும், அதற்கு மேல் இவர்கள் ஏலம் விட்டார்கள். வார்டு வாரியாக பிரித்து ஏலம் விட்டார்கள். சாராயத்திற்கு வார்டு வாரியாக ஏலம் விட்டார்கள். வார்டு வாரியாக என்னென்ன கிராமங்கள் இருக்கின்றன. டவுன் பஞ்சாயத்தில், நகராட்சியை எடுத்துக் கொண்டு அவர்களுக்கு இந்த வார்டு, இவர்களுக்கு இந்த வார்டு என்று அவர்களே பிரித்து விட்டார்கள். மன்னர்களுக்கு கிஸ்தி கட்டுவதுபோல் மாதா மாதம் காவல் நிலையங்களுக்கு கிஸ்தி கட்டினார்கள். இது நடைமுறையில் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது.

அதுமட்டுமல்ல, தென் மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் தென்காசியிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்கும் எங்கள் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளது. தென்காசி-மதுரை ரோட்டிலிருந்து பாரஸ்டுக்கும். மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடையே 5 கிலோ மீட்டர், 7 கிலோ மீட்டர் தூரம்தான் மலை அடிவாரத்தில் இருந்து இருக்கும். அந்த மலை அடிவாரத்தில் நல்ல குடி தண்ணீர் கிடைக்கும். வேலம்பட்டை அங்கே நன்றாக கிடைக்கும். பாரஸ்டிலே விறகு கிடைக்கும். கழிந்த வெல்லம், உற்பத்தி செய்யப்படுகின்ற வெல்லம் மிகக் குறைந்த



விலையிலே கிடைக்கும். அதை அங்கிருந்து வாங்கிக் கொண்டு செல்லுவார்கள். அங்கேயே காட்டில் சாராயம் காய்ச்சுவார்கள். அங்கே உற்பத்தி செய்யப்படும் சாராயம், திருவள்ளுவர் வண்டி, பாண்டியன் போக்குவரத்து வண்டி போன்றவற்றில் பாண்டிச்சேரி, கேரளா ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படும். அதில் போலீசும் உடந்தை. போலீஸ் மட்டும் உடந்தை அல்ல, அங்கே இருக்கக்கூடிய வனத் துறை அதிகாரிகள் இருக்கிறார்களே அவர்களுக்கும் அதில் பங்குண்டு. ஏன் பங்கு உண்டு என்றால்— வனப் பகுதியில் சாராயத்தை பெரிய பெரிய டிரம்களில் தொழிற்சாலையில் காய்ச்சுவதுபோல் காய்ச்சுவார்கள்—வனத்துறை அதிகாரிகள் அங்கே சென்றவுடன் அங்கே இருக்கக்கூடிய மான்களை அடித்து, கறி எடுத்து, சாராயம் அருந்தி அங்கே ஓய்வெடுத்துவிட்டு வருவார்கள். இதனால் வனப்பகுதி அழியக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுதான் உண்மையில் நடந்தது.

இந்த சாராயம் உற்பத்தி செய்து எப்படி வெளியே வருகிறது என்றால், தென்காசிக்கு வருகின்ற ரோட்டிற்கு வருவார்கள், டிரைவர்களுக்கு சைகை காட்டுவார்கள். டிரைவர்கள் சைகை கிடைத்த உடனே பஸ்ஸை நிறுத்துவார்கள். சாதாரண பயணிகள் நிறுத்தச் சொன்னால் நிறுத்தமாட்டார்கள். ஆனால் இவர்களது சைகை கிடைத்த உடனே நிறுத்திவிடுவார்கள். அப்படி நிறுத்தப்பட்டவுடன் டியூபுகளில் அடைக்கப்பட்டிருக்கும் சாராயத்தை வண்டிகளில் போட்டு அனுப்புவார்கள். டிரைவருக்கு 2 பாட்டில், கண்டக்டருக்கு 2 பாட்டில் என்று கொடுப்பதோடு, ரூபாயையும் கையில் கொடுப்பார்கள். அந்த சாராயம் சென்னை, பாண்டிச்சேரி என்று பல மாநிலங்களுக்கு போய்க்கொண்டிருக்கும். அதனுடைய உற்பத்திச் செலவு ஒரு பாட்டிலுக்கு 10 ரூபாய், 15 ரூபாய்தான் இருக்கும். ஆனால் இங்கே வரும்போது 4 பங்கு, 5 பங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. எனவே, கள்ளச்சாராயத்தை நாம் ஒழிப்பது என்பது பெரிய கஷ்டம், அமல்படுத்த முடியாது. இருப்பினும் ஓஸ்தி பிராந்தி மற்றும் பீர்களுக்கு ஏலம் விட்டிருக்கிறீர்கள். அது தாராளமாக நடந்து கொண்டிருக்கிறது. பிறகு மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது எப்படி சரியாக இருக்க முடியும்? அதனால் நான் சொல்லுகிறேன் நீங்கள் பார்களை ஓப்பனாக விட்டுவிடுங்கள். குடிப்பவர்கள் சரியாக அமர்ந்து பிரச்சினை இல்லாமல் குடித்துவிட்டுப் போகட்டும். அதிலும்கூட 10 மணிக்குமேல் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறீர்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்றால் 24 மணி நேரமும் இருக்கட்டும். நீங்கள் 10 மணி வரை என்று விட்டால் காவலர்களுக்கு அதற்கு ஒரு படி

கொடுக்க வேண்டும். இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. அதே நேரத்தில் நீங்கள் கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை நிச்சயமாக ஏலம் விடுங்கள் அதுதான் நியாயம், அதனால் அரசுக்கு சுமார் ரூ. 500 கோடி வரையில், ரூ. 600 கோடி வரையில் வருமானம் கிடைக்கும். சமூக விரோதிகள் அந்தப் பணத்தை தட்டிச் செல்லுகிறார்கள். இந்தியாவில் பல மாநிலங்களில் காங்கிரஸ் ஆளுகின்ற இடங்களில்கூட கள்ளுக்கடைகளை ஏலம் விட்டிருக்கிறார்கள். காந்தியின் வழியைச் சொல்லிக் கொண்டிருந்தால் நாடு சரியாக இருக்காது. நான் மனதில் இருக்கும் உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அரசாங்கத்திற்கு சுமார் 500 அல்லது 600 கோடி ரூபாய் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பணம் பூராவும் சமூக விரோதிகளின் கையிலேதான் போய்ச் சேருகிறது என்பதை பார்த்து செய்தால் இது தமிழ்நாட்டிற்கு ஒரு வளர்ச்சியான திட்டம்....

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** துணைத் தலைவர் அவர்களே, தொகுதிப் பிரச்சினையைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஆகையினால் இரண்டு நிமிடத்தில் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசிவிடுகிறேன், நான் இன்னும் தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசவில்லை, பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே, இந்த விஷயம் குறித்து நான் முந்தைய அரசு இருக்கும்போது கூட தைரியமாகச் சொன்னேன், ஏனென்றால், ப்ராப்ளம் அந்தமாதிரி இருக்கிறது. இந்த வன்முறைக் கலவரங்கள் போன்றவைகள் எல்லாம், இதன் மூலமாகத்தான் வருகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை தயவுதாட்சண்யமின்றி பரிசீலித்து பார்க்க வேண்டும். தைரியமாக ஏலம் விடுங்கள்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மூன்று அணைத் திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 1989-இலேயே பொதுப் பணித் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்றிருந்த நேரத்திலே நேரடியாக உள்ளாறு போன்ற அணைத் திட்டங்களைப் பார்த்தார்கள். அதற்குப் பிறகு முந்தைய அரசில் அதனை 5 வருடங்களாக கிடப்பில் போட்டு விட்டார்கள். இப்போது அந்தத் திட்டத்தினை எடுக்க வேண்டும் என்று நான் நேரடியாகச்



சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூட மனு கொடுத்திருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**திரு. ரா. ஈஸ்வரன்:** தொகுதிப் பிரச்சினையை.. ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு 10 நிமிடம் ஒதுக்கப்பட்டிருந்தது, அதற்கு மேலும் 3 நிமிடங்கள் பேசி விட்டீர்கள், அதனாலே அனுமதிக்க முடியாது. உட்காருங்கள், திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், மிக அழகாக, அருமையான கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொன்னதனுடைய நோக்கம், எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று நினைத்தாலும்கூட, எவ்வளவோ பிரச்சினைகள் வந்துவிடுகின்றன, அதை ஒழிக்க முடியவில்லையே, இதற்காக சாராயக் கடைகளைக்கூட ஏலம் விட்டுவிடலாமே என்கிற அந்த அடிப்படையிலேதான், அவர் சொன்னார். ஆனால் முழுவதுமாக மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும், அது முடியாத பட்சத்தில் கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்பதுதான் அவருடைய கருத்தேயொழிய, அது தமிழ் மாநிலக் காங்கிரஸ்சினுடைய கருத்தாக அல்ல, அதை அவருடைய சொந்தக் கருத்தாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெளிவுரை கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய சொந்தக் கருத்துதான். ஆனால் சொந்தக் கருத்து என்றாலும் நியாயம் என்ன என்பதை நான் சொல்லியாக வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**திரு. ரா. ஈஸ்வரன்:** கொஞ்சம் நேரம் கொடுங்கள், தொகுதி பிரச்சினையைப் பற்றி பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Already the time allotted to you is over. please sit down (குறுக்கீடு) டைம் ஆகிவிட்டது, உட்காருங்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேச வேண்டும். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும். நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் மட்டுமல்ல, அதற்குப் பிறகும் தன்னுடைய வாழ்நாள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுடைய அடையாளத்தைக் காட்டிக் கொள்ள வேண்டும். தாங்கள் இழந்த பெருமைகளையெல்லாம் மீட்டு எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தனி வாக்காளர் தேர்வு முறையை முன் வைத்தார்கள். ஆனால் அது பூனா ஒப்பந்தத்தின் காரணமாக மறுக்கப்பட்டு, இன்றைய இட ஒதுக்கீடு முறைகள் வந்தன. எதற்காக என்றால் தாழ்த்தப்பட்ட மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படக்கூடியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். அவர்களுடைய இன்னல்களை சட்டமன்றத்தில், பாராளு மன்றத்திலே எடுத்துரைக்க வேண்டும். சட்டமன்றத்திலே, பாராளு மன்றத்திலே மட்டுமட்டுமல்லாமல், மக்கள் மத்தியிலும், மக்கள் மன்றத்திலேயும் போராட வேண்டுமென்பதற்காகத்தான் தேர்ந்தெடுக்கப் பட்டு அனுப்பினார்கள். அதற்காகத்தான் பாடுபட்டார்கள். எனக்கு ஒரு வேதனை, வருத்தம் அப்படி சட்டமன்றத்திலே தங்களுடைய சமுதாயத் தினுடைய எந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தோம் என்பதற்காக இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திற்குள் நுழைந்தார்களோ, அவர்கள் அந்தத் தாழ்த்தப்பட்ட, தான் பிறந்த சமுதாயத்திற்கு பாடுபடாமல், தன்னை வளர்த்துக் கொள்வதற்காக பாடுபட்டுக் கொண்டார்களே அவர்கள்தான் சமுதாய விரோதிகள். எனவே தான் பிறந்த சமுதாயத்தை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நேற்றைக்குக்கூட இப்படித்தான்..

**திரு. ரா. ஈஸ்வரன்:** கொஞ்சம், உட்காருங்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், உட்காருங்கள் என்று நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.



*முற்பகல் 10-50*

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தான் ஏதோ சமுதாயத்திற்குப் பாடுபடுபவர் போன்றும், மற்றவர்கள் எல்லாம் பாடுபடாதவர்கள் போன்றும் சொல்கிறார்கள். நான் 7-வது தடவையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். என் தொகுதி அரிசன மக்களும், சாதி இந்துக்களும் ஏழு முறை எனக்கு ஓட்டுப்போட்டு இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்களைப் போன்றவர்கள் சாதிக் கலவரங்களைத் தூண்டக்கூடிய செயல்களைச் செய்ததில்லை. அப்படிச் செய்தால், நான் முதல்வராக இருந்தால், தூக்கிலிட்டிருப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சாதி என்று சொல்லி, இன்றைக்கு நாட்டையே கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள் சில பேர்கள். நான் இந்தச் சாதி, இந்தச் சாதி என்று சொல்லி கொளுத்தி கொண்டிருக்கிறார்கள். நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, எனக்கு தந்தி ஒன்று வந்தது. மீனாட்சிபுரம் என்ற கிராமத்திலிருந்து, பள்ளர் கிராமத்திலேயிருந்து தந்தி வந்தது. 'DESTROYED PALLAR VILLAGE. PLEASE START IMMEDIATELY.' 19 கிராமங்கள் முழுமையாகக் கொளுத்தப்பட்டன. அதற்கு என்ன காரணம்? சிலபேர், தனிநபர்கள் பணம் வசூல் செய்வதற்காக அங்கே சென்று மக்களைத் தூண்டிவிட்டதனால் அப்படியெல்லாம் ஏற்பட்டது. இப்படி மக்களுடைய வாழ்க்கையைக் கெடுக்கக்கூடிய அளவிலே இன்று அவர்கள்தான் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, சாதிக் கலவரங்களிலே இறங்காமல் பணி செய்துகொண்டிருக்கிற எங்களைப் பார்த்து சமுதாயத்திற்குப் பாடுபடாதவர்கள்மாதிரி சொல்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அப்படிக் கண்டிப்பதோடு மட்டுமல்ல, என்னைப் போன்ற மூத்த உறுப்பினர்கள் எங்கே கலவரம் நடக்கின்றதோ அந்தப் பகுதிகளுக்கு ஓடுகின்றோம். அங்கே சென்று இரண்டு பிரிவினரையும் அணுகி சமாதானப்படுத்தி வைக்கின்றோம். அப்படிச் சமாதானப்படுத்துவதுதான் நம்முடைய கடமையேதவிர, ஒரு பகுதியினரைத் தூண்டிவிட்டு பணம் சம்பாதிப்பது முறையல்ல. அவர்களுக்கு எப்படிப் பணம் வருகிறது? சும்மா இருப்பவனுக்கு இவ்வளவு பெரிய கொடி எல்லாம் வந்திருக்கிறதே, அது எப்படி? அந்த மாதிரி சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, யார் கலவரத்தைத் தூண்டிவிடுகிறார்களோ, அது யாராக இருந்தாலும், அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தண்டனை கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** கொத்தடிமை வெளியிலே மாத்திரம் இல்லை, சட்டமன்றத்திலேயும் இருக்கிறார்கள் என்று இதிலேயிருந்து தெரிகிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொத்தடிமை என்கிறார்கள். யார் கொத்தடிமை? பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் Try to stand on your own legs என்று சொல்லுவார்கள், நாங்கள் எங்கள் காலிலேயே நின்று, எல்லோருடைய அன்பையும், அரவணைப்பையும் பெற்று, எல்லா சமுதாயத்தினருக்கும் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய எங்களைப் பார்த்து கொத்தடிமை என்று சொன்னால், சரியில்லை, யாரிடமாவது பணத்தைப் பறித்துக்கொண்டு, பணம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* கலகம் செய்யக்கூடியவர்கள்தான் கொத்தடிமை, ஒரு பகுதி மக்களைத் தூண்டிவிட்டு கலவரத்தைத் தூண்டுபவர்கள்தான் கொத்தடிமை. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**திரு. ரா. ஈஸ்வரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன், உட்காருங்கள், டாக்டர் கிருஷ்ணசாமி பேசட்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாகக் காவல் துறை மானியத்தில், காவல் துறை மானியத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்கள் எல்லாம் பேசப்படுகின்றன. சந்தோஷம். ஏனென்றால், ' ஆண்டான் நானாக இருப்பேன், அடிமையாக நீ இரு.' என்று ஆதிக்க சாதி சுபாவம் கொண்ட, மனப்பான்மை இருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கக்கூடியவன் நான். என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்லக்கூடிய கருத்து என்பது என்னுடைய கருத்தல்ல, லட்சோபலட்சம் மக்கள் இன்று நினைக்கக்கூடிய கருத்தைத்தான் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் புனிதமான அவையில், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, 'ஆண்டானாக நான் இருப்பேன், அடிமையாக நீ இரு' என்று சொல்லும் ஆதிக்க சாதி மனோபாவம் இருக்கின்ற வரையில், சமூக நல்லிணக்கம் என்பது வராது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. அந்த அடிப்படையில் நான் இந்த மன்றத்திலே சில கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கே கொள்கை விளக்கப் புத்தகத்தில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. 1959 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் பழங்குடியினர் சட்டம் ஆகியவற்றின்கீழ் 1995-ல் 846 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன என்றும் 1996 ஆம் ஆண்டில் 766 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றும் கூறப்பட்டிருக்கிறது. தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, வழக்குகள் முறையாகப் பதிவு செய்யப்படாததுதான் காரணம், அதனால்தான் வழக்குகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறதே தவிர, வழக்குகளின் தன்மை குறைந்துவிடவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

மேலும், இங்கே ஒரு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை கொடுத்த தகவலாகத்தான் அது இருக்கும் என்று கருதுகிறேன். 6-3-1996 அன்று மதுரையில் தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பு மாநாட்டில், ஊர்வலத்தில் சென்ற ஒரு பிரிவினர் முத்துராமலிங்கத் தேவர் சிலையைத் தாக்கினர் என்ற மிகத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடக்கவேயில்லை என்று அப்போது செய்தித்தாள்களில் வந்திருக்கிறது. ஒரு பிரிவினர் அந்தமாதிரி செய்யவேயில்லை. அன்றைய மறுநாள் காலையில் அந்தச் செய்தி செயற்கையாகப் பத்திரிகைகளிலே வந்தது என்பதை அன்றைய காவல் துறை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி, டி. கல்லுப்பட்டியிலே இரண்டு வகுப்புகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது என்பதுகூட தவறான தகவல். ஏனென்றால் அன்றைய பத்திரிகையில் எப்படி வந்தது என்றால், வருகின்ற வழியில் அன்றைய சபாநாயகர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களைத் தாக்கி, கோஷம் போட்டதற்காகவும், அதனால் தாக்குதல் நடந்தது என்றும்கூட சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் சொல்வதன் மூலமாக, புதிய ஒரு ஜாதிக் கலவரம் வருவதற்கு உறுதுணையாக இருந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

*முற்பகல் 10-55*

நேற்று, அன்புச் சகோதரர் திரு. சந்தானம் அவர்கள் கலவரங்கள் எல்லாம், வீரசிகாமணியில் சிலை உடைப்பு நடந்த பிறகுதான், கொடியங்குளத்தில் நடந்தது என்பதை நியாயப்படுத்தி பேசினார். வீரசிகாமணியில் சிலையை உடைத்தது சம்பந்தமாக, அன்றைய ஆட்சியிலிருந்து, இன்று வரை யார் சிலையை உடைத்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

*** திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். நான் அதை நியாயப்படுத்திப் பேசவில்லை. அதன் காரணமாகத்தான் தவறுகள் நடந்தன; அந்தத் தவறுகள் மீண்டும் நடக்கக்கூடாது; அப்படி தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்; அதற்கு ஒரு நீதி விசாரணைக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனுடைய தீர்ப்பை, முடிவை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்; அதன்மூலமாக யாராக இருந்தாலும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றுதான் சொன்னேனே தவிர, அதை நியாயப்படுத்திப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, வீரசிகாமணியில் சிலை உடைப்பையும், கொடியங்குளத்தில் நடந்த அரசின் அராஜகத்தைப் பற்றியும்தான். வீரசிகாமணி இருப்பது நெல்லை மாவட்டத்தில்; கொடியங்குளம் இருப்பது வ.உ.சி. மாவட்டத்தில். கொடியங்குளத்தில் நடந்தது அரசு அராஜகம், போலீஸ் தாக்குதல்; அங்குள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் வாழ்கின்ற கிராமத்தில் போலீஸ் தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகள் நடந்தன. எனவே, இரண்டையும் ஒன்றுபடுத்திப் பேசக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சந்தானம், நீங்கள் உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோல நண்பர்கள் எல்லாம் சமூக நல்லிணக்கத்தைப் பற்றி பேசினார்கள். நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து முடிந்து ஏறக்குறைய 9 மாதங்கள் ஆகிவிட்டன. இருந்தாலும், மதுரை, மேலூர் அருகிலுள்ள மேலவளவு என்ற கிராமப் பஞ்சாயத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. முருகேசன், இன்று வரையில் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சென்று பணியாற்ற முடியாமல் இருக்கிறார்கள். காவல் துறையும், இந்த அரசும் என்ன நடவடிக்கை அதற்காக



எடுத்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் அன்புச் சகோதரர் திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் கூட பஞ்சாயத்துத் தலைவரை பதவியில் அமர்த்துவதற்கு மக்களைத் திரட்டிக்கொண்டு போவேன் என்று சொல்கிறார்கள். நானும் அதே கருத்தை, தாழ்த்தப்பட்ட சமூகத்தினுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடிய நான் அந்தக் கருத்தை வலியுறுத்தி அங்கே சென்று, அந்தப் பஞ்சாயத்துத் தலைவரை, பஞ்சாயத்து அலுவலகத்திற்குக் கொண்டு போகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டால் அங்கே மோதல் வருமா வராதா ? எனவே, இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு முன்கூட்டியே அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.ப. மாயவன். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிட வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு கொடுமைகளைத் தடுத்தல் சட்டம் முறையாக அமல்படுத்தப்படுவதில்லை. இந்தச் சட்டத்தை முறையாக அமல்படுத்தினால் பல சிக்கல்கள் வராமல் தடுக்க முடியும். ஜாதிப் பிரச்சினைகளுக்காக, மக்கள் அடக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க காவல் நிலையங்களுக்குச் சென்றால், அங்கே வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டி செல்லும்போது, காவல் நிலையங்களில் தட்டிக்கழிக்கிறார்கள். இப்போது புதியதாக ஒரு நடைமுறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது லீகல் ஒப்பீனியன் என்று சொல்கிறார்கள். அந்த லீகல் ஒப்பீனியன் என்ற முறையில்லாமல், ஒவ்வொரு வழக்கையும் பதிவு செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்தால் பல சிக்கல்களுக்குத் தீர்வுகாணப்படும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையில், அடிப்படைக் காவலர்களிலிருந்து உயர் பதவிகள் வரையில் முறையான இட ஒதுக்கீடு செய்யப்பட்டு அமல்படுத்தப்படவில்லை. 76,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கக்கூடிய காவல் துறையில், தாழ்த்தப்பட்டச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். எனவே அந்தப் பாகுபாட்டைப் போக்கக்கூடிய ஒரு சிறப்பு ஆள் சேர்ப்பு எடுக்க, தமிழக முதல்வர் அவர்கள் நிச்சயமாக ஆணையிட வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல டி.எஸ்.பி. பதவியிலிருந்து

கன்ஃபர்டு ஐ.பி.எஸ். பதவி கொடுக்கிறபோது, கடந்த காலத்திலிருந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு முறையான இட ஒதுக்கீடு கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, நிச்சயமாக, பதவி உயர்வு கொடுக்கின்றபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு உரிய பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதிகளிலே சட்டம் ஒழுங்கைப் பார்க்கக்கூடிய இன்ஸ்பெக்டர் லெவலிலும், சப்-இன்ஸ்பெக்டர் லெவலிலும்— அவர்கள்தான் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசர்ஸ், அவர்களிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். அதனால்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் காவல் நிலையங்களுக்குச் சென்று முறையாக விண்ணப்பம் கொடுத்து தங்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ள முடியாத ஒரு அவல நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி, அந்தக் குறையைப் போக்குவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். *(மணியடிக்கபெற்றது)*

*(முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.ப. மாயவன் *(குறுக்கீடுகள்)*

**திரு. தி.ப. மாயவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, உலகம் பூராவும் பரவிக் கிடக்கின்ற தமிழ் மக்களினுடைய காவலராகவும், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஜனநாயகக் காவலராகவும், சமூகநீதிக் காவலராகவும் விளங்கக்கூடிய நம்முடைய தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு என்னை அனுப்பி வைத்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தளவில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாக காவலர்களுக்கு என்று ஒரு கமிஷன் -ஆணையம் அமைத்து, அந்த முதல் கமிஷனிலேயே அந்தக் கமிஷனால் பரிந்துரைக்கப்பட்ட 133 பரிந்துரைகளிலே அன்றே 115 பரிந்துரைகளை ஏற்று கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளிக் கொடுத்து காவலர்களுக்கு பெருமை ஏற்படுத்திக் கொடுத்தது நம்முடைய முதல்வர் அவர்கள்தான் என்பதை இந்த நாடு மறந்துவிடவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சபை உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்கவும்.*

**திரு. தி. ப. மாயவன்:** அதேபோல, காவல் துறை பற்றி பேசும்போது ஒரு கருத்தை நான் இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். எங்களுடைய திருவரங்கம் ரெங்கநாதர் ஆலயத்திலே பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு திருட்டு பற்றி இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். பூலோக வைகுண்டம் என்று சொல்லப்படுகின்ற அந்த ஆலயத்திலே வருடந்தோறும் நடைபெறுகின்ற வைகுண்ட ஏகாதசி திருவிழாவிலே 8 ஆம் நாள் நடைபெறுகின்ற வேடுபரி என்ற திருவிழாவிலே சாமி நகைகளை திருமங்கை மன்னன் என்ற ஒரு மன்னன் திருடியதாக வரலாறு. கடந்த கால ஆட்சியிலே அமைச்சர்கள் எப்படி நாட்டு மக்களினுடைய சொத்துக்களைத் திருடினார்களோ, கொள்ளையடித்தார்களோ அதைப்போல அந்த திருமங்கை மன்னன் அந்த சாமியினுடைய நகைகளைக் கொள்ளையடித்து, அந்தத் திருட்டிலே காவல்காரர் இனத்தைச் சேர்ந்த அந்தப் பகுதியிலே வாழ்கின்ற முத்தரையர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மன்னனைப் பிடித்து ஒப்படைத்து, அந்த மன்னனுக்கு தண்டனை வழங்கிய காலத்திலே, அந்த மன்னன் திருந்தி, திருமங்கை மன்னன், திருமங்கை ஆழ்வார் என்ற பட்டப் பெயர் பெற்று, பல கவிதைகளை எல்லாம் இயற்றியதாக வரலாறு உண்டு. அன்றைய மன்னன் திருந்தி அன்று திருமங்கை ஆழ்வாராக உருவெடுத்துவிட்டான். ஆனால், கடந்த கால ஆட்சியிலே திருடியவர்கள் பொதுமக்களிடத்திலேயும் மன்னிப்புக் கேட்காமல், அரசிடத்திலேயும் மன்னிப்புக் கேட்காமல், இன்றும் அவர்கள் தங்களுடைய செய்கைக்கு நியாயம் கற்பித்துக் கொண்டு இருப்பது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். கடந்த காலங்களிலே ஆட்சியாளர்கள் இலாக்காக்களைத் தங்களுக்குள் பங்கு பிரித்துக்கொண்டு பல கொள்ளைகளை நடத்திக் கொண்டு இருந்தார்கள். நம்முடைய தானைத் தலைவர், நம்முடைய முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, அந்தத் திருட்டுகள் எல்லாம் ஓரளவுக்கு இன்றைக்குக் குறைந்து, ரவுடிகள் அட்டகாசங்களை எல்லாம் அடக்குகின்ற வகையிலே பல ரவுடிகளை சுட்டுக்கொன்று, பல்வேறு திருட்டுக்களை எல்லாம் தடுத்து இன்று தமிழகம் ஒரு சிறப்பான நிர்வாகத்தைப் பெற்று இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

முற்பகல் 11-05

கடந்த காலத்திலே அந்த ஆட்சியாளர்களோடு சேர்ந்துகொண்டு கொள்ளையடித்துக் கொண்டிருந்த பல அதிகாரிகள் இன்றும் சில இடங்களில் மூலைக்கொன்றாக உட்கார்ந்துகொண்டு, தங்களுடைய ஆசைக்கு இணங்கக்கூடிய சில அரசியல்வாதிகளைத் துணைக்கு வைத்துக் கொண்டு இந்த ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தவேண்டும், களங்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்று திட்டமிட்டு பல சமூக விரோதச் செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்காமல் இருக்கமாட்டான் என்பதைப் போல இருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தவேண்டுமென்று இருக்கக்கூடிய அந்த அதிகாரிகளுக்கு சரியான தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையில் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பதக்கங்களையும் பாராட்டுகளையும் வழங்குகிறீர்கள். ஆனால் ஆட்சிக்குக் கெட்டபெயரை உண்டுபண்ணவேண்டும் என்று நினைக்கிற அதிகாரிகளுக்குக் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும். கடுமையான தண்டனை என்றால், அவர்களை வேலையை விட்டு நீக்குவது என்பதல்ல, அந்த அதிகாரிகளையெல்லாம் ஒருமாத காலத்திற்கு பாக்கெட் இல்லாத சட்டை அணிவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாக்கெட் இல்லாத சட்டை அணிந்திருந்தால் மற்றவர்கள் அவர்களைப் பார்க்கின்ற பார்வையிலேயே அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

நீங்கள் இந்தத் துறைக்கு பல்வேறு சலுகைகளையெல்லாம் வழங்கியிருக்கிறீர்கள். இன்னும் சில சலுகைகளை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவல்துறை நண்பர்கள் தவறு செய்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் குறிப்பிட்ட பணி நேரம் நிர்ணயிக்கவேண்டும். அரசு ஊழியர்களுக்கு உள்ளதைப்போல 8 மணி நேரம், 10 மணி நேரம் என்று அவர்கள் பணி நேரத்தை நிர்ணயிக்க முதல்வர் அவர்கள் உத்தரவிடவேண்டும். பெண் காவலர்களை நிறைய பேர் நியமிக்க இப்போது உத்தரவு போட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமான வாய்ப்பை அவர்களுக்கு வழங்கவேண்டும். இன்றைய நிலையில் ஆண்கள் இருக்கும் காவல் நிலையங்களைவிட மகளிர் காவல் நிலையங்களில் அதிகமான வழக்குகள்



விரைந்து பைசல் செய்யப்படுகின்றன. நல்லமுறையில் பணியாற்றுகிறார்கள். ஆகவே பெண் காவலர்களுக்கான இட ஒதுக்கீட்டை இப்போதிருக்கும் 30 சதவீதத்திற்கு மேலாகக் கூட வாய்ப்பு அளிக்கலாம் என்று இந்த மன்றத்திலே கூறிக்கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

ஸ்ரீ ரங்கம் தொகுதி என்பது இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர், பிரதமர்கள் மற்ற மாநில முதல்வர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பெரிய பெரிய அதிகாரிகளும் உயர்மட்டத்தில் இருப்பவர்களும் வந்து போகின்ற இடமாக இருக்கிறது. சாதாரணமாக வருகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகிறார்கள். அமைச்சர்களாக ஆகிறார்கள். முதலமைச்சராக ஆகிறார்கள். அதைப்போல மிக உயர்ந்த பதவிகளுக்கெல்லாம் போகிறார்கள். ஆனால் எங்கள் நகரத்தைப் பற்றி எங்கள் தொகுதியைப் பற்றி யாருமே கவனிப்பதில்லை. அதிகாரிகளாக இருந்தாலும் சரி, உச்சநீதிமன்ற நீதிபதிகளாக இருந்தாலும் சரி, வந்து அருள் பெற்றுக்கொண்டு போகிறார்கள். பெரிய பெரிய பதவிகளுக்கெல்லாம் போகிறார்கள். ஆனால் எங்கள் தொகுதியைப் பற்றி யாரும் நினைக்கவில்லை. எங்கள் தொகுதியில் இருந்தவர் கூட ஆளுநராக இருந்து இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் செய்யாததை தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு செய்திருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தொகுதியில் எனக்கு சட்டமன்ற உறுப்பினராக வர வாய்ப்பளித்து பல்வேறு காரியங்களை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதலாவதாக, திருவரங்கத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் அவர்களுடைய பெயராலே ஒரு கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மங்களூர் ஒன்றியத்திலே இருக்கும் எட்டணை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கிக் கொடுக்கவேண்டும். அதற்குண்டான பணமெல்லாம் கட்டியிருக்கிறார்கள். அதைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியைத் தாங்கள் வழங்கியிருக்கிறீர்கள். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்கள் பெயரால் அமைய இருக்கும் மருத்துவக் கல்லூரியை

என்னுடைய தொகுதியில் ஸ்ரீரங்கத்தில் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில், பத்திரிகையாளர்களால் செக்ஸ் சாமியார் என்று அழைக்கப்பட்ட பிரேம்மானந்தா சாமியாரும், சின்னமேடம், பெரியமேடம் எல்லாம் சேர்ந்து அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முயற்சி செய்து அதற்கு வேண்டிய நிலங்களையெல்லாம் பெற்று அங்கே ஒரு விளம்பரப் பலகையையும் வைத்திருந்தார்கள், ஜே.ஜே. மருத்துவக் கல்லூரி என்று. ஆகவே அந்த மருத்துவக் கல்லூரி வேறு இடத்திற்கு செல்லுமேயானால், அந்தப் பகுதி மக்களுக்கு வருவது கெட்டு விட்டதேயென்று, எங்களுடைய பகுதி மக்கள் நினைக்கக்கூடாது என்பதற்காகக் கேட்கிறேன். அந்தப் பகுதியிலே அன்பிலார் அவர்கள் விவசாயக் கல்லூரி இருக்கிற அந்தப் பகுதியில் கி.ஆபெ. விசுவநாதம் அவர்கள் பெயரால் மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது போதும், அடுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறை வரலாற்று சிறப்புமிக்க, தனித்தன்மை வாய்ந்த, சிறந்த துறையென்று எல்லோராலும் பாராட்டப்படும் விதத்தில் செயல்பட்டு வந்திருக்கிற துறையாகும். காவல் துறையைப் பொறுத்தவரையில், உரலுக்கு ஒரு பக்கத்திலே இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலேயும் இடி என்பார்களே, அதைப்போல பொது மக்களுக்கு இடையிலே மோதல் என்றாலும் சரி, அல்லது பொது மக்களுக்கும் காவல் துறைக்கும் இடையே மோதல் என்றாலும் சரி, பொது மக்களோடு சேர்ந்து காவல் துறையில் இருப்பவர்களும் பல்வேறு நிலையில் பாதிக்கப்படுகிறார்கள். காவல் துறையில் இருப்பவர்களும் மனிதர்கள்தான். காவல் துறையில் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய பல உயர்ந்த அதிகாரிகள் இருந்தாலும், சுயநலமிக்க ஒரு சில கருப்பு ஆடுகளும் காவல் துறையில் இருக்கிற காரணத்தால்தான் ஒட்டுமொத்தமாக காவல் துறைக்கு கெட்ட பெயர் வரக்கூடிய சூழல் சில நேரங்களிலே ஏற்பட்டு விடுகிறது.

காவல் துறையைப் பொறுத்தவரையில் முதலில் அவர்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய 80 ஆயிரமாக இருந்தது, இப்போது ஆண்டுதோறும் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று அதிகரித்து வருகிறது.



ஏறக்குறைய 5 கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்திலே காவலர்களுடைய எண்ணிக்கை, காவல் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்களுடைய எண்ணிக்கை நிச்சயம் போதுமானதல்ல. காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று முதலில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையில் பணியாற்றுகிறவர்களில் அதிகமான பேர்கள் காவலர்கள்தான். உயர் அதிகாரிகள். குறைந்த அளவில்தான் இருக்கிறார்கள். காவலர்களுக்கு இருக்கிற சங்கடங்களைச் சுருக்கமாக ஒன்றிரண்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, முதலில் காவலர்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொண்டு, அவர்களுடைய பணியை, கடமையைச் சிறப்பாகச் செய்ய வைக்க அரசு முயல வேண்டுமென்ற நோக்கத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

சுருக்கமாக, காவலர்களுக்கு வாரத்தில் ஒரு நாள்தான் ஓய்வு உண்டு. அதற்கு பதில் வேலை செய்தால் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை இப்போது இருக்கிற விலைவாசி அடிப்படையில் 50 ரூபாயாக உயர்த்தவேண்டும் என்பது பெரும்பாலான காவலர்களுடைய கோரிக்கை. அதைப்போல முக்கியமாக பந்தோபஸ்து செய்கிறபோது ஒரு நாளைக்கு உணவுப்படி 20 ரூபாய் தரப்படுகிறது. 20 ரூபாய்க்கு ஒரு வேளை சாப்பாடுதான் சாப்பிடமுடியும். ஆகவே, அதை உயர்த்தி 50 ரூபாயாகத் தர வேண்டுமென்பது அடுத்த கோரிக்கை. அதைப்போல, காவலர்கள் வருடம் முழுவதும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வருடத்திற்கு 12 நாட்கள் விடுப்பு தரப்படுகிறது. இதை 20 நாட்களாக அதிகரிக்க வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை. அதைப்போல காவலர்களுக்கு சீருடை வழங்கப்படுகிறபோது சீருடையைத் தைத்துக் கொடுக்காமல் துணியை அப்படியே தந்தால் அவர்களே அதைத் தைத்துக் கொள்வார்கள். அதற்காக ஸ்டிச்சிங் அலவன்ஸ் அவர்களுக்கு கொடுத்து விடலாம். ஏனென்றால், காலுக்குத் தான் செருப்பே தவிர, செருப்புக்கு கால் அல்ல. பல நேரங்களில், தைத்துக் கொடுக்கிறபோது அது பொருத்தமற்றதாக அமைகிறது என்பது அவர்களுடைய வாதம். ஆகவே, இதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவலர்களுக்கு இடையூறுப்படியாக ரூபாய் 20 தான் கொடுக்கப்படுகிறது. அதை 200 ரூபாயாக ஆக்கவேண்டும் என்கிறார்கள். குறைந்தது 100 ரூபாயாகவாவது உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல் காவலர்கள் குடியிருப்புகளிலே தனியாக மின்சார மீட்டர் பொருத்தப்படவேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை;

நீண்ட நாள் கோரிக்கை. அதேபோல் சீருடைகளை சுத்தம் செய்வதற்கு 30 ரூபாய் வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி 50 ரூபாயாக வழங்கப்படவேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை. இப்படிப்பட்ட கோரிக்கைகளை அரசு பரிவோடு பரிசீலிக்கவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்தச் சட்டமன்றத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படும், சப்-இன்ஸ்பெக்டர்கள் அதிக அளவிலே எடுக்கப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலே ஏற்கனவே 1992-93-லே தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தால் இரண்டாம் நிலை போலீசார் தேர்வில் மருத்துவ பரிசோதனை உட்பட அனைத்திலும் தேர்ச்சி பெற்ற ஏறக்குறைய 376 பேர்கள் இன்னும் பணி கிடைக்காமல் இருக்கிறார்கள். அனைத்து விதமான - நான் சொன்னமாதிரி, மருத்துவப் பரிசோதனை வரை உட்படுத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்கள் இன்னும் பணியில் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் தேர்ச்சி பெற்றவர்களுக்குக்கூட பணி கிடைத்துவிட்டது. எனவே இவர்கள் பணியிலே அமர்த்தப்படுகிற விதத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை பணிவோடு பரிசீலிக்கவேண்டும். அந்த இளைஞர்களுக்கு வாழ்வு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் 1994-லே சப்- இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டு, நேர்முகத் தேர்வு எல்லாம் முடிவு பெற்று, பின்னர், மருத்துவத் தேர்வும் முடிவு பெற்று, அவர்களும் ஏறக்குறைய 600 இளைஞர்கள் தேர்வு பெற்றவர்கள் இன்னும் பணியிலே அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு எல்லாம் பணி தரப்படும் என்று சென்றக் கூட்டத் தொடரின்போதே அறிவித்திருக்கிறார்கள். இதைச் செயல்படுத்தவேண்டும், நடைமுறைப் படுத்தவேண்டும், அவர்களுக்கு பணி தரவேண்டும் என்று நான் அந்த இளைஞர்களின் சார்பில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் குற்றங்களுடைய எண்ணிக்கை தமிழகத்திலே அதிகரித்து வருகிறது. குறிப்பாக 1996-ஆம் ஆண்டு என்பதைப் பொறுத்தவரையில், நியாயமாகப் பார்த்தால், மார்ச் வரை அல்லது இந்த காவல்துறை மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னாலே 1 மாதம் வரை, 3 மாத காலங்கள் வரை-சேர்த்துப் புள்ளிவிவரம்



தரப்பட்டிருக்கவேண்டும். இந்த 3 மாதங்களையும் சேர்த்தால், எண்ணிக்கை அதிகமாக வந்துவிடும் என்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை, 1996 டிசம்பர் வரைதான் உங்களுக்கு கணக்கு தந்திருக்கிறார்கள். எங்களுக்கும் அந்தக் கணக்கைத் தந்து இருக்கிறார்கள். எனவே, அந்தக் கணக்குப்படி 1996 ஆம் ஆண்டு வரை பார்த்தால், கூட்டுக்கொள்ளைகள் என்று எடுத்துக் கொண்டால், புகார் செய்யப்பட்டது 1995-லே 134. 1996-லே 171. அதாவது கூட்டுக் கொள்ளைகள் அதிகரித்து இருக்கின்றன. இதிலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று பார்த்தால் 76 தான். ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாகத்தான் இந்தக் கூட்டுக் கொள்ளைகள் நடந்திருப்பதிலே, பெரிய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

அதேபோல் வழிப்பறிக் கொள்ளை என்று எடுத்துக் கொண்டால் 1995-லே புகார் செய்யப்பட்டது 529; 1996-லே 600 புகார் செய்யப்பட்டது. இதிலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று பார்த்தால் ஏறக்குறைய 338. ஏறக்குறைய 50 சதவீதம். வீடு புகுந்து திருடுதல், தாக்குதல் என்கிற அளவிலே புகார் செய்யப்பட்டது, 1995-லே ஏறக்குறைய 5998. 1996-லே 6362. இதிலேயும் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது 2973. ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்குதான் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது.

அதேபோல் பெருந்திருட்டு என்று எடுத்துக்கொண்டால் 1995-லே ஏறக்குறைய 17 ஆயிரம் புகார் செய்யப்பட்டு இருக்கிறது. இப்போதும் ஏறக்குறைய 17,200. இதிலே ஏறக்குறைய 12900 அல்லது 13000 வரை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது. சிறு குற்றங்கள் என்று எடுத்துக் கொண்டால், இவைகள்தான் ஏறக்குறைய 90 சதவீதம் வரை கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, காவல்துறையினுடைய திறமையைப் பற்றிச் சொல்கிறபோது, ஏறக்குறைய 69 சதவீதம், 70 சதவீதம் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது, இந்த சிறிய குற்றங்கள் 90, 95 சதவீதம் வருகிறது அல்லவா, கண்டுபிடிப்பது, அதையும் சேர்த்து, ஆவரேஜ், சராசரியாக பார்க்கிறபோதுதான், இந்த 68, 69 சதவீதம் என்று நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய அளவிலே காவல்துறையின் சார்பிலே அறிக்கை தரப்படுகிறது.

முற்பகல் 11-20

அரசின் சார்பிலே சொல்லப்படுகிறதே தவிர, மற்ற பெரிய குற்றங்கள் எல்லாம் மிகக் குறைவான அளவிலே

கண்டிபிடிக்கப்படுகின்றன. 1996-லே 28 முறை ஜாதிக் கலவரங்கள் நடைபெற்று இருக்கின்றன. வெடிகுண்டுச் சம்பவங்கள் என்று எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய 151 நடவை வெடிகுண்டுச் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்றன. இதிலே சிதம்பரனார் மாவட்டத்திலே மட்டும் ஏறக்குறைய 11 முறைக்கு மேல் வெடிகுண்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல குறிப்பாக திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ.சி. மாவட்டம், காமராஜர் மாவட்டம் போன்ற இந்த 2. 3 மாவட்டங்களிலே மட்டும் அடிக்கடி ஜாதிக் கலவரங்கள், இனக் கலவரங்கள், வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஒருவர் விளையாட்டாகச் சொல்லிக் கொண்டிருந்தார், அந்தப் பகுதியைச் சேர்ந்த தோழர். குறிப்பாக இந்த மாவட்டங்களிலே, பல இடங்களிலே, வெடிகுண்டுகள் ஏதோ குடிசைத் தொழில் போல பல வீடுகளில் தயாரிக்கிற நிலை இருக்கின்றது என்று சொன்னார். அதிலே உண்மையும் இருக்கிறது. குறிப்பாக இந்த இரண்டு, மூன்று மாவட்டங்களிலே காவல்துறையைக் கொண்டு, கிராமம் கிராமமாக இதுபோன்ற வெடிகுண்டு தயாரிப்பவர்கள் யார், அதற்கான பின்னணி என்ன என்பதையெல்லாம் தீவிரமாக அரசாங்கம் ஆய்வு செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வெடிகுண்டுக் கலாச்சாரம் பரவி வருவதும், கொலை, கொள்ளை பரவி வருவதும், வன்முறை பரவி வருவதும் அதிகரித்து வருகிறது. இதை அரசாங்கம் இரும்புக் கரம் கொண்டு நிச்சயமாக ஒடுக்க முன்வரவேண்டும். எல்லாவிதமான கடுமையான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும் என்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் காவல் நிலையங்களிலே கொண்டு போய் விசாரிக்கிறபோது விசாரணையில் இறந்தவர்களுடைய எண்ணிக்கை 1996-லே 13 பேர். இவற்றையெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டுகிறபோது, இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே இல்லையா, அதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே இல்லையா என்றெல்லாம் அரசின் சார்பிலே கணக்குகள் தரப்படும். இதிலே அதிகாரிகள் ஒன்றைச் சொல்வார்கள். இதற்கு முன்னாலே இருந்த கணக்குகளைச் சொல்வதைவிட இந்த ஆட்சியிலே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய



கோரிக்கையாகும். காவல் நிலையங்களிலே கொண்டுபோய் விசாரணை என்கிற பெயரிலே அவர்களை அடித்தோ, துன்புறுத்தியோ கொல்வது என்பது காட்டுமிராண்டித்தனமான கலாச்சாரமாகும். எனவே இந்த காட்டுமிராண்டித்தனமான செயல் நிச்சயமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நேற்று எங்கள் கட்சியின் சார்பிலே ஒருவரும் பேசவில்லை.

அதுபோல மதுவிலக்கைப் பொறுத்தவரையில், இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்-கவிதைப் பித்தன் என்று நினைக்கிறேன், நேற்று அவர்கள்-பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டு விட்டது, மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள் என்றெல்லாம் சில உறுப்பினர்கள் பேசி பத்திரிகையிலே வந்திருக்கிறது. கள்ளச் சாராயத்தைத் தடுக்கின்ற விதத்திலே 5,17,200 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வாகனங்கள் 4,000-க்கு மேலே கைப்பற்றப்பட்டிருக்கின்றன. 2,000-க்கும் மேல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் உண்மைதான். இருந்தாலும் இன்னமும் கள்ளச் சாராயம் பல இடங்களிலே அநேகமாக எல்லாக் கிராமங்களிலேயும்-கள்ளச் சாராயம் இல்லாத கிராமம் என்று பார்த்தால் ஒரு சில கிராமம்தான் நிச்சயமாக இருக்கும். எல்லாக் கிராமங்களிலேயு-பெரும்பாலும் கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. இந்த கள்ளச் சாராயம் விற்பதிலே இங்கே தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னமாதிரி, இதிலே சில சமூகவிரோதிகள் பலன் அடைகிறார்கள். இரண்டாவது அந்தந்தப் பகுதியிலே இருக்கிற காவலர்களும், காவல்துறையைச் சார்ந்தவர்களும் நிச்சயமாக பலனடைகிறார்கள். எந்தக் கிராமத்திலும் காவல்துறைக்குத் தெரியாமல் கள்ளச் சாராயம் நிச்சயமாகக் காய்ச்சவே முடியாது. காவல்துறையைச் சார்ந்தவர்கள் இதிலே கடுமையாக இருப்பார்களேயானால் நிச்சயமாக கள்ளச் சாராயத்தைக் காய்ச்ச முடியாது. அவர்களுடைய அனுமதி இல்லாமலோ, மாமூல் இல்லாமலோ நிச்சயமாக கள்ளச் சாராயம் காய்ச்சப்பட முடியாது. எனவே கள்ளச் சாராயத்தை நீங்கள் முழுமையாக ஒடுக்குகிறபோது ஐ.எம்.எப்.எல். மூலமாக வருகிற வருமானம் இன்னமும் அரசாங்கத்திற்கு கூடுதலாக வரும். எனவே கள்ளச் சாராயம் முழுமையாக தடுக்கப்பட வேண்டும். அதனால் ஏற்படுகிற பாதிப்புகள், சாவுகள் தடுக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே கள்ளச் சாராய வழக்குப் போடுகிறேன் என்று சொல்லி, விஷச் சாராய வழக்கு

என்று போடுகிறார்கள். இதை ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். சென்னையிலே காசிமேடு ஸ்டேஷனில், காவல் துறையைச் சேர்ந்த காவலர் நெம்பர் 8650. சட்டமன்ற மாபு கருதி அவருடைய பெயரை நான் சொல்லாமல், நெம்பரை மட்டும் சொல்கிறேன். அவர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தோழர் ஒருவரை, ஆய்வாளர் அழைக்கிறார் என்று அழைத்துச் செல்கிறார். அப்படி அழைத்துச் சென்று, யாருடைய கையெழுத்தும் இல்லாத ஒரு மொட்டை பெட்டிஷனைக் காட்டி, உங்கள் மீது புகார் வந்திருக்கிறது. ரூ.5,000 கொடுத்தால் விட்டுவிடுகிறேன். இல்லையென்றால் கள்ளச்சாராய வழக்கிலே உங்களைப் பதிவு செய்வோம் என்று கூறி, கள்ளச்சாராய வழக்கிலே பதிவு செய்து, உள்ளே அனுப்புகிறார். அதற்குப் பின்னாலே, அவர் 'பெய்லிலே' வருகிறார். இது போன்ற தவறுகள் எல்லாம் நடக்கின்றன. அதை நீங்கள் விசாரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11.25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஏற்கெனவே 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இன்னும் ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நேற்றும் எங்கள் கட்சியின் சார்பாக யாரும் பேசவில்லை. 5 நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன். கொலைகள் என்று சொல்கின்றபோது, படுகொலைகள், அரசியல் ரீதியான கொலைகள் அதிகரித்து வருகின்றன. நேற்றைக்குக்கூட மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் அணியைச் சார்ந்த செயலாளர் லீலாவதி, மதுரை கவுன்சிலர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுபோல பழனிபாபா, சிவா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உடையார், இப்படி பலரும் அரசியல் ரீதியாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி கொலைகள், கூட்டுக் கொள்ளைகள் என்று வருகின்றபோது, காவல் துறையைச் சார்ந்தவர்கள் கொலைக்குப் பின்னாலே நடவடிக்கை எடுப்பது என்பது ஒன்று, ஆனால், அதற்கு முன்னாலேயே "Prevemtion is better than cure" என்பார்களே, அதுபோல, இந்த மாதிரி சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னாலேயே 'Intelligence' காவல் துறையினுடைய மற்றொரு பிரிவு தங்களுடைய புலனாய்வுச் சக்தியின் மூலமாக, திறமையின் மூலமாக இதுபோன்ற கொலைகள் நடக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல, கொடுங்கையூரிலே வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் ஏற்கெனவே பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதிலேகூட, அங்கிருக்கிற ஒரு சப்-இன்ஸ்பெக்டர், நான் அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விசாரித்துக் கொள்ளட்டும் — அங்கு விசாரணைக்காகப் போட்டிருக்கிற அந்த எஸ்.பி. யாராவது ஒரு சிலரை, அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களையே கொண்டு வந்து அந்தக் கேசை முடித்து விடலாம் என்று நிர்பந்தப்படுத்துவதாகவும், அதனை அந்தக் காவல்துறை ஆய்வாளர் ஒத்துக்கொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அந்த எஸ்.பி.யே, அவருக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார். நான் இங்கே பேசுகிற காரணத்தினாலே, கூடுதல் தொல்லை வந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த செய்தி எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அதை விசாரிக்க வேண்டும். இதிலே, வெளிநாட்டு தொடர்புகூட இருக்கலாமோ என்ற சந்தேகம் வருகிற காரணத்தினாலே, இதை சி.பி.ஐ. விசாரணை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சென்னையிலே இ.பி.-லே சி.இ.ஆக இருந்தவர், செங்கோட்டையன் என்று பெயர், அவருடைய மனைவி அன்னபூரணி, பட்டப் பகலிலே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இன்னும் குற்றவாளிகள் யாரையும் கண்டுபிடிக்கவில்லை. அவற்றையும் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ராசிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய தொகுதியிலே புறக் காவல்நிலையம் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். போக்குவரத்து போலீஸ் பிரிவு ஒன்றும் ராசிபுரத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுபோல, என்னுடைய தொகுதியிலே ஆவுடையார்கோயிலிலே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டும். அதற்கு தூரம் ஒத்துவரவில்லை என்றால், அதற்குப் பக்கத்திலே கரூர் என்ற இடத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டும். இல்லையென்றால், ஆவுடையார் கோயில் என்பது தாலுக்கா ஹெட் குவாட்டர்ஸ். அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஜகதாபட்டினம் என்கிற இடத்திலே அடிக்கடி மீனவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தகராறு நடக்கிறது. அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஆரம்பித்துத் தர

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு கோரிக்கை. 8 வயதுச் சிறுவன் ஒருவன். அவனது பெயர் சரவணன், அந்தப் பகுதியிலே இரண்டு கோஷ்டிகளுக்கிடையிலே மோதல் நடந்துகொண்டிருக்கும்போது, பள்ளிக்குச் சென்று, திரும்பி வருகின்றபோது, அவன்மீது கல்லடி பட்டு, சோடா பாட்டில் எறியப்பட்டு, அந்த இடத்திலேயே அவன் இறந்து இருக்கிறான். அந்தக் குடும்பம் ஏழ்மையான. மிகவும் கஷ்டத்தில் இருக்கிற குடும்பம். ஆகவே, அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 அல்லது ரூ. 1 லட்சம் தர வேண்டுமென்ற வேண்டுகோளை கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தக் கலவரத்திலேதான், பள்ளிக்குச் சென்று திரும்பும்போது அவன் இறந்து போனான் படுகொலைக்கு ஆளானான் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. டாக்டர் சர்டிபிகேட்டும் இருக்கிறது. எனவே அந்தக் குடும்பத்திற்கும் உதவ வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடம் ஆகிவிட்டது. 5 நிமிடம் அதிகமாகக் கேட்டீர்கள். அதையும் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். இன்னும் எதிர்க்கட்சித் தலைவர் பேசி, முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும். *(குறுக்கீடு)* சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, காவல்துறையைப் பொறுத்தவரை அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நவீன வசதிகளை எல்லாம் செய்து தருவதோடு இப்போது நவீன யுக்திகளைக் கையாண்டு, வன்முறைகள், கொலை, கொள்ளைகள் செய்கின்ற அந்தச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்ற காரணத்தினாலே இவற்றிலேயெல்லாம் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தமிழக அரசை வற்புறுத்தி கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதற்காக ஜனவரி முதல்



டிசம்பர் வரை என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார். அது சரியல்ல. ஏனென்றால் காவல்துறையினுடைய ஓராண்டுக்கான பெர்ஃபார்மன்ஸ் - செயல்பாட்டினுடைய மதிப்பு ஆய்வு என்ற தலைப்பில் ஆண்டுதோறும் ஜனவரி முதல் டிசம்பர் வரைதான் அந்த மாதங்களைக் கணக்கிட்டுத்தான் விவரங்களைத் தருவது வழக்கம். கடந்தகால அரசுகளிலும் அப்படித்தான் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் மக்களுடைய ஜனத்தொகைக்கேற்ப போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை இல்லை என்ற கருத்தை எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு திருநாவுக்கரசு சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். மேல் மட்டத்திலேயிருந்து கீழ்மட்டம் வரையிலே இருக்கக்கூடிய போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை அதிகமாக்கப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடம் இல்லை. எண்ணிக்கை அதிகம் ஆனாலும் போலீஸ்காரர்களுடைய எண்ணத்தில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதிலும் ஐயம் இல்லை. போலீஸ்காரர்கள் நாட்டுக்குத் தேவை. இப்போதைய சூழ்நிலையிலே அதிகமான விமர்சனத்திற்கு ஆளாகக் கூடிய ஒரு துறையாகவும் போலீஸ்துறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் எவ்வளவுதான் நாம் திருத்தங்களைக் கொண்டுவந்தாலும், சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தாலும், போலீஸ் துறையில் பணி செய்யக்கூடியவர்களிடையே ஒரு பொறுப்புணர்வு வந்ததாக வேண்டும். அது வரவில்லையென்றால் அரசியல் ரீதியாகவோ வேறு ரீதியாகவோ நாம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. போலீஸ்காரர்கள் எல்லா வகையிலும் சங்கடத்திற்கு ஆளாகிறார்கள். அதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். முழுக்க முழுக்க போலீஸ் துறையை நாம் குற்றம் சாட்ட முடியாது. அதே நேரத்தில் போலீஸ் துறை எடுத்துக்கொள்கிற எல்லா நடவடிக்கைகளையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. சமுதாயத்தில் இருக்கக்கூடிய பல்வேறு துறையினர் பொறுப்போடு இருந்தால் நிச்சயமாக போலீஸ் துறையிலும் கொஞ்சம் பொறுப்பு வரும் என்று நான் கருதுகிறேன். சமுதாயத்தில் இருப்பவர்கள் காவல்துறையினர் இந்த நாட்டு மக்களுடைய உரிமைகளைக் காப்பதற்கு பணி செய்யக் கூடியவர்கள், மக்கள்

தொண்டர்கள், மக்களுடைய சேவைக்காக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் தவறான காரியங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாது என்ற எண்ணம் பல்வேறு தரப்பினர்களுக்கு வந்தாக வேண்டும். அதே நேரத்தில் போலீஸ் துறையை விட்டு நாம் அகலவும் முடியாது. மிகவும் அருகில் சென்றுவிடவும் முடியாது. (குறுக்கீடு) இல்லையா? எனக்கு நினைவு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களே சில ஆண்டுகளுக்கு முன்பு இதே அவையிலே சொன்னார்கள். நெருப்பைப் போல நாம் பயன்படுத்த வேண்டும், குளிர் காய்வதற்காக நாம் நெருப்பை எப்படிப் பயன்படுத்துகிறோமோ அப்படித்தான் நாம் போலீஸ் துறையைப் பயன்படுத்த வேண்டும். நாம் அதை விட்டு தூரச் சென்று விட்டால் குளிர் நம்மைத் தாக்கும். அருகில் சென்று விட்டால் அந்த நெருப்பு நம்மைச் சுடும். எனவே, குளிர் காய்பவனைப் போல்தான் போலீஸ்காரர்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

*முற்பகல் 11-35*

அதே நேரத்தில் போலீஸ்காரர்கள், ஊதியத்திற்காக நாம் செயல்படுகிறோம் என்ற எண்ணத்தைவிட, ஊருக்காக, சமாதானத்திற்காக, மக்கள் உயிர், உடமைகளுடைய பாதுகாப்பிற்காக, ஒரு சமூக சேவையில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு வர வேண்டும். அந்த எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும் அவர்களுக்கும் வயிறு உண்டு; வாய் உண்டு; அதை நாம் மறந்து விடக் கூடாது. எனவே, அவர்கள் ஓரளவிற்கு நிம்மதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்து இருந்திட முடியாது.

ஒரு ஆசிரியருக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம்கூட போலீஸ்காரர்களுக்கு இல்லை. அவர்களுக்கு, Promotional opportunitics என்று எடுத்துக் கொண்டால், மற்ற துறைகளிலே வேலை செய்கிறார்களே அவர்களுக்கு இருக்கக்கூடிய opportunitics இவர்களுக்கு இல்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கு நிர்ணயித்திருக்கிற சம்பளம் வெகு காலத்திற்கு முன்பு நிர்ணயித்து, பிறகு நம்முடைய ஆட்சி, ஜனநாயக முறையிலே வந்தபோது, அவ்வப்பொழுது அதை உயர்த்தியிருக்கிறோம். இருந்தாலும், மற்ற துறையில் பணியாற்றுகிறார்களே அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் போலீஸ்காரர்களுக்கு நாம் கொடுக்கிற ஊதியம் நாம் கொடுக்கிற மற்ற சலுகைகள், வசதிகள் குறைவு என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் அவர்கள் நிம்மதியற்று இருக்கிறார்கள். அவர்களிடத்திலே ஒரு திருப்தி இல்லை என்பதை நம்மால் அறிய முடிகிறது. எனவே, நான் தயவு செய்து மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு நீங்கள் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு செவி சாய்க்க வேண்டும்; செவி சாய்க்கக்கூடிய பாரம்பரியத்திற்கு உரிய உங்களிடத்தில் நான் அதை அவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.



இந்த ஒரு கோரிக்கையை என்னிடத்தில் சொன்னார்கள். ஜனாதிபதி மெடல் பெறுபவர்களுக்கு-President's Medal பெறுபவர்களுக்கு-நாடு முழுவதும் இரயிலிலே பயணம் செய்வதற்கு இரயில்வே பாஸ் கொடுக்கிறார்கள்; ஃப்ரீ பாஸ். நம்முடைய அண்ணா பெயரால், Police Meritorious Service -க்காக நாம் மெடல் கொடுக்கிறோம். அப்பேர்ப்பட்டவர்களுக்காவது நம்முடைய பஸ்களிலே - சர்க்கார் பஸ்களிலே-இலவச பாஸ் கொடுக்க வேண்டும். அது அவர்களுடைய சேவைக்கு ஒரு அங்கீகாரமாகவும் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. எனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் - நாம் பல பேருக்குக் கொடுக்கிறோம், அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் அந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த மினிஸ்டீரியல் சர்வீசஸ் - போலீஸ் மினிஸ்டீரியல் சர்வீசஸ் அவர்களையும் மற்ற அதேமாதிரியான பணிகளைச் செய்யக் கூடியவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்களுக்கு நாம் கொடுக்கிற ஊதியம், பதவி உயர்வு வாய்ப்புகள் மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, காவல் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு அவர்கள் பணி அமைப்பை மாற்றி, களப் பணியாளர்களுக்கு இணையான ஊதியமும், பிற சலுகைகளும் வழங்கப்படவேண்டுமென்று அவர்கள் விடுத்திருக்கிற வேண்டுகோளை நானும் வலியுறுத்துகிறேன். தயவுசெய்து தாங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மற்ற விஷயங்களையெல்லாம் பேசினார்கள். குறிப்பாக ஜாதிப் பிரச்சினையெல்லாம் வந்தது. அதில் நான் ஆழமாகச் செல்லவில்லை. ஜாதியில் நம்பிக்கை எனக்குக் கிடையாது. (குறுக்கீடு) ஜாதியே கிடையாது, அதிலே நம்பிக்கையும் இல்லை. நான் கேட்ட ஜாதியெல்லாம், ஏதோ அமர லோகத்திலே ஒரு ஜாதிமலர் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவுதான். அதுகூட யாரும் இதுவரையில் யாரும் பார்க்கவில்லை. (மணியடிக்கபெற்றது)

பார்க்கவில்லை. எனவே ஜாதியே நமக்குத் தேவையில்லை. அவர் சொன்னார் மனித ஜாதி என்று. மனிதர்கள் என்று சொன்னாலே போதும். மனித ஜாதி என்ற அந்தச் சொல்லே நாட்டுக்குத் தேவையில்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நான் பேச வேண்டியது முக்கியமானது. சரியோ தவறோ நாட்டிலே சில உணர்வுகள் இப்போது மேலோங்கி வருகின்றன. பல அடிப்படைகளிலே விரோத புரோதங்கள், காழ்ப்புணர்ச்சிகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே கலவரங்கள், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடந்து வருகின்றன. சிறுபான்மை மக்கள் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்ற ஒரு உணர்வில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் நான் அன்றைக்குக்கூட எடுத்துச் சொன்னேன்.

*முற்பகல் 11-40*

1965-லே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குக்கூட ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராக இருந்தபோதே ஒரு மாநிலத்தில் இரண்டு சதவீதம் முஸ்லீம்கள் இருந்தாலும், அந்த மாநிலத்திலேகூட 10 சதவீதம் போலீஸ் துறையைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து ஒரு ஜி.ஓ.வும் வந்திருந்தது. ஆனால், இதுவரையிலே நடைமுறைக்கு வந்திருக்கிறதா என்றால் இல்லை. 10 சதவீதம் இருக்கட்டும். இப்போது தமிழ் நாட்டினுடைய நிலையை நாம் பார்ப்போமேயானால், இங்கே தமிழ் நாட்டிலே Director General of Police என்ற ரேங்கிலே 4 பேர் இருக்கிறார்கள். I do not know the latest figure. It is subject to correction. 4 பேர் இருக்கிறார்கள். அதிலே ஒருவர் கிருஸ்தவர், மைனாரிட்டி சமுதாயத்தைச் சார்ந்தவர். Additional Director General of Police 8 பேர் இருக்கிறார்கள். அதிலே ஒருவர் கிருஸ்தவர். Inspector General of Police and Deputy Inspector General of Police 50 பேர் இருக்கிறார்கள். அந்த 50 பேரிலே ஒருவர் கிருஸ்தவர். முஸ்லீம் ஒருவரும் இல்லை. இதுவரையிலே முஸ்லீம் ஒருவருமே கிடையாது. கிருஸ்தவர் ஒவ்வொருவராக இருக்கிறார்கள். 50 பேரில் ஒரு கிருஸ்தவர். ஒரு முஸ்லீமும் கிடையாது. Superintendent of Police, Additional Superintendent of Police 15 பேர் இருக்கிறார்கள்'



**திரு. ப. ரங்கநாதன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது ஜாதியை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன், ஜாதியே இல்லை என்று சொல்லிவிட்டு, இப்போது அவர் இந்தப் பதவியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் ஒருவரும் இல்லை, ஒருவரும் இல்லை, என் ஜாதிக்காரர் இல்லை, இல்லை, எங்கள் அதிகாரி இல்லை என்று ஜாதியைப் பற்றி இப்போது மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார்கள். அவர் எதைப் பற்றித்தான் சொல்கிறார், அவர் என்ன அர்த்தத்தில் சொல்கிறார் என்பதை விளக்க வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்களைக் கூப்பிடவில்லை, உட்காருங்கள், டைம் இல்லை, (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து, கிருஸ்தவர் என்று பார்க்காமல் அனைவரையும் நம்மவர் என்று பார்க்கவேண்டும். நம்முடைய கவர்னர், நம்முடைய காவல் துறை, நம்முடைய அதிகாரி என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்தையும் நம்முடையது, நம்முடையது என்று பார்க்கும்போது, மன்மதலீலை படத்திலே ஒரு வசனம் வரும். அதிலே கமலஹாசன் - கணவனிடம் மனைவி சொல்வார். என்ன இப்படி பிரிச்சு பிரிச்சு பேசரேள் எல்லாம் நம்மது, நம்மது என்று. ஆமாம், நம்ம பனியன், நம்ம அண்டர்வேர் அதை எடுத்துண்டு வாடி என்று சொல்வார். ஆகவே, சில இடங்களில் பிரிக்க வேண்டியதை பிரித்துத்தான் ஆக வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு வேறு உதாரணமே கிடைக்கவில்லையா? (சிரிப்பு) (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணன் லத்தீப் அவர்களுக்கு ஜாதி இல்லையே தவிர மதம் உண்டு. எனவே, சிறுபான்மை மதத்திற்காக அவர் பேசுவதிலே நியாயமும் உண்டு.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஜாதி இல்லை என்பது உண்மைதான். ஆனால், மற்றவர்களுக்கு ஜாதி உண்டு என்பதும் உண்மைதான். எனவே. மற்றவர்கள் ஜாதி அடிப்படையிலே தேர்வு செய்யப்படும்போது, அந்த அடிப்படையிலே பெரியார் அவர்கள் சொன்னதைப் போல ஜாதியை வெறுக்கின்ற நாம் ஆண்டாண்டு காலமாக இந்த நாட்டில் உருவாக்கப்படும் ஜாதியை வைத்துத்தான் ஒதுக்கீடுகளைப் பெற்று தாழ்ந்த நிலையில் இருக்கக் கூடியவர்களுக்கு நியாயம் வழங்க முடியும் என்ற அடிப்படையில்தான் ஒதுக்கீடு பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாம் ஜாதியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இன்றைக்கு ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

*முற்பகல் 11-45*

ஆனால், என்னைப் பொறுத்தவரையிலே, நம்முடைய அரசமைப்புச் சட்டப்படிதான் பேசுகிறேன். அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையின மக்களுக்குத் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தனியாக அவர்களுக்கு பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கின்றது அரசமைப்புச் சட்டத்தில். எனவே அந்தச் சட்ட அடிப்படையில் எங்களுடைய சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தால்தான், சிறுபான்மையினத் தன்மையோடு அவர்கள் நிம்மதியாக வாழமுடியும். எனவேதான் அதை நான் வற்புறுத்திச் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து மன்னிக்கவும். முடித்து விடுகிறேன். சில பேர் தகுதியின் அடிப்படையிலேயும், சில பேர் தகுதியின்மையின் அடிப்படையிலேயும், வேலைக்குச் சேர்க்கப்படுகிறார்கள், சேர்க்கப்படாமல் போகிறார்கள் என்பதை மறுக்கவில்லை. அதிலே நியாயம் இருக்கலாம். ஆனால் சில பேர் சில எண்ணத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற காரணத்தாலே அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படாமல் போனால், அது நம்முடைய சமூகநீதி அடித்தளத்தையே தகர்த்து விடும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கின்றேன். அதிகாரபூர்வமாக சொல்லப்பட்டிருக்கின்றதைத்தான் சொல்கிறேன். 150 சூப்பிரண்டென்டென்ட் ஆப் போலீஸ் இருக்கிறார்கள். அதிலே 16 பேர் கிறிஸ்துவர்கள். 6 பேர் முஸ்லீம்கள். மாநிலம் முழுவதும் இப்போது இருப்பதிலே. டெபுடி சூப்பிரண்டென்டென்ட் ஆப் போலீஸ் 450 பேர், அதிலே 41 கிறிஸ்துவர்கள். பதினைந்தே முஸ்லீம்கள். இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் 1960 பேர் இருக்கிறார்கள். அதில் 130 பேர் கிறிஸ்துவர்கள், 102 பேர் முஸ்லீம்கள். சப்-இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் 4075 பேர். கிறிஸ்துவர்கள் 297 பேர். முஸ்லீம்கள் 172 பேர். போலீஸ் கான்ஸ்டபிள்கள் 66,922 பேர். கிறிஸ்துவர்கள் 6,755 பேர். முஸ்லீம்கள் 3,696 பேர். இந்த நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நான் அடிக்கடி கேட்கிறேன், எவ்வளவு பேர்தான் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிறோம்?

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை நினைவூட்டுகிறேன். ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கேள்வி இந்த அவையிலே எழுந்தது. அன்றைக்குத் தமிழகத்திலே முஸ்லீம்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு பதில் கொடுக்கும்போது 5.8 என்றுதான் சொன்னார்கள். இன்றைக்கு நாம் பார்க்கும்போது 5.47 என்று சொல்லப்படுகிறது. நாம் பழைய ஏட்டை எடுத்துப் பார்த்தால் தெரியும். முன்பு இந்தப் பதில் கொடுக்கப்பட்டிருந்தது இந்த அவையிலே. அந்த குறிப்புகளைப் பார்க்கும்போது, அப்போது 5.8 என்பது தெரியும். இப்போது 5.47 என்று சொல்கிறோம். எனக்கு இருக்கிற ஆச்சரியம் என்னவென்றால், பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதை விட்டுவிட்டார்களா முஸ்லீம்கள் என்பதுதான். ஒரு பக்கம் சொல்கிறார்கள், அதே நிலையிலேயே நிற்கிறது ஜனத்தொகை என்று. இன்னொரு பக்கம் சொல்கிறார்கள், அதிக மனைவிகளைக் கட்டிக் கொள்கிறார்கள், அதிக பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இரண்டிலே எது உண்மை என்பதையாவது நான் அறிய விரும்புகிறேன். 25 வருடத்திற்கு முன்பு சொன்னீர்களே என்பதற்காக அதையே இன்றைக்கும் திருப்பிச் சொல்கிறீர்களா? அன்றைக்கு ஒரு பேச்சு இன்றைக்கு ஒரு பேச்சு இல்லை —மாற்றிப் பேசுகிற பழக்கமேயில்லை. அதே பேச்சுதான் எப்போதும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு தனித் துறையை, பிற்படுத்தப்பட்டோருக்கு எப்படி ஒரு தனித் துறையை ஏற்படுத்தியிருக்கிறீர்களோ அப்படி சிறுபான்மையின மக்களுக்கு என்று

ஒரு தனித் துறையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். அதற்குத் தனியாக ஒரு செக்ரட்டரியைப் போட வேண்டும். அதிலேதான் நம்முடைய அமைப்புகளை எல்லாம் இணைக்க வேண்டும். இப்போது Hindu Religious Endowments Board. Wakf Board எல்லாம் கமர்சியல் டாக்சஸ் டிபார்ட்மெண்டோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இரண்டு நிமிடம் கொடுங்கள். டைம் இல்லைதான், இருந்தாலும் நான் என்ன செய்வது. சொல்கிற இடத்திலேதான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழைய மாதிரி பேச முடிந்திருந்தால், இந்நேரம் எனது பேச்சை முடித்திருப்பேன். சட்டசபை நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள், அதை நிறைவுபடுத்துகிறேன். சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது. நான் வெளியே ஒன்றும் சொல்ல முடியாது. உள்ளேதான் சொல்வேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நினைவில் உள்ளேயே வைத்துக் கொண்டு அதே நம்பிக்கையோடு இன்றைக்கு அவர்களிடத்திலே சொல்கிறேன்.

(முற்பகல் 11-50)

எனவே, தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஒரு கோரிக்கையையாவது ஏற்று, சிறுபான்மையினருக்கு என்று தனித் துறையை அமைத்து, தனிச் செயலாளரை நியமித்து அதிலே எங்கள் அமைப்புகளை இணைத்து எங்களுக்கு காவல்துறையில் பத்து சதவிகிதத்திற்குக் குறைவில்லாமல் நியமனங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால், 1965-லே சாஸ்திரி அவர்கள் காலத்தில், எங்கள் அமைப்புகளுக்கு பத்து சதவிகிதத்திற்குக் குறைவில்லாமல் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையே போடப்பட்டுள்ளது. எனவே இதிலே கவனம் செலுத்தி அந்த பத்து சதவிகிதத்தையாவது எங்கள் அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நேரத்தின் அருமை கருதி, இத்துடன் என் உரையை முடித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மாநில ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது



இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். காவல்துறையானது மக்களுடைய உயிரையும், உடைமையையும் பாதுகாக்கின்ற ஒரு துறையாகவும், அமைதியை நிலைநாட்டுகின்ற ஒரு துறையாகவும் இருக்கின்றது. இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில் தான் அமைதியை நிலைநாட்டுவதில் காவல்துறை சிறந்த துறையாகச் செயல்பட்டு வந்தது என்று கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தது. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாநிலத்தில் ஏற்படக்கூடிய இயற்கைச் சீற்றங்கள், தீ வைப்புகள், புயல், வெள்ளம் போன்ற துன்பமான நிகழ்ச்சிகளில்கூட காவல்துறையும், தீயணைப்புத் துறையும் தொடர்ந்து வீரச் செயல்கள் புரிந்து, திறமையாகச் செயல்பட்டு வந்தன என்றும் கருதப்பட்டது. மேலும், மக்களுடைய தீய பழக்க வழக்கங்களிலிருந்து அவர்களை மீட்டு, தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டுவதிலும், மது விலக்குக் கொள்கையை முற்றிலுமாகச் செயல்படுத்துவதிலும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு மாறி வரும் அரசியல் சூழ்நிலை காரணமாக ஆங்காங்கே பயங்கரவாத இயக்கங்களால் தூண்டிவிடப்படும் சாதி மோதல்கள், மத வெறிகள் ஆகியவைகளைத் தடுப்பதில் முற்றிலுமாக சமுதாய நோக்கோடு, உணர்வு பூர்வமாகக் காவல்துறை செயல்படுகிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒன்றை குறிப்பாகச் சொல்லவேண்டும். தமிழகத்தில் கடந்த காலங்களிலும் சரி, இப்போதும் சரி, தென் மாவட்டங்களில் ஆங்காங்கே சாதிக் கலவரங்கள் தலைதூக்குகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவைகளை துப்பாக்கி கொண்டு அடக்கி விடலாம் என்று எண்ணுவதைவிட, துப்பறியும் அதிகாரிகளை நியமித்து அவைகளைக் கண்டறிந்து அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பஞ்சாப் மாநிலத்தில் இதுபோன்ற சாதிக் கலவரங்களை அடக்க காவல் துறையில் துப்பறியும் அதிகாரிகளை நியமித்து, சாதிக் கலவரங்களைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கண்டறிந்து உரிய முறையில் அவைகளை அடக்கியதாகச் சொல்லப்படுகிறது. தமிழகத்திலும் இதில் முன்மாதிரியாகச் செயல்பட்டு அவைகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய நம்முடைய மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள்

அக்கா அவர்கள் சொன்னதில் எனக்குக்கூட முழுமையான உடன்பாடு உண்டு. சாதிக் கலவரங்கள் மற்றும் மத வெறிச் செயல்கள் எங்கு நடைபெற்றாலும், அதற்குத் தலைமைப் பொறுப்பேற்றிருப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதிலும், அங்கே மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஆலோசனைகளை வழங்குவதிலும், அதற்கான முன்னேற்றத் திட்டங்களை வகுப்பதிலும் முனைப்பாகச் செயல்படவேண்டும். அங்கே 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்று நடைபெறக்கூடிய செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். இது தமிழகத்திற்குப் பொருந்தயானதல்ல. தமிழகத்தில் இதை அனுமதிக்க முடியாது. ஏனென்றால், தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட மக்கள், கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளிய, கல்வி அறிவில்லாத மக்கள், தங்களுடைய வாழ்க்கையில் ஊசி முனையில் நின்று கொண்டு, படிப்படியாக முன்னேறி வருகிறபோது, சிறிய தீக்குச்சியால் தீயைத் தீட்டிப்போட்டு, அந்தத் தீயில் குளிர் காய்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்கவே கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை வன்மையாகச் சொல்கிறேன். நான் எந்த ஜாதி என்று சொல்லவில்லை. எந்த ஜாதியினரும் புண்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆகவே தமிழகம் அதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோன்று, சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பிவிட முடியாமல், காவல் துறையினர் முயற்சிகளை எடுத்து திறமையாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கவலைக்குரிய விஷயம் ஒன்றிருக்கிறது. எந்த இடத்தில் எது நடக்கக் கூடாதோ, அந்த இடத்தில் அது நடக்கிறது. எந்தக் காரியத்தில் யார் ஈடுபடக் கூடாதோ, அந்தக் காரியத்தில் சிலர் ஈடுபடுகிறார்கள். காவல் நிலையத்திலேயே உயிரிழப்புச் சம்பவங்கள் நடைபெறலாமா? கற்பழிப்புச் சம்பவங்கள் நடைபெறலாமா? கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு காவல் துறையினர் உதவி செய்யலாமா? இந்த நிலைகள் இன்றைக்கு நிருவாகத்தையே நிலைகுலைய வைத்திருக்கின்றன. காவல் துறை மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு ஒரு அபாயகரமான நிலை [illegible]நவாகியிருக்கிறது. நான் ஒட்டுமொத்தமாகக் காவல் துறையினரைக் குற்றம் சொல்ல விரும்பவில்லை.



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தைப் பிரித்த பிறகு, அந்த மாவட்டத்திற்கு ஒரு திறமையான டி.எஸ்.பி.யை — நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை — நியமித்திருக்கிறார்கள். அவர் வந்த பிறகு கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார். இன்றைக்கும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் காவல் துறையில் கீழ்மட்டத்தில் இருக்கிற அலுவலர்கள் அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. சாராய ரெய்டு என்று அவர் போவதற்கு முன்பே, முதல் நாள் இரவே உரியவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுவிடுகிறது. இதனால் அவர் நம்பிக்கை இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார். அந்த அளவிற்கு சில அலுவலர்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் இன்றைக்குப் பார்க்க முடிகிறது. மாண்புமிகு திரு. சொக்கர் அவர்கள் கூட இதை எனக்கு நினைவுபடுத்தினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் காவல் துறை மானியத்திலே கவனமாகப் பேசிக் கொண்டிருந்தேன். அதனால் துணைத் தலைவர் மாறியது தெரியவில்லை. தலைவர் வந்திருப்பதற்கு மகிழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபு, தலைவரைப் பார்த்துப் பேச வேண்டுமென்பதுதான். பரவாயில்லை, தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 1-3-1997 முதல் 12-4-1997 வரை 7 நபர்கள், 37 வயது, 35 வயது, 36 வயது கொண்ட இளைஞர்கள் காவல் துறையினரால் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். படுகொலை செய்யப்பட்டவர்கள் குற்றம் புரிந்தவர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்கள் குற்றம் செய்தவர்கள்தான். ஆனால் நம்முடைய சட்டத்தின்படி, குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்கக்கூடிய இடம் கோர்ட்; காவல் துறை அல்ல. ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டால், அவருடைய உறவினர் யார் எனக் கண்டறிந்து, அவருக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் காவல் துறையினர், தங்களுடைய வருகைப் பதிவேட்டில் அவர்களுடைய முழு விலாசத்தினைப் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு நடைமுறையில் இருக்கிறதா என்றால் இல்லை. காவல் துறையினர் விசாரணை செய்யும்போது உண்மை

வெளிப்படவில்லை என்பதற்காக அடிப்பது; அதனால் குற்றவாளி உயிர் இழப்பது; பின்னர் காவல் துறையினரே திருட்டுத்தனமாக மருத்துவமனைக்கு அருகிலே, புதரிலே அல்லது காட்டிலே கொண்டுபோய் போடக்கூடிய ஒரு அவலநிலை இருக்கிறது. ஒரு மாதத்திற்குள் 7 கொலைகள் நடந்திருக்கின்றன. இது சரிதானா? இதை காவல் துறையினர் சிந்திக்க வேண்டும். காவல் துறையினருக்கு சமூகப் பார்வை இருக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுப்பதுபோல, காவல் துறையினருக்கும் இதை உணர்த்துகின்ற வகையிலே கண்டிப்பாக பயிற்சி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12-00*

அதேபோன்று, காவலர்கள் தங்களுடைய கடமைகளை முழுமையாகச் செய்வதற்கு, சட்ட ஒழுங்கு நிலைமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில், மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில், அவர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, சென்னையிலும், இன்னும் பல இடங்களிலும், இன்றைக்கு, தாதாக்கள், கூலிப்படைகள் போன்றவைகளை வைத்துக்கொண்டு, கொள்ளை அடிப்பது, கொலை செய்வது போன்ற நிலைமைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்; கொள்ளைகள் தடுக்கப்பட வேண்டும்; திருட்டுக்கள் தடுக்கப்பட வேண்டும். இன்றையதினம், யாரும் தனியாக வீட்டில் நிம்மதியாக வாழ முடியவில்லை. துணையோடுதான் வாழ வேண்டியிருக்கிறது.

மேலும், காவல் துறை மானியத்திற்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே, சமீபத்தில் நடைபெற்ற திருட்டுக்களுக்கான கணக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1995 இல் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 17,140 என்றும், குற்றம் கண்டுபிடிப்புச் சதவிகிதம் 66.7 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேபோன்று, 1996-ல் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 17,811 என்றும், குற்றம் கண்டுபிடிப்புச் சதவிகிதம் 69 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆக, மூன்று சதவிகிதம் அதிகமாகக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, குற்றங்கள் கண்டுபிடிப்புச் சதவிகிதம் 66-ல் இருந்து 69 ஆக உயர்ந்திருந்தாலும், கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1995-ல் 17,140 என்றிருந்தது, 1996-ல் 17,811



ஆக உயர்ந்துள்ளது. ஆகவே, திருட்டுக்களின் எண்ணிக்கை அதிகமான காரணத்தினால்தான், குற்றங்களும் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதுதான் 69 சதவிகிதம். இதன்படி பார்த்தால், தவறு என்பது கட்டுப்படுத்த முடியவில்லை என்பதுதான் தென்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சிறிய திருட்டு, பெரிய திருட்டு என்று திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று, இன்னொன்று. நம்முடைய 10 மாத கால ஆட்சியில் 17 தடவை துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கின்றது. இதில் 15 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இதனை எந்த அளவிற்குத் தவிர்க்க முடியும் என்று நீங்கள்தான் காவல் துறையினருக்கு அறிவுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, கடந்த கால ஆட்சியில், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகம், இன்றைக்கு இருக்கின்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது போடப்பட்டிருக்கின்ற பொய் வழக்குகள், ஜனநாயகபூர்வமான முறையில் இந்த இயக்கங்கள் போராட்டங்களை நடத்த முடியாத அளவிற்குப் போடப்பட்டிருக்கின்ற பொய் வழக்குகள் நீக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தும்கூட, அந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளெல்லாம் நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தொழிலாளர்களுடைய போராட்டங்களில் காவல் துறையினரது தலையீடு என்பது, நான் முற்றிலும் சரியல்ல என்று சொல்லவில்லை, அவர்கள் சமரசத்திற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். அதற்கு மாறாக, வசதி வாய்ப்பினைப் பெற்றிருக்கின்ற பெருமுதலாளிகளுக்குச் சாதகமாக வழக்கு பதிவு செய்யப்படுகின்ற நிலையில், அந்தத் தொழிலாளர்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்களின் மீது எந்தவொரு விசாரணையும் இல்லாத அளவிற்கு, ஒருதலைப்பட்சமாக சட்டத்தினைப் பயன்படுத்தியதன் விளைவாக, தமிழகத்தில் என்றும் இல்லாத அளவிற்கு, சமீபத்திலே இரண்டு முறைகள், காவல் நிலையத்தினைப் பொதுமக்கள் தாக்கியிருக்கின்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதற்கு என்ன காரணம்? பொதுமக்கள் இப்படிச்

செய்யலாமா? காவல் துறையினர்மீது கல் எறியலாமா? இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கேயாவது உண்டா? மக்களுக்காக, மக்களுடைய நன்மைக்காக, அவர்களுக்குப் பயனாக, நாட்டினுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய காவல் துறையினர் மீது மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில், கல்லெறியக்கூடிய நிலையை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஊர்க்காவல் படை, அவர்களுக்கு பதக்கமெல்லாம் கொடுக்கிறோம். அதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியத்தில், படிகளைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இனிமேல் எல்லாம் கோரிக்கைகள்தான். இந்தப் பதக்கங்கள் வழங்குகின்ற நிலையிலேகூட, காவல்துறை அதிகாரிகள் பலபேர், தங்களுக்குச் சாதகமாக இருக்கின்ற அதிகாரிகளுக்கு, தங்களுடைய பணிகளையும் சேர்த்துப் பார்க்கின்ற அதிகாரிகளுக்கு, அப்படிப்பட்டவர்கள் எந்தவித வீர தீரச் செயல்களிலும் ஈடுபடாத நிலையில் இந்தப் பதக்கங்கள் வழங்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. அதற்கு ஒரு குழு இருக்கின்றது என்றும், அதனால் பரிசீலிக்கப்படுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது. ஆனால், அது உண்மையல்ல. உண்மையாகச் செயல்படக்கூடியவர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும். சமீபத்திலே, மனித நேயத்தை விரும்பக்கூடிய ஆயிரக்கணக்கான முஸ்லீம் மற்றும் இந்து மக்களுடைய நல்லிணக்கத்தைச் சிதைக்கக்கூடிய விதத்தில் அமையவிருந்த சம்பவத்தினைத் தடுத்திடும் வகையில், காவல் துறையினர் கொடுங்கையூரில் ஏராளமான வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். திறமையாகச் செயல்பட்ட காவல்துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே, மனித நல்லிணக்கத்தைப் பாதுகாக்கக்கூடிய விதத்திலே, அதைக் கண்டுபிடித்தார்கள். அதுகுறித்து, இன்றைக்கு பத்திரிகையிலே வந்த செய்தியை நான் பார்த்தபோது, 4 காவல்துறை அதிகாரிகள், அதிலே முழுமையாக, தங்களுடைய உயிரினை துச்சமென மதித்து, அந்த வீடுகளை உடைத்து கண்டுபிடித்ததாகத் தகவல் வந்திருந்தது. திருவாளர்கள் கருப்பண்ணன், கிருஷ்ணமூர்த்தி, இராஜேந்திரன், முரளி, சாரங்கன் போன்றவர்களுக்குத் தாங்கள் கண்டிப்பாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும். அவர்களுக்குப் பதக்கங்கள் வழங்க வேண்டும். ஆக, அப்படி அதைக் கண்டுபிடிக்க தைரியமாகப் போனவர்களின் பெயரில்



மாற்றம் வரக்கூடாது என்பதற்காக, நான் அன்றைக்கு அவர்களுடைய பெயர்களை 'டைரி'யிலே குறித்தேன். ஆகவே, அப்படிப்பட்ட வீரச் செயல்களைப் புரிந்தவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதக்கம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல், காவல்துறை களப் பணியாளர்களும், மற்ற பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டுமென்று நீண்ட நாளாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வாறு வழங்குவதோடு, பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும்.

அதேபோல், 1991-ம் ஆண்டு, இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடிந்து, இன்னும் பதவி உயர்வு கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பதவி உயர்வினை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், 1989-ஆம் ஆண்டு நேரடித் தேர்வு மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் மற்றும் சிறப்புக் காவலர்களுக்குக்கூட பயிற்சி அளிக்கப்பட்டு, சட்டம்-ஒழுங்குப் பிரிவிலேயே பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அவர்கள் இதுகுறித்துத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் அந்தப் பதவி உயர்வு அந்தப் பணியிலேயே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், உதவி ஆய்வாளர்கள், 12 ஆண்டுகளுக்கு மேலாக, பணியாற்றக்கூடியவர்களுக்கு இளநிலை உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று தங்களுடைய் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், தமிழ்நாடு பூராவும், நடக்கின்ற பொதுக் கூட்டங்களிலே, 93 பேர் 'ரிப்போர்ட்டர்கள்,' எந்தக் கட்சியினர் பேசினாலும், இரவு 12 மணிக்கு, நள்ளிரவு 1 மணிக்கு வந்து இருந்து, அவற்றைப் பதிவு செய்கிறார்கள். அவர்கள் வருவதற்கு எந்தவிதமான வாகனமும் இல்லாமல், அங்கேயே நின்று கொண்டு, பலவித இன்னல்களுக்கு ஆளாகக்கூடியவர்களுக்கு, மத்திய அரசுக்கு இணையாக — இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே தெரியும் — ஊதியங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 1992-ம் ஆண்டு, தேர்வு செய்யப்பட்ட 370 பேர்களுக்கு பணி உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. போலீஸ் மானியத்தில் பேசுகின்ற இந்த நேரத்தில், இந்த வாரம் வந்திருக்கிற எல்லா வாரப் பத்திரிகைகளிலுமே, நம்முடைய போலீஸ் துறையைப் பற்றி தலையங்கம் எழுதாத பத்திரிகையே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய விமர்சனத்தை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பத்திரிகைகளுமே, எந்தவித வேறுபாடும் இல்லாமல், போலீஸ் துறையைப் பற்றி மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள். நான்கூட, இங்கே பேசுகிறபோது, நம்முடைய போலீஸ் துறையைப் பற்றிப் பாராட்டுகள் ஏராளமாகச் சொல்ல வேண்டுமென்றுதான் வந்தேன். ஆனால், பத்திரிகைகளைப் படித்த பிறகு, பாராட்டு தெரிவிக்கிற மனோநிலை மாறிவிட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் அத்தனை பேரும் பல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷனில் நடக்கின்ற 'கஸ்டடி டெத்' ஒரு மிகப்பெரிய கொடுமை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இங்கே, நம்முடைய சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள்; 234 சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் பாதுகாப்பது நம்முடைய சபாநாயகருடைய கடமை. அதேபோல், போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு கைதி கொண்டு வரப்பட்டு விட்டால், அவர் போலீஸ் ஸ்டேஷனுடைய சொத்தாக மாறவேண்டும். அவர்கள்தான் அவருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமே தவிர, அவர்களே, அவரைத் துன்புறுத்தி, அடித்து, கொலை செய்கின்ற அளவுக்கு, உயிர் போகின்ற அளவுக்கு நடத்தக் கூடாது என்பதை நான் மிக வன்மையாகக் கண்டித்து, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வந்துவிடக் கூடாது என்பதற்காக நம்முடைய போலீஸ் அதிகாரிகளுக்கும், அரசுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

1-3-97-ல் தொடங்கி 23-4-97 வரை நடந்த, போலீஸ் நிலையத்தில் ஏற்பட்ட கொலைகளைப் பற்றியெல்லாம் இங்கே ஒரு பொதுத் துறை



தகவல் சேகரித்து எனக்குக் கொடுத்திருக்கிறது. காண்டீபன், வயது 37, மாமங்கலம் 1-3-97 அன்று கடலூர் சிறையில் கொல்லப்பட்டிருக்கிறார். செல்லப்பா, வயது 42, தெற்குவள்ளியூர் 4-3-97 அன்று பாளையங்கோட்டைச் சிறையில் கொல்லப்பட்டிருக்கிறார். சந்தானம், மணிக்கிராம்விடுதி 6-3-97 அன்று திருவோணம் காவல் நிலையத்தில் கொல்லப்பட்டிருக்கிறார். இராமசாமி வயது 40, 22-3-97 அன்று திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் கொல்லப்பட்டிருக்கிறார். பெரியதங்கவேல் வயது 52, 1-4-97 அன்று கடம்பூர் காவல் நிலையத்திலே கொல்லப்பட்டிருக்கிறார். தக்கையா வயது 37, 9-4-97 அன்று கடம்பூர் காவல் நிலையம், சிதம்பரனார் மாவட்டத்திலே கொல்லப்பட்டிருக்கிறார். ரமேஷ், இது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. 23 வயது 12-4-97 அன்று மைலாப்பூர் லஸ் கார்னர் காவல் நிலையத்தில் கொல்லப்பட்டிருக்கிறார். இப்போது ஒரு தந்தி வந்திருக்கிறது. நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் - குழித்துறை-கன்னியாகுமரி மாவட்டம், செண்பகத்தரிசு கிராமத்தைச் சேர்ந்த ராஜாமணி என்பவரின் மகன் சந்திரதாஸ் என்பவரை அருமனைப் போலீசார் 14-4-97 இரவு கைது செய்து 21-4-97 அன்று நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு, அங்கிருந்து குழித்துறை சப்-ஜெயிலுக்கு அனுப்பப்பட்டு அங்கேயே போலீசாரால் அடித்துக் கொடுமைப்படுத்தப்பட்டு 23-4-97 அன்று இரவு அங்கே இறந்துவிட்டார் என்று கொடுத்த தந்தி காலையிலே தான் எனக்குக் கிடைத்தது. இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கும்போது போலீசுக்காக வாதாடிப் பேசுகிற ஒரு மனநிலையே நமக்கு மாறிவிட்டது என்பதனை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே இல்லாத அளவுக்கு இங்கே, காவல் நிலையங்களில், காவல் துறையின் சித்திரவதை காரணமாக ஏற்படுகிற இழப்புகள், மற்றவற்றைக் கவனிப்பதற்காக மனித உரிமை குறித்த ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு அமைத்ததோடு நின்றுவிடாமல், இப்படி இறந்தவர்களுக்கெல்லாம் நஷ்டஈடு கொடுக்கிற வகையில் நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு நம்முடைய கொடுங்கையூர் சம்பவம், அது நாமெல்லாம் இந்தச் சட்டமன்றத்தில் பாராட்டிய ஒன்று. நம்முடைய போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய உயிரையே பணயம் வைத்து அந்தக் கொடுங்கையூர் என்ற இடத்தில் வன்முறையாளர்களைப் பிடித்து,

இந்தச் சென்னை நகரத்தையே அழிக்கக்கூடிய அந்தக் கருவிகளை எல்லாம் எடுத்து வெற்றிகரமாகச் செயலாற்றிய அவர்களுக்கு நம்முடைய அரசும் சரி, மத்திய அரசும் சரி உரிய மரியாதை கொடுக்கவில்லை என்று நான் அறிகிறேன். அவர்களுக்கு மிகப்பெரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் பதவி உயர்வுகள், மற்றும் பரிசுப் பொருட்கள் எல்லாம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக காவல் துறையைப் பொறுத்தவரை இங்கே ஏராளமான குற்றச்சாட்டுக்களை அனைவரும் சொன்னாலும்கூட, நானும் இங்கே ஒன்றிரண்டு குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன். கொடுங்கையூரில் வெடிகுண்டு வெடிப்பதற்கு முன்பே அவற்றைப் பிடித்துவிட்டார்கள் என்று சொல்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதே நேரத்தில் ஏராளமான இடங்களில் வெடித்திருக்கின்றன. நம்முடைய துக்ளக் பத்திரிகையில் - நான் பத்திரிகையை இங்கே படிக்க விரும்பவில்லை, காரணம் அதை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் படித்து இருப்பார்கள் - ஒவ்வொரு பத்திரிகையிலும் வந்த செய்திகளை எல்லாம் பட்டியல் இட்டு மிக விவரமாக எந்த ஊரில் பாம் வெடித்தது, எந்த ஊரில் பாம் பிடிக்கப்பட்டது என்பதை எல்லாம் மிகத் தெளிவாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். *15-10-96* முதல் *13-4-97* வரை வெடிகுண்டு வெடித்த சம்பவங்கள் *33* நடந்திருக்கின்றன. அதில் ஏராளமான பேர் உயிரிழந்திருக்கிறார்கள். காயப்பட்டிருக்கிறார்கள், பலர் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதுபோல *16* இடங்களில் வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-15*

நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட மாவட்ட வாரியாக வெடி குண்டுச் சம்பவங்களை பட்டியலிட்டு காண்பித்திருக்கிறார்கள். *186* இடங்களில் வெடி குண்டுச் சம்பவங்கள் நடந்ததாக பட்டியலில் காண்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு *1996-97*-ல் நம்முடைய கொள்கை விள்க்கக் குறிப்பில் *39*-ஆம் பத்தியில் மாவட்ட வாரியாக வெடி குண்டுச் சம்பவங்கள் *127* என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அது *186*-ஆக வந்திருக்கிறது. ஆக வெடி குண்டு என்பது இந்த நாட்டில் பரவலாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. *59* சம்பவங்கள் அதிகரித்திருப்பதைப் பார்க்கும் போது இந்த நாட்டில் போலீஸ் நிர்வாகம் நடக்கிறதா என்கிற சந்தேகம்



நமக்கு ஏற்படுகின்றது - ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும்- என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் சென்ற போலீஸ் மானியத்தில் சொன்னார்கள். உதாரணமாக ஒரு இடத்தில் ஒரு கொலை நடந்து விட்டது என்று சொன்னால், ஒரு தவறு நடந்துவிட்டது என்று சொன்னால் அந்த இடத்திலே மட்டுமல்லாமல் எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் கம்ப்ளைன்ட் செய்யலாம் என்று சொன்னார்கள். அதுமாதிரி சொன்னார்களே தவிர அது செயல்பாட்டுக்கு வரவில்லை என்பதை நான் ஆதாரபூர்வமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள் இந்த சட்டமன்றத்திலேயே இதுகுறித்து எழுப்ப முயற்சி செய்தார்கள். ஆனால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் இப்போது முதலமைச்சர் அவர்கள் தயாராக இல்லை, அதனால் பேசவேண்டாம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் என்னிடம் அந்தக் கருத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு அவர்கள், அவர் குறிப்பிட்ட வழக்கிலே போலீசார் புகாரைப் பதிவு செய்ய மறுத்தார்கள் என்று சொன்னார்கள். நான் உடனடியாக என்னுடைய அறைக்கு வாருங்கள், முதலமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பேச இருக்கிறார்கள் என்று சொல்லி, அவரை அறைக்கு அழைத்துச் சென்று மேல் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்த வழக்கைப் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது என்று நம்முடைய சபாநாயகர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் *17-4-1997* அன்று ஏற்பட்ட இந்தச் சம்பவம், அடையாறு எண் *1* கிளர்க்கேட் ரோட்டில் உள்ள வீட்டில் சாந்தி துர்கா என்ற *28* வயது பெண்ணை அவருடைய கணவனும், மாமனாரும் சேர்ந்து கொலை செய்துவிட்டு, அந்தப் பிணத்தை வள்ளியூருக்கு கொண்டு சென்று அங்கே தற்கொலையாக இறந்துவிட்டதாகச் சொல்லி, பிணத்தை அடக்கம் செய்யுங்கள் என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இங்கே அந்தத் தகவல் தெரிந்து சென்னையில் கம்ப்ளைன்ட் கொடுத்தால் இங்கே இவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். வள்ளியூரில் கம்ப்ளைன்ட் கொடுத்தால் அங்கேயும் ஏற்க மறுக்கிறார்கள் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எனக்கு தகவல்

கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் இந்த அவையிலே அறிவித்தபடி இது நாட்டில் செயல்படுத்தப்படவில்லை என்பதற்கு நான் ஆதாரத்தோடு இதைச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு. விதி 174-ன்கீழ் பதிவு செய்து இருக்கிறார்கள். விதி 302-ன் கீழ் பதிவு செய்யவில்லை என்பதுதான் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினருடைய குற்றச்சாட்டு. அதையும் நான் காவல் துறை தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, பிரேதப் பரிசோதனை விசாரணை அறிக்கை வந்த பிறகு, அந்த விதி மாற்றப்படும் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்து நம்முடைய காவல் நிலையங்களில் கொடுக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி எல்லாம் முறையாக ஆய்வு செய்கிறார்களா என்ற ஒரு சந்தேகம் நமக்கெல்லாம் ஏற்படுகிறது. ஏராளமான ஐ.ஜி.-க்கள் இருக்கிறார்கள். இரண்டு ஐ.ஜி.-க்கள் கடந்த ஒரு மாதமாக வேலை இல்லாமல், வேலை கொடுக்கப்படாமல் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். 2 ஐ.ஜி.-க்கள்- எவ்வளவு பெரிய பதவி என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்—அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வேலை இல்லை. இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு வேலை கொடுங்கள், வேலை கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு கம்பல்சரி வெயிட்டிங்கில் இருப்பவர்களையாவது எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அனுப்பி அங்கே போலீஸ் நிலையங்களில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை எல்லாம் ஓரளவுக்கு ஆய்வு செய்வீர்களானால் இந்த நாட்டு மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ளவர்களுக்கு ஒரு அச்சம் ஏற்படும் என்கிற முறையிலே இன்ஸ்பெக்ஷன் வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

நம்முடைய போலீஸ் அதிகாரிகள் மத்தியிலே ஏராளமாக கருத்து வேறுபாடுகள் இருப்பதாக பத்திரிகைகளிலே நாள்தோறும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே கூட, சென்னை மாநகரத்தின் கமிஷனர் அவர்களுக்கும், கூடுதல் கமிஷனர் அவர்களுக்கும் ஏராளமான கருத்து வேறுபாடு, யார் யாருக்கு, - என்ன அதிகாரம் என்றெல்லாம் பத்திரிகையில் பேட்டியே வந்திருக்கிறது. கமிஷனரைப் பார்த்தும் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். இணைக் கமிஷனரையும் பார்த்து பேட்டி



அளித்திருக்கிறார்கள். இரண்டு பேட்டியும் பத்திரிகையிலே வந்திருக்கின்றது. இவர்களுக்குள்ளேயே இவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தால், அப்புறம் நம்மை யார் காப்பாற்றுவது?

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த தெய்வத்திருமகன் முத்து இராமலிங்கம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்வார்கள். 'மங்கை சூதகமானால் கங்கையிலே குளிக்கலாம், கங்கையே சூதகமானால் எங்கே போய் குளிப்பது' என்று ஒரு கருத்து சொல்வார்கள். அது போல நாங்கள் சண்டை போட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம். போலீசே சண்டைப் போட்டுக்கொண்டால் நாம் எங்கே போவது? இப்படி ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே நிலவுகிறது. இன்றைக்கு எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. இந்தச் சென்னை நகரில் மிக முக்கியமான நான்கு பேரை கொலை செய்வதற்கு ஒரு கூட்டம் தயாராக இருப்பதாகவும், அந்தச் செய்தி போலீஸ் துறைக்குத் தெரிந்து, நம்முடைய அரசுக்கு அந்தச் செய்தி வந்து ஒரு மாதமாகிவிட்டதாகவும், அப்படி ஒரு மாதமாகியும் கூட, இன்னமும் அது பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற ஒரு செய்தியைச் சொன்னார்கள். இதையெல்லாம் நம்முடைய சிந்தனைக்கு நான் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு இது மிகவும் கடுமையான செய்தி. ஏனென்றால் நான் ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் அந்த விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. இப்படிப்பட்ட ஒரு கடுமையான சூழ்நிலையில் நம்முடைய போலீஸ் என்பது நம்முடைய மக்கள் மத்தியிலே ஒரு பீதியை இன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. 'இந்து' பத்திரிகையில் 22-ஆம் தேதி ஒரு செய்தி வந்திருக்கிறது. சென்னை நகரத்தில் தி.நகரில் 1991-ஆம் ஆண்டு ஒரு கொலை நடந்திருக்கிறது. அந்தக் கொலையைக் குறித்து போலீஸ் கேஸ் போட்டார்கள். 7 பேர் சேர்ந்து அந்தக் கொலையை செய்ததாக வழக்கு. 7 பேரையும் 22-ஆம் தேதி அந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்து போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு கவனக் குறைவாக அந்த வழக்கினை நடத்தினார்கள் என்று, மிகக் கடுமையாக, போலீஸ் துறை மீது ஒரு குற்றச்சாட்டினைச் சொல்லி விடுதலை பண்ணிவிட்டார்கள். இதனை எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால் ஒரு உயிர் என்பது ஒரு சாதாரணமானது அல்ல, அதை நம்முடைய போலீஸ் துறையினர் மிகக் கவனமாகப் பார்க்க வேண்டும். 'இந்து' பத்திரிகையில், 22-4-1997-இல் "Seven acquitted of murder: Court indicts Police" என்ற செய்தி வந்திருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், ஆகஸ்ட் மாதம்

22 ஆம் தேதி, 1991-இல் கொலை நடந்திருக்கிறது. ஆனால் கோர்ட்டுக்கு அது குறித்து தகவல் எப்போது கொடுத்திருக்கிறார்கள் என்றால் They were sent to the Court only on December 3, 1991. பிறகு அதில் இருக்கிற நிலைகள் எல்லாம் சொல்கிறார்கள். போலீசினுடைய அக்கறையின்மை காரணமாகத்தான் அந்த அநியாயமான கொலைக்கு 'எவிடன்ஸ்' இல்லாமலே போய்விட்டது. அந்த நீதிபதி போலீஸ் அதிகாரிகளுடைய வேலை என்ன என்றே எனக்கு தெரியவில்லையென்று மிக வேதனையோடு தன்னுடைய ஜட்ஜ்மெண்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் எதற்காக இங்கே நான் சொல்கிறேன் என்றால், இவ்வளவு போலீஸ் இருந்தும், அதுவும் சென்னை நகரத்திலேயே, ஒரு கொலையை நம்மால் உருப்படியாகக் கண்டுபிடித்து கேஸ் நடத்தவில்லையென்று சொன்னால் நம்முடைய போலீஸ் துறைக்கு உள்ள மரியாதை குறைந்துவிடும் என்பதற்காகத்தான் இதனை நான் இங்கே சொல்கிறேன்.

பிறகு இங்கே நம்முடைய சென்னை நகரத்திலேயே, ஏராளமான நிதி நிறுவனங்கள் கொள்ளைக் கூட்டமாக மாறி மக்களுடைய பணத்தையெல்லாம் சுரண்டிய கதை நமக்குத் தெரியும். நம்முடைய போலீஸ் துறை மிக வேகமாகச் செயல்பட்டு, ரூ. 170 கோடிக்கு கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் ரூ. 103 கோடிக்கு பிடிக்கப்பட்டிருப்பதாக நமக்குத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு வட்டி என்னவாகிறது, உடனே கொடுக்க வேண்டியது தானே. ஏன் அதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? போலீஸ் அதிகாரிகளுக்கு இப்போது ஒரு மேனியா வந்துவிட்டது. டி.வி.யைப் பிடித்து ஒரு விழா நடத்தி கொடுக்க வேண்டுமென்கிற உணர்வு வந்துவிட்டது. தயவு செய்து இந்த டி.வி.காரர்கள் பக்கத்திலே அவர்கள் போகக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். டி.வி., டி.வி. என்ற சின்னத்தின் காரணமாக 103 கோடி ரூபாயை...

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் தெரிந்த எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட இப்படி ஒரு தவறான வியாக்கியானம் செய்யக்கூடாது. ஏனென்றால், கைப்பற்றப்பட்ட பொருள் எதுவாக இருந்தாலும், நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்டு, விசாரணை முடிந்த பிறகுதான் உரியவர்களுக்கு அதைக் கொடுக்க முடியும்.

பிற்பகல் 12-25

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இதிலே என்ன விசாரணை வேண்டியிருக்கிறது? பணம் கிடைத்துவிட்டது, கொடுத்துவிடலாம்.



இதற்கு விசாரணை தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, மதுவிலக்கு என்பது எங்களுடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய மிகத் தீவிரமான கொள்கை. எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், கள்ளுக் கடைகளை எல்லாம் எடுத்து விடுங்கள், சாராயக் கடைகளைத் திறந்து விடுங்கள் என்று இங்கே பேசியதாக என்னிடத்திலே சொன்னார்கள். அவர் பேசியது என்னவென்றால், கள்ளச்சாராயம் இந்த நாட்டில் ஆறாக ஓடிக் கொண்டிருக்கிறது; சில சமூக விரோதிகள் அந்தச் சாராயத்தை வைத்து பணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; அதனால், சாராயத்திற்கான கட்டுப்பாட்டை எடுத்துவிடலாமே என்ற ஆதங்கத்திலே அவர் சொன்னாரே தவிர, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைக்கு விரோதமாக அவர் பேசினார் என்று கருதக்கூடாது...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு தேவையில்லை, சாராயக் கடைகளைத் திறக்கலாம் என்று திரு. ஈஸ்வரன் அவர்கள் சொன்னது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் கொள்கையல்ல என்று மறுத்திருக்கிறீர்கள். நன்றி கூறுகிறேன். பாராட்டுகிறேன். ஆனால், நேற்றையதினம் டாக்டர் மோசஸ் அவர்கள், இலவச மின்சாரம் தரவேண்டிய தேவையில்லை என்று சொன்னார். அது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா, அல்லது அவருடைய தனிப்பட்ட கொள்கையா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மோசஸ் அவர்கள் விவசாயி இல்லை. அவர் ஒரு டாக்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் விவசாயம் பண்ணுவதாகச் சொன்னார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நாங்கள் எல்லாம் உண்மையான விவசாயிகள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் உட்காரவேண்டும். உங்களுக்கு அனுமதியில்லை, உட்காருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அந்தக் கருத்து மோசஸ் அவர்களுடைய சொந்தக் கருத்துதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இனாமாக மின் இணைப்புக் கொடுப்பது வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய காவல் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஏராளமான சிரமங்கள் இருக்கின்றன. நாம் குறையை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அவர்களுக்கு இருக்கின்ற சிரமங்களையும் சொல்லியாக வேண்டும். போலீஸ்காரர்கள் பஸ்ஸிலே போகின்றபோது அவர்கள் போலீஸ் உடையை அணிந்து செல்கிறார்கள். அப்போது அவர்களிடம் பஸ் கண்டக்டர் டிக்கட் எடுக்கவேண்டுமென்று சொல்கிறார். அப்படி டிக்கட் எடுக்கச் சொல்லுகின்றபோது, அந்தப் போலீஸ்காரர், நாம் போலீஸ் உடைதானே போட்டிருக்கிறோம். டியூட்டியில்தானே போகிறோம். ஆனால் கண்டக்டர் டிக்கட் எடுக்கச் சொல்லுகிறாரே என்று அவருக்கு வேதனையாக இருக்கிறது. சென்ற தடவை சட்டசபையிலே பேசும்போதுகூட நான் சொன்னேன். போலீஸ்காரர்களுடைய மரியாதையை நாம் காப்பாற்ற வேண்டுமென்றால், அவர்களுடைய சம்பளத்திலிருந்து ரூபாய் 25 அல்லது 30-ஐப் பிடித்தம் செய்து பஸ் பாஸ் ஒன்றை வழங்குவீர்களானால், அவர்கள் எந்த பஸ்ஸில் வேண்டுமானாலும் அதைக் காண்பித்து, அவர்களுடைய டியூட்டியைச் செய்வதற்கு பஸ்ஸில் பயணம் செய்ய ஏதுவாக இருக்கும் என்று சொன்னேன். இந்த முறை பல மாநிலங்களிலும் அமல்படுத்தப் பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். ஆனால், நாம் பேசுவதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறார்களா என்ற சந்தேகம் இப்போது வருகிறது. சட்டசபையிலே நாம் எதற்காகப் பேசுகிறோம் என்ற எண்ணம்கூட வந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி பஸ் பாஸ் முறை செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால், புதுக்கோட்டையில் ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கவே நடந்திருக்காது.

புதுக்கோட்டையில் நடந்த சம்பவம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். தேர்தல் நேரத்திலே ஒரு போலீஸ்காரர் புதுக்கோட்டையிலிருந்து திருச்சிக்கு பஸ்ஸிலே போகிறார். போகிற வழியில் அவரிடம் பஸ் கண்டக்டர் டிக்கட் வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார். அப்பொழுது கண்டக்டரிடம் அந்த போலீஸ்காரர், நான் டியூட்டியில் போகிறேன், நீ டிக்கட் கேட்கிறாயே என்கிறார். அதற்கு, கண்டக்டர், இல்லை, இல்லை, கட்டாயம் நீங்கள் டிக்கட் எடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார். பிறகு பெரிய சண்டை எல்லாம் வந்து, கடைசியாக போலீஸ்காரர் டிக்கட் வாங்கிவிட்டார். ஆனால், அந்தக் கோபம் போலீஸ்காரருக்குத் தணியவே இல்லை. மறுநாள் பஸ் ஸ்டாண்டில் அந்தக் கண்டக்டர் வருவார் என்று காத்துக் கொண்டிருந்தார். கண்டக்டரும் டியூட்டியை முடித்துவிட்டு வெளியே வந்தார். உடனேயே இந்தப் போலீஸ்காரர் ஓடிப்போய்



பாய்ந்து, திருடனைப் பிடிப்பதுபோலப் பிடித்து, அடி அடி என்று அடித்து, தெருவிலே இழுத்துக்கொண்டு வந்தார். அப்போது அங்கேயிருந்த மக்கள் எல்லாம் பார்த்து கொதித்தெழுந்து, ஐயாயிரம் பேர்கள் திரண்டு அந்தப் போலீஸ்காரரைச் சூழ்ந்து கொண்டபோது, அங்கேயுள்ள எஸ்.பி. ஓடிவந்து பிரச்சினை என்ன என்று கேட்டபோது, பொதுமக்கள் அவரிடம் என்ன சொன்னார்கள் என்றால், ஒரு பாவமும் அறியாத கண்டக்டரை இந்தப் போலீஸ்காரர் அடித்துவிட்டார். அதனால், இவர் மேல் நடவடிக்கை எடுத்து, ஜெயிலிலே தள்ளாமல் விடமாட்டோம் என்றார்கள். அப்போது அந்த எஸ்.பி. மக்களுடைய கோபத்தைத் தணிப்பதற்காக, அந்தப் போலீஸ்காரரை அரெஸ்ட் செய்து, காவல் நிலையத்திற்குக் கொண்டுபோய் லாக் அப்பில் வைத்துவிட்டார். இப்படிச் செய்த பிறகு அங்கேயுள்ள மற்ற போலீஸ்காரர்கள் சும்மா இருப்பார்களா? அங்கேயுள்ள போலீஸ் அதிகாரிகள், காவலர்கள் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து பெரிய போராட்டம் ஒன்றைத் தொடங்கினார்கள். அதன் பிறகு சென்னையிலே இருந்து மாநில போலீஸ் அதிகாரி, திரு. காளிமுத்து, இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் அங்கே சென்று நிலைமையைக் கேட்டறிந்து, போலீஸ் அதிகாரிகள் மத்தியில் அந்த மாவட்டப் போலீஸ் அதிகாரியை மன்னிப்புக் கேட்கச் சொன்னார். அவரும் மன்னிப்புக் கேட்டார். அதன் பிறகு, பிரச்சினை ஓரளவு சுமூகமாக முடிந்தது. இப்படி ஒரு சூழ்நிலை வராமல் இருப்பதற்காகத்தான், நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் சொன்னேன். நான் சொல்லியதை நீங்கள் கேட்டிருந்தால், இந்தப் புதுக்கோட்டை நிகழ்ச்சி நடந்திருக்காது. அதற்காகத்தான் நான் சொல்கிறேனே தவிர வேறொன்றும் அல்ல. என்னுடைய யோசனைகளைக் கேட்க வேண்டியது இந்த அரசினுடைய கடமை. நான் சட்டசபையிலே பேசுவதை, வேடிக்கையாக எடுத்துக் கொண்டீர்களேயானால், அதனுடைய பலனை அனுபவிக்க வேண்டியது நம்முடைய அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அடுத்து, சென்னை மாநகர ஆயுதப் படைக் காவலர்களுக்கு டி.ஏ. கொடுப்பதில்லை என்ற கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். சென்னையிலே இருக்கின்ற ஆயுதப் படை போலீசாரை அழைத்து, கடலூருக்கு இரண்டு கைதிகளைக் கூப்பிட்டுச் செல்லுங்கள் என்று சொன்னால், அவர் கையிலே காசு இருக்காது; அந்தக் கைதிகளைக் கூப்பிட்டு, நீங்கள் ஏதாவது செலவுக்குக் காசு வைத்திருக்கிறீர்களா

என்று கேட்கிறார்; இல்லை என்று சொன்னால், கைதிகளின் சொந்தக்காரர்களை அழைத்து வரச்சொல்லி, கடலூருக்குப் போக எங்களிடம் காசு இல்லை, நீங்கள்தான் செலவழிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்; இதனால் என்ன ஆகிறது என்றால், இடையிலேயே கைதி தப்பிக்கக்கூடிய சூழ்நிலை வருகிறது. ஆகவே இந்த எ.ஆர். போலீசார்களுக்கு, மற்ற மாவட்டங்களில் கொடுப்பதுபோல, டி.ஏ. கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கைதிகளைக் கொண்டுச் செல்கின்ற பணியை ஆயுதப் படை போலீசாரிடம் ஒப்படைக்காமல் — ஏற்கெனவே ஒரு கருத்து இருந்தது — நம்முடைய ஜெயிலில் இருக்கின்ற ஜெயிலர்களே இந்தக் கைதிகளை கோர்ட்டுக்குக் கொண்டு செல்லலாம். ஏனென்றால் கைதிகளைப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கைதி என்ன செய்வான்; அவனுடைய சொந்தக்காரர்கள் யார், யார் என்று அவர்களுக்குத் தெரியும்; அவன் என்னென்ன திருட்டுத்தனமெல்லாம் செய்வான் என்று அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான், இந்தக் கைதிகளைக் கொண்டு செல்கின்ற பணியை ஜெயிலர்களிடம் ஒப்படைக்கலாம் என்று, நம்முடைய அரசுக்கு யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

பிறகு நம்முடைய போலீஸ்காரர்களுக்கு ஏராளமான வசதிகள் செய்ய வேண்டுமென்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். சீருடைகளை, துணியாக அவர்களுக்குக் கொடுத்து அவர்களே தைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள்; அது நியாயமான கோரிக்கை. அதேபோல இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 600 உதவி ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு உத்தரவு போட்டுவிட்டேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை அது அமல்படுத்தப்படவில்லை. அதைத் தயவு செய்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 15 இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். எல்லா டிபார்ட்மெண்டிலேயும் 10 வருடம் சர்வீஸ் ஆகிவிட்டால் அவர்களுக்கு புரமோஷன் ஆட்டோமேட்டிக்காக வருகிறது. போலீசுக்கு மட்டும் வருவதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே 10 ஆண்டு காலம் ஒரு பதவியிலே வேலை செய்துவிட்டால் அவர்களுக்கு ஒரு புரோமோஷன், செலக்ஷன் கிரேடு பதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து போக்குவரத்து காவலுக்காக, காவலர்கள் சாலைகளில் நிற்கிறார்கள். சாலைகளில் இருக்கின்ற தூசி கண்களில் படாத அளவுக்கு, அவர்களுக்குப் பாதுகாப்புக் கருவிகள் கொடுக்க வேண்டும். மாதாமாதம் அவர்களுக்கு கண்கள் சரியாக தெரிகிறதா? காது நன்றாகக் கேட்கிறதா என்று சோதனை செய்ய வேண்டும். அப்போதுதான் ஆக்சிடெண்ட்ஸ் எல்லாம் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். நீங்கள் பழைய காலம் மாதிரி, காவலர்களை 302, 102 என்று அழைக்காதீர்கள். அவர்களுடைய அன்பான பெயரைச் சொல்லி, அவர்களுடைய தாய் தந்தையர் வைத்த பெயரைச் சொல்லி அழைத்தால், அவர்களும் அன்போடு பணியாற்றுவார்கள். இந்தப் பழைய வெள்ளைக்கார பாணி இன்னும் நம்முடைய போலீஸ் உயர் அதிகாரிகளிடம் இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமணத்திற்கு காவலர்கள் முன்பணம் கேட்டால், உன் பெயர் வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவன் கல்யாணம் ஆகி, குழந்தை குட்டிகள் பெற்ற பிறகுதான் அந்த முன்பணம் அவர்களுக்கு வந்து சேருகிறது. ஆகவே திருமணத்திற்கு முன்பே அந்தத் திருமண முன்பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, ஆண்டுதோறும் காவலர்கள் தேர்வு நடத்துவதென்பது பழைய முறை. இப்போது 10,000, 20,000 காவலர்களை ஒரே நேரத்தில் எடுத்தால், அவர்களுக்கு பயிற்சியை ஒழுங்காகக் கொடுக்க முடியாது; முறையான ஒழுக்கத்தையும் ஏற்படுத்தமுடியாது. காவலர்களுக்கு புரமோஷன் கொடுப்பதிலேயும் பிரச்சினை வருகிறது. ஆகவே ஆண்டுதோறும் காவலர்கள் தேர்வு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் வைத்து, என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

காவல் துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களுக்கு களப் பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். காவலர் வீடுகளுக்கு தனி மீட்டர் வைக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். 1989-ல் தேர்வு செய்யப்பட்ட காவலர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். பவானி நகரில் போக்குவரத்து காவல் நிலையம்

அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சருக்கு பாதுகாப்பாக வந்தவர்களுக்கு, எஸ்.எஸ்.ஜி. என்ற பெயரில் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பாதுகாப்புப் படி கொடுத்து இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த எஸ்.எஸ்.ஜி. பெயரை எடுத்து, அவர்களை எல்லாம் நீக்கிவிட்டு, இப்போது சிறிய அளவில் பாதுகாப்புப் படை வைத்து இருக்கிறார்கள் ; ஆனால், அந்த அ.தி.மு.க. ஆட்சியில் கொடுத்த ஆயிரம் ரூபாயைக் குறைக்கவில்லை : ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள் ; அதைக் குறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதே நேரத்தில் இங்கு இருக்கிற 26 அமைச்சர்கள், நம்முடைய சபாநாயகர் அவர்கள், துணைச் சபாநாயகர் அவர்கள், நான் உட்பட—எங்களிடமும் சில காவலர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் காமராசர் காலத்தில் கொடுத்த 100 ரூபாய்தான் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது ஏன், முதலமைச்சர் பாதுகாப்புக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் ; எங்கள் பாதுகாப்புக்கு 100 ரூபாய் ? அதையும் தயவுசெய்து நீங்கள் ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்; இது வந்து என்னுடைய சுயநலம் : ஏனென்றால் என்னிடம் 3 போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள்: *(சிரிப்பு)* அவர்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்களை மாற்றிவிடப் போகின்றார்கள். *(சிரிப்பு)*.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** இங்கு சாதி பிரச்சினை எல்லாம் வந்தது. இந்த நாட்டிற்கு சுதந்திரம் வந்து 50 ஆண்டு காலம் ஆகி இன்று பொன் விழா ஆண்டு கொண்டாடிக் கொண்டு இருக்கும் நேரத்தில் நாம் சாதியைப்பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறோமே என்ற வேதனை உண்மையிலேயே எனக்கு மிகுந்த வேதனையாக இருக்கிறது. இந்த நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவோ காரியங்கள் எல்லாம் நாம் செய்து இருக்கிறோம். ஆனாலும், இன்னும் அந்தச் சாதி ஒழியவில்லை. இதற்கு எல்லோரும் பல அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே எல்லாம் போக விரும்பவில்லை. ஆனால், கோவில்பட்டியிலே நடந்த கலவரத்தில் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்த பொதுக் குழு உறுப்பினர் எம்.டி.கே. குமாரசாமி என்பவரின் கடையை சுத்தமாக அடித்து நொறுக்கி பல லட்சம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். யார் அடித்தார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அவருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



சேலம் மாவட்டம் ஓமலூர் உள்கோட்டம் கருப்பர் வெள்ளாளப்பட்டியில் செயல்பட்டு வரும் புறக்காவல் நிலையத்தை முழு அந்தஸ்து பெற்ற காவல் நிலையமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சி ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் அங்கு ஆணையாளர் போடப்படவில்லை என்று சொல்கிறார்கள் ; அங்கு ஆணையாளர் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு தொகுதியில் வானபுரம் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்த 1993 ஆம் ஆண்டு அரசு பரிந்துரை செய்தும்கூட, இன்னும் செயல்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள். அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் சுப்பிரமணியசாமி—அவர் ஒரு நாட்டில் பெரிய கலவரத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மனிதர் ; அவர் 19-4-1997 அன்று திருமானூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டதின் காரணமாக, அங்கே உள்ள மக்கள் வெகுண்டு எழுந்து, அவருடைய கூட்டத்தைத் தடுத்த நேரத்தில் அப்பாவியாக இருக்கின்ற ஹரிஜனங்கள் மற்ற மக்கள் மீது கொலை முயற்சி வழக்கு போடப்பட்டு இருக்கிறது; அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியில் நெசவாளர்கள், எங்களுடைய துணியை வாங்கிக்கொள்ளுங்கள் என்று ஒரு போராட்டம் நடத்தினார்கள். அப்போது 50 பேருக்கு மேற்பட்டவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு இருந்துகொண்டு இருக்கிறது. அதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக எங்களுடைய வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒரு போராட்டம் நடத்தி இருக்கிறார். ஜெயலலிதா ஆட்சியில், அவர் ஊரில் இருந்த கல்லூரியை வேறு ஊருக்கு மாற்றியதற்காக, அதை மாற்றக் கூடாது என்று கோரி ஒரு பெரிய போராட்டம் நடத்தி உண்ணாவிரதம் எல்லாம் இருந்து இருக்கிறார். அப்போது இளைஞர்கள் பஸ்களை நிறுத்தி போராடியபோது, வேறு ஒரு காவல் நிலையம் அவர்கள் மீது வழக்கு போட்டு, அவர்கள் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த வழக்கையும் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையில்

என்னைப் பேச அனுமதித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் உட்காரவேண்டும். உங்களுக்குத் தொல்லைபுடியாது. உட்காருங்கள். உங்கள் சார்பில் திரு. திருநாவுக்கரசு பேசிவிட்டார். உட்காருங்கள் என்றால் உட்கார வேண்டும். நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் வராது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சில மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். உறுப்பினர் என்னுடைய அறையில் வந்து சொன்னீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசவில்லையென்றால், எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னீர்கள். சரி என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் உங்கள் சார்பிலே இரண்டு கோரிக்கைகளை வைத்துவிட்டார்கள். அப்புறமும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். வேறு எதுவும் கேட்கவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, அதன் தொடர்பான தீயணைப்புத் துறை, ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகள் குறித்து நேற்றும் இன்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் 18 பேர் — எதிர்க்கட்சித் தலைவர் உட்பட உரையாற்றியபிறகு, என்னுடைய விளக்கங்களைத் தருகின்ற நிலையில் இந்த அவையில் நான் நின்றுகொண்டிருக்கின்றேன்.

காவல் துறை என்பது எந்த அளவிற்கு அரசியல் கட்சிகளால் அது ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், விமர்சிக்கப்படுகின்ற ஒரு துறை என்பதை நாம் அனைவரும் மிகத் தெளிவாக அறிவோம். காவல் துறை இப்படியெல்லாம் தீங்கிழைக்கின்றது, கடமையை உணராமல் நடைபோடுகின்றது என்றெல்லாம் விமர்சிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்கூட, காவல் துறையினருடைய குடும்ப நலன்களில் அரசு அக்கறை காட்ட வேண்டுமென்பதையும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் இணைத்துச் சொல்லும்போது, எனக்குத் தோன்றுகின்ற கருத்தெல்லாம்,



பெற்றோர் தங்களுடைய குழந்தையை அடித்துவிட்டு, ஏசிவிட்டு, செய்த குற்றத்தைக் கடிந்து இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று வசைமாரிப் பொழிந்துவிட்டு, இருந்தாலும் வந்து தொலை, சாப்பிட்டுப் போ என்று சொல்வதைப் போல, கட்சிகளில் உள்ள உறுப்பினர்கள், காவல் துறையைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தாலும், அவர்களுடைய நலன்களுக்காக, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை, தாங்களும் நெஞ்சிலே பதியவைத்துக் கொண்டு, அரசையும் வற்புறுத்துகின்ற நிலை இருப்பதை நாம் காண்கின்றோம்.

நாட்டின் பாதுகாப்புக்காக, சமுதாயத்தின் பாதுகாப்புக்காக சமுதாயத்திலே நல்லொழுக்கம் ஒளிவிடவேண்டும் என்று சொல்லப்பட்ட நோக்கத்தோடு, பிரிட்டிஷார் காலத்திலே காவல் துறை அமைக்கப்பட்டது. அப்போது சுதந்திர தாகம் கொண்டவர்களால் காவல்துறையில் இருக்கும் நல்லவர்கள்கூட எள்ளி நகையாடப்பட்டார்கள். அவர்கள் எல்லாம், நம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சிக்குக் காவலாக இருக்கின்றார்களே என்ற ஆத்திரத்தின் காரணமாக, வெறுப்பின் காரணமாக அவர்களைத் தீக்குச்சிகள் என்றும், அவர்களைச் செந்தலைப் பூச்சிகள் என்றும் வர்ணித்த காலம் ஒன்று உண்டு.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பிரிட்டிஷார் அமைத்த காவல் துறைக்கு விடை கொடுத்துவிட வேண்டுமென்று, பொறுப்பேற்ற யாரும் கருதவில்லை. காவல்துறை நீடிக்கவேண்டுமென்ற அந்த எண்ணத்தோடு அதை நீடித்தார்கள். இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் காவல்துறை தங்களுடைய கடமையைச் செய்வதற்கும் சமுதாயப் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துவதற்கும் ஏற்றவகையில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு, காவல்துறை இயங்கி வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே, இந்தக் காவல்துறையிலே இருக்கின்ற சீர்கேடுகளை, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய பொதுமக்கள் காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பு இல்லாத நிலைமை இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, அப்போதிருந்த காவல்துறை அதிகாரி ஒருவர், "உங்கள் நண்பன்" என்ற ஒரு படத்தையே எடுத்துக்காட்டி, காவல் துறையிடம் எப்படி மக்கள் நடந்துகொள்ள வேண்டும், மக்களிடம் எப்படிக் காவல் துறை நடந்துகொள்ளவேண்டும், ஒருவர் அதிகாரம் செலுத்துபவராகவும், இன்னொருவர் அதிகாரத்திற்கு அடிபணிபவராகவும் இருக்கக் கூடாது, நட்பு முறையில் அந்த

உணர்வோடு. பொது மக்களும் காவல் துறையும் பழகிட வேண்டும், இயங்கிட வேண்டும் என்பதற்காக அந்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருந்தாலும், முழுமையாக காவல் துறை திருந்தி விட்டது என்று யாரும் ஒப்புக்கொள்ள இயலாது. ஏனென்றால் அந்தக் காலக்கட்டத்தில் தான் முதுகுளத்தூர் போன்ற பெரும் சாதிக் கலவரங்கள் எல்லாம் நடைபெற்று, ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, ஒரு மாதக் காலம் முதுகுளத்தூர் பகுதியில் உள்ள வயல் வெளிகளில் எல்லாம் பிணங்கள் விழுந்த அந்தக் கோரக் காட்சியை நாம் இன்றைக்கும் எண்ணிப்பார்க்க இயலாத அளவுக்கு அந்த வரலாறு தமிழகத்திலே இன்னமும் பின்னிக் கிடைக்கிறது.

*பிற்பகல் 12-45*

அதற்குப் பிறகு உங்கள் நண்பனாக இருப்போம் என்று அவர்களும், நாங்களும் உங்களுக்கு நண்பர்களாக இருப்போம் என்று பொது மக்களும் சூளுரைத்துக் கொண்டு பழகினாலும்கூட, ஏதோ ஒரு இடைவெளி, காவல் துறைக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. அண்மைக் காலத்தில், கடந்த ஆட்சிக் காலத்தில் காவல் துறை எந்தக் கட்டுப்பாட்டிற்குள்ளும் வைக்கப்படாமல் ஆளுங்கட்சிக்காரர்கள் இடுகிற கட்டளைகளை ஏற்று நடத்துகிற ஏவல் துறையாக காவல் துறை மாறியிருந்தது என்பதை இந்த அவையிலே உள்ள எதிர்க் கட்சிகளுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் யாரும் மறுத்திட இயலார் என்றே நான் நம்புகிறேன்.

கடந்த ஓராண்டு காலமாக மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நான் ஒரு கட்டத்திலே இங்கே சொன்னேன். காவல் துறை மிகவும் சீர்க்குலைந்து, ஒரு ஈரல் எப்படி 70 சதவீதம் அழுகிவிட்டால், கெட்டுவிட்டால் இருக்குமோ அதைப்போல ஆகிவிட்டது. மிச்சமுள்ள 30 சதவீதத்தை வைத்து இந்தக் காவல் துறையை சீர்படுத்தலாம் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன், 70 சதவீதம் கெட்டு விட்ட அந்தக் காவல் துறையை கடந்த ஓராண்டு காலத்தில் இந்த அரசு எடுத்த முயற்சிகளின் காரணமாக அந்த ஈரல் 60 சதவீதம் நல்ல வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள 40 சதவீதத்தைப் பற்றித்தான் இங்கே எல்லோரும் பேசினார்கள். அது தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசியவர்களாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற கட்சிகளின் சார்பில் பேசியவர்களாக இருந்தாலும் சரி,



அத்தனைபேரும் மேலும் காவல் துறை நல்லமுறையில் செயலாற்றிட வேண்டும் என்பதற்கான ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத் தான் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் காவல் துறைக்காக வக்காலத்து வாங்க, இங்கே எடுத்து வைத்த குறைபாடுகளுக்கு எல்லாம் பதில் சொல்ல மாத்திரம் இங்கே நிற்கவில்லை. நீங்கள் எடுத்து வைத்த குறைபாடுகள் பலவற்றை நான் ஏற்றுக்கொண்டு, அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காக என்னென்ன செயல்முறைகளைத் தீட்ட வேண்டுமோ அவைகளைத் தீட்டுவேன் என்ற உறுதியை உங்களுக்கு அளிக்கிற வகையில்தான் உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காவல் துறையில் 'இந்தியாவில்' அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் காவல் துறைக்கு என்று ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான். அதுவும் ஒரு முறையல்ல இரண்டு முறைகள் அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. முதல் கமிஷன் ஏறத்தாழ 1970 ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஆர். ஏ. கோபாலசாமி அய்யங்கார் அவர்களுடைய தலைமையில் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அவர்கள் அளித்த பல பரிந்துரைகளை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியது. அந்த அடிப்படையில்தான் —லத்தீப் அவர்கள் இங்கே சொன்னார்களே, காவல் துறையில் சாதாரண காவலருக்கு அப்போது 80 ரூபாய்தான் மாத ஊதியம். அந்த 80 ரூபாய் மாத ஊதியம் 230 ரூபாயாக மாறுவதற்குக் காரணமாக இருந்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். ஏனென்றால் அந்த கோபால்சாமி அய்யங்கார் அவர்களுடைய கமிஷன் அறிக்கையின்படி, அது சொன்ன சிபாரிசுகள், பரிந்துரைகள் அத்தனையும் முக்கால் பகுதி ஏற்றுக்கொள்கிற நிலையில்தான் அந்தச் சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. மீண்டும் 1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்த சபாநாயகம், I.A.S. அவர்கள் தலைமையில் இன்னொரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான். இந்த இரண்டு போலீஸ் கமிஷன்கள் செய்த சிபாரிசுகளை எல்லாம் படிப்படியாக நாம் நிறைவேற்றி இருக்கிறோம். ஆனால் காவல் துறை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு ஆளுங்கட்சிக்காரர்களே குண்டர்களாக மாறிய வரலாறு எல்லாம் நம்முடைய தமிழ் மாநிலத்தில் உண்டு என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கு உதாரணமாக

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்திலே பல மணி நேரம் சிறை வைக்கப்பட்ட நிகழ்ச்சியும், அவர் சிறை மீட்கப்பட்டு ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலிலே தங்க வைக்கப்பட்டபோது, அந்த ஓட்டலே அடித்து நொறுக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியும் போதுமானவை என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-50

வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், விஜயன், அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம் குண்டர்களால் தாக்கப்பட்டதையும் இந்த அவை மிக நன்றாக அறியும்.

நாகர்கோவிலில் சிறைச்சாலைக்குள்ளேயே புகுந்து சிறையிலே அடைக்கப்பட்டிருந்த ரவுடி லிங்கன் என்பவனை மற்றொரு ரவுடியான பிரபு கூட்டத்தினர் கொன்றுவிட்டு தப்பிச் சென்ற நிகழ்ச்சியும் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றதுதான்.

இன்றைய கழக ஆட்சியிலே அத்தகைய குண்டாயிசம், ரவுடியிசம் தொடரக்கூடாது என்பதற்காக திடமாக முடிவுகள் எடுக்கப்பட்டு காவல்துறையும் அந்தக் கடமையை ஆற்றுகின்ற அந்தக் கம்பீரத்தோடு அவர்கள் செயலாற்றி, ஆசைத்தம்பி, மனோ, கபிலன் போன்ற பெரிய ரவுடிகளினுடைய அட்டகாசத்தை அடக்கியதையும் இந்த அவை அறியும். அத்தகைய அடக்குகின்ற முயற்சியிலே அந்த ரவுடித் தலைவர்கள் கொல்லப்பட்டதையும் இந்த அவை மிக நன்றாக அறியும். இவர்களைத் தவிர, பல ஆண்டுக் காலமாக இத்தகைய ரவுடித்தனங்களில் ஈடுபட்டிருந்த 1137 நபர்கள் மீது கழக ஆட்சியிலே கடந்த 10 மாதங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் 729 பேர்கள் குண்டர் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலிலே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் காவல் நிலையங்களிலே நடைபெறுகின்ற சாவுகளைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு குறிப்பிட்டு இருக்கின்றார்கள். நானும் எதிர்க்கட்சியிலே இருந்தபோதும் சரி, இடையிடையே ஆளும் கட்சியிலே அமருகின்ற வாய்ப்பு வந்தபோதும் சரி, இந்தச் சாவுகளை என்றைக்கும் அனுமதிப்பவன் அல்ல. அதற்குரிய காரணங்களை ஏற்றுக் கொண்டவனும் அல்ல. எப்படி இறந்தார்கள் என்று - மாரடைப்பால்



இறந்தார், தூக்குமாட்டிக் கொண்டு இறந்தார், கடுமையான ஜுரத்தால் இறந்தார், வலிப்பால் இறந்தார் என்றெல்லாம் - சொல்லப்படுகிற காரணங்களை நான் என்றைக்கும் ஏற்றுக் கொண்டதில்லை. இன்றைக்கும் ஏற்றுக்கொள்பவன் அல்ல என்பதை இந்த அவையிலே நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இத்தகைய சாவுகள் தொடரக்கூடாது என்பதற்காக எடுத்த நடவடிக்கைகளை இந்த அவையிலே உள்ள நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது. குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மதுரை மாவட்டம் எழுமலை காவல் நிலையத்தில் பெருமாள்தேவர் என்பவர் 23-6-96 அன்று - இந்த ஆட்சி வந்த பிறகு - இறந்துவிட்டதைத் தொடர்ந்து இராஜசேகரன் என்ற உதவி ஆய்வாளர், காந்தீபன் என்கின்ற தலைமைக் காவலர், ஆண்டவர் என்கின்ற முதல்நிலைக் காவலர், அரிச்சந்திரன் என்கிற இன்னொரு முதல்நிலைக் காவலர், கோபால் என்ற காவலர் கைது செய்யப்பட்டார்கள் என்ற நிகழ்ச்சியும் இந்த ஆட்சியிலேதான் நடந்தது. அதைத்தான் நேற்றைக்கு சுப்பராயன் அவர்கள் பேசும்போது, இதை நான் வரவேற்கிறேன், இப்படி தமிழ்நாட்டில் முதன்முதலாக காவல் நிலையத்திலேயே இறந்துபோன கைதிக்காக அவர்களை மன்னிக்காமல் காவல்துறை மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் மீது 302 செக்சன் வரையிலே போட்டவர்களைக் கைது செய்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்று அவர்கள் சொன்னார்கள்.

மேலும், மதுரை மாநகரத்தில் வேலுச்சாமி என்பவர் ஒரு காவல்நிலையத்திலே, திடீர் நகர் காவல் நிலையத்திலே 29-6-96 அன்று இறந்த செய்தியைத் தொடர்ந்து ஆய்வாளர் தங்கராஜ், தலைமைக் காவலர் செல்வராஜ், முதல்நிலைக் காவலர் பழனிமுத்து, காவலர் சாமுவேல் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். அதேபோல் வ.உ.சி. மாவட்டத்தில் கடம்பூர் காவல்நிலையத்தில் பெரிய தங்கவேலன் என்பவர் காவல் துறை விசாரணையின்போது மரணமுற்றார் என்ற செய்தியின் தொடர்பாக திரு. கோவிந்தன், பொறுப்பு ஆய்வாளர், ஒளிமுத்து, உதவி ஆய்வாளர், காளிமுத்து மற்றும் சீனியர் என்ற சீனிவாசன், காவலர்கள் ஆகிய 4 பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணையிலே இருக்கிறது. கைது செய்வதற்காக போலீசார் அவர்களைத் தேடுகிறார்கள். அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அப்படி கைது செய்யப்படாவிட்டால் அவர்களைத் தேடுவதாகச் சொல்லுகின்ற போலீசாரே ஒருவேளை உடந்தையாக இருக்கிறார்களோ என்ற சந்தேகம்

216656. 97.3641

எனக்கு வரும் என்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு நான் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் இந்த அவைக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.55

ஜாதிக் கலவரங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஜாதிமதக் கலவரம் எவ்வளவு கொடுமையானது. தீவிரமானது என்பதை எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். அவர்களுடைய உணர்வில் இன்றல்ல, கடந்த பல மாதங்களாக இந்த அவை நடத்தப்படுகின்ற ஒவ்வொரு காலத்திலும் ஜாதிமத சங்கடங்களை, சச்சரவுகளை, மோதல்களைத் தவிர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும் என்ற கருத்தோடு நான் ஒன்றி இருந்திருக்கிறேன். அதற்கு நீங்களும் இந்த அரசுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்று அன்றைக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்; இன்றைக்கும் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். நான் இந்த எண்ணிக்கைகளை ஒப்பிட்டுக் காட்டுகின்ற காரணத்தால் நியாயம் கற்பிப்பதாக யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. 1995-ஆம் ஆண்டில் ஜாதிக் கலவரத்தால் இறந்தவர்கள் 49 பேர். 1996 மே வரையில், இறந்தவர்கள் 27 பேர். ஆக 76 பேர் கடந்த காலத்திலே 1995-96-ஆம் ஆண்டு மே வரையில் இந்த ஆட்சி வருவதற்கு முன்பு இந்தக் கலவரங்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள், செத்திருக்கிறார்கள். 1996 ஜூன் முதல் 1997 மார்ச் வரையில் 7 பேர் ஜாதிக் கலவரத்தால் செத்திருக்கிறார்கள். ஆனால் மதக் கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நான் ஒப்பிட்டுக் காட்ட விரும்பவில்லை. 4 பேர் என்றாலும் ஒருவர் என்றாலும்கூட கலவரம் கலவரம்தான். மத உணர்வு, மத வெறி, ஜாதி வெறி இவைகளின் காரணமாக ஏற்படுகின்ற பூசல் பூசல்தான். அது தவிர்க்கப்படவேண்டுமென்கின்ற எண்ணம் எல்லோருடைய ஒருமித்த எண்ணம்தான். அதனால்தான் வழக்கமாக இருக்கின்ற காவல்துறையினுடைய படை போதாது என்பதற்காக அதிவிரைவுப் படை ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். மதக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் குறித்த விவரங்களை முன்கூட்டியே சேகரித்து, தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக Swift Action Force என்ற ஒரு படையை அதிவிரைவுப் படையை இந்த அரசு அமைத்து, 275 காவலர்களின் முதல் அணிவகுப்பை 28-3-1997 அன்று ஆவடியிலே தொடக்கி வைத்திருக்கின்றோம். இந்த அதிவிரைவுப் படை ஆவடியிலே மாத்திரமல்லாமல், அடுத்து கோவை, சென்னை, மதுரை, நெல்லை என்று படிப்படியாக பல்வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்படும்



என்றும், அவர்கள் ஜாதிக் கலவரங்களோ, மதக் கலவரங்களோ ஏற்படாமல் முன்கூட்டியே தடுப்பதற்கு பயன்படுத்தப்படுவார்கள் அல்லது தடுத்தும் முடியாமல் கிளர்ந்து எழுந்துவிட்டால், அவைகளை அடக்குவதற்கு இந்தப் படையினர் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று பயன்படுத்தப்படுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆட்சிக் காலத்தில் காணாமற்போன நகைகள், காணாமற்போன பல்வேறு உடைமைகள் இவைகள் எல்லாம் எப்படி மீட்டுத் தரப்பட்டன என்பதையும் அவ்வப்போது அதை இந்த அவையிலே மாண்புமிகு எல்லா கட்சித் தலைவர்களும் பாராட்டிப் பேசியதையும் நான் மறந்துவிடவில்லை. இன்றைக்கு பாராட்டாமல் இருந்தாலும்கூட, நான் எப்போதும் பாராட்டாமல் இருக்கிற நேரத்திலே, அதைப் பொருட்படுத்தாமல் பாராட்டியவைகளைத்தான் மனதிலே எண்ணி, பாராட்டவில்லை என்று வருத்தப்படாமல், பாராட்டியதை எண்ணி எண்ணி அந்தப் பசுமையான நினைவுகளிலேயே நான் பொது வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருப்பவன். அந்த வகையிலே உங்களுக்குத் தெரியும், கழகத்திற்கு என்று கோயில் குளங்களைப் பற்றி தனிப்பட்ட ஒரு கோட்பாடு உண்டு. ஆனால் கழக ஆட்சியைப் பொறுத்தவரையில் கோயில் குளங்களிலே நம்பிக்கையுள்ள யாருடைய மனமும் புண்படாமல் நடந்துகொள்கின்ற போக்கு கழக ஆட்சிக்கு உரிய போக்காகும். அதனால்தான் கோயில் கூடாது என்பது அல்ல. கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம் என்று நான் இன்றைக்கு அல்ல, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

கோயில்களிலே, குறிப்பாக மயிலாப்பூர் வேதாந்த தேசிகர் கோவிலில் களவுபோன ரூ.8.37 லட்சம் மதிப்புடைய நகைகள் உடனடியாக மீட்கப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். அந்தக் கோயிலிலே உள்ள அர்ச்சகர்கள் எல்லாம் கூட வந்து, என்னைச் சந்தித்து, எனக்குச் சால்வையும், மாலையும் அணிவித்து, என்னைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள்.

ஆண்டவனால்கூட கண்டுபிடிக்க முடியாத திருட்டை ஆளுகின்றவர்கள் கண்டுபிடித்து விட்டார்களே என்று எங்களுக்கு வாழ்த்துக்கூறி விட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மதுராந்தகம் ஏரிகாத்த இராமர் கோயில், கும்பகோணம் சாரங்கபாணிகோயில், மன்னார்குடி இராஜகோபாலசாமி கோயில்,

திருவரங்கம் அரங்கநாதர் கோயில் ஆகிய புகழ் பெற்ற ஆலயங்களில் முந்தைய ஆட்சியில் 1992 முதல் களவு போன 1 கோடி ரூபாய் மதிப்புள்ள சிலைகளும், நகைகளும், கழக அரசால்தான் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் மீட்கப்பட்டுள்ளன என்பதை ஆத்திக நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 29-6-1996 அன்று கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில், ஜி.சி.எஸ். வங்கியில் 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் களவடைந்து, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 59 1/1 லட்சம் மதிப்புடைய நகைகள் மீட்கப்பட்டன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.00

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிதி நிறுவனங்களைப் பற்றி இங்கே பேசினார்கள். தமிழ்நாட்டில் கடந்த 5, 6 ஆண்டுகாலமாக இந்த நிதி நிறுவனங்கள் நேற்று பெய்த மழையில் இன்று முளைக்கின்ற காளான்களைப் போல ஆங்காங்கே திடீர் திடீரென்று முளைத்து — காளான்கள் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்பது இன்றைய விஞ்ஞானக் கருத்து — ஆனால், அந்தக் காளான்கள் பொதுமக்களுடைய பணத்தை சூறையாடி அவர்களையெல்லாம், குடும்பம் குடும்பமாக நடுத்தெருவிலே நிற்க வைத்த காளான்கள். இந்தக் காளான்கள் 39 நிதி நிறுவனங்களாக தமிழகத்திலே, இந்த மாநிலத்திலே இருந்தன. அந்த 39 நிதி நிறுவனங்களையும், நம்முடைய காவல் துறை முயற்சி மேற்கொண்டு முடக்கியது மாத்திரம் அல்லாமல், அந்த நிதி நிறுவனங்களுக்குத் தொடர்புடைய 42 அதிபர்களையும் கைது செய்து சுமார் 170 கோடி ரூபாய் பொதுமக்களுடைய முடக்கப்பட்ட அந்தப் பணத்திலிருந்து ஏறத்தாழ 106 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், பணத்தையும் மீட்கின்ற பெரும் பணியை செய்து முடித்திருக்கின்றது. அதை ஏன் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். சொத்துக்களைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். வெறும் கேஷ், ரொக்கப்பணமாக இருந்தாலும்கூட, நீதிமன்றத்திலே சொல்லிவிட்டு திருப்பி கொடுத்திருக்க முடியும். ஆனால் அப்படி கொடுக்க முடியாத காரணம் — சொத்துக்களை நான் குறிப்பிட்டேன். அவற்றிலே பல வீடுகளாக, கட்டிடங்களாக, வேறு பல அசையா சொத்துக்களாக இருக்கின்ற காரணத்தால் நீதிமன்ற விசாரணை முடிகின்ற வரையிலே அதற்காக பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது.



அந்த நிதி நிறுவனங்களுடைய பெயரை ஒருமுறை சொல்வது நல்லது என்று கருதுகின்றேன்.

1. அபிராமி ஹைற இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
2. அமுதா கோல்டு பேலஸ்
3. பாரதி ஜெம்ஸ் அண்டு ஜுவல்ஸ்
4. பெட்டர் கெய்ன்ஸ் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
5. கார் செண்டர் பைனான்ஸ்
6. தட்சிணா பைனான்ஸ்
7. தேவி கோல்டு & ஜி.என்.எஸ். நிதி
8. என்பீல்ட் பிஸினஸ் பைனான்ஸ்
9. ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனீஸ்
10. கிரீன் ஹெவன் பைனான்ஸ்
11. லட்சுமி கோல்டு ஹவுஸ்
12. மெட்ராஸ் மோட்டார்ஸ் பைனான்ஸ்
13. மாக்சிமா குரூப் ஆப் கம்பெனி
14. மதுவந்தி பைனான்ஸ்
15. மாலதி தங்க மாளிகை
16. மல்டிபில் பைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
17. நியூ இந்தியா பைனான்ஸ்
18. நாகலட்சுமி பைனான்ஸ்
19. ஒமெகா குரூப் ஆப் கம்பெனீஸ்
20. ரமேஷ் கார் பைனான்ஸ்
21. ரிச்சீஸ் அண்டு கிளிப்ஸ் பைனான்ஸ்
22. சினேகம் குரூப் ஆப் கம்பெனீஸ்
23. ஸ்பார்டம் பைனான்ஸ்
24. ஸ்ரீனிவாசலு செட்டி ஜுவல்லர்ஸ்
25. சூரியா எஸ்டேட் பைனான்ஸ்

26. எஸ்.கே.எஸ். கோல்டு ஹவுஸ்

27. சுவிஸ் பைனான்ஸ்

28. சரவணா கிரடிட் அண்டு பைனான்ஸ்

29. திருமகள் குரூப் ஆப் கம்பெனீஸ்

30. வென்சூரா பைனான்ஸ்

31. இம்பீரியல் கோல்டு ஹவுஸ்

இந்த நிறுவனங்களுடைய மோசடியை விசாரிக்கவும், இழந்த மக்களுடைய பணத்தை, சொத்தை, திருப்பித் தரவும் மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகள் மிக விரைவிலே முடிய வேண்டும் என்பதற்காக, இதற்கும் ஒரு தனிக் கோர்ட் அமைக்கின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும், விரைவிலே அந்தத் தனிக் கோர்ட் அமையும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வெடிகுண்டு கலாசாரத்தைப் பற்றி திருநாவுக்கரசு அவர்களும் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துக்காட்டினார்கள். வெடித்தவைகள் எல்லாம் வெடிகுண்டுகள் அல்ல என்பதை நாம் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். வெடிகுண்டுகள் ஒரு கட்டிடத்தை பிளக்கக் கூடிய அளவுக்கு ஆற்றல் வாய்ந்த வெடிகுண்டுகள், அதாவது 'பாம்'. அஃதன்னியில் நாம் தீபாவளி காலத்திலே கையிலே வாங்கி வைத்து சுவரிலே அடிக்கின்ற வெங்காய வெடிகளைக்கூட வெடிகுண்டு வரிசையிலே சேர்த்த காரணத்தால்தான் அந்த ஆட்சியிலும் சரி, இந்த ஆட்சியிலும் சரி நான் சொல்கிறேன் எல்லாமே வெடிகுண்டுகள் ; வெடித்த காரணத்தால் வெடிகுண்டுகள் என்ற அளவிலே அவைகள் பெயரிடப்பட்டுவிட்டன என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் கடந்த காலத்திலே அந்த வெடிகுண்டால் ஆர்.எஸ்.எஸ்.ஸினுடைய பில்டிங் கட்டிடம் ஒன்று இடிக்கப்பட்டு 11 பேர் கொல்லப்பட்டார்கள் என்பதும் அதற்குப் பிறகு இன்னொரு நிகழ்ச்சியில் அந்த வெடிகுண்டால் இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களுடைய கட்டிடம் இடிக்கப்பட்டு சிலர் மாண்டார்கள் என்பதும் நாடறிந்த உண்மையாகும். சென்னைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கொடுங்கையூர் நிகழ்ச்சியைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த கொடுங்கையூரிலே அந்த வெடிமருந்து பொருள்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்திருந்தால் சென்னை மாநகரம் ஒரு மும்பை என்ற நிலையை அடைந்திருக்கும் என்பதை இன்று அல்ல அந்தப்



பொருள்களையெல்லாம் பார்த்த எதிர்க் கட்சித் தலைவரும் மற்றும் நம்முடைய கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையிலேயே பேசியவை இன்னமும் என் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டிருப்பதை நான் மறந்துவிடவில்லை.

பிற்பகல் 1-05

அப்படிப்பட்ட கொடுங்கையூர் நிகழ்ச்சியிலே ஈடுபட்டு பணியாற்றிய காவல் துறையினருக்கு ஏன் இன்னும் பதக்கங்களோ அல்லது பதவி உயர்வுகளோ தரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பதவி உயர்வு தருவது, பதக்கம் தருவது இதிலே எந்தவிதமான கஞ்சத்தனமும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆனால், ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பதக்கத்திற்காக நடைபெறுகின்ற நிகழ்ச்சியின்பொழுதுதான் இந்தப் பதக்கம் பெற்றவர்களுக்கெல்லாம் பதக்கம் வழங்குவது வழக்கமாக இருப்பதால் அவர்களுக்கே இத்தகைய பதக்கங்களை, பரிசுகளை அளித்துவிட்டு அதை அறிவிக்கின்ற அல்லது அந்த விழாவை நடத்துகின்ற அல்லது அவர்களுக்கு அணிவிக்கின்ற நிகழ்ச்சியாக, அண்ணா பிறந்தநாள் நிகழ்ச்சி அல்லது அண்ணா பதக்கம் தருகின்ற நிகழ்ச்சியிலே அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பதவி உயர்வுகளைப் பற்றிச் சொன்னார்கள். இது நாங்களாகச் செய்தால் நன்றாக இருக்காது என்றுதான் எதிர்க்கட்சிகள் சொல்லிச் செய்தால், பிறகு ஒரு பேச்சுக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்று நீங்கள் சொல்லட்டும் என்று காத்திருந்தேன். நிச்சயமாகச் செய்யப்படும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்ற கட்சிகளின் தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுவிலக்குச் சட்டத்தினுடைய தீவிர செயலாக்கத்தை இந்த அரசு கடைபிடிக்கிறதா இல்லையா என்பதற்கு நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகின்ற ஒன்று கடந்த ஆண்டு நாம் இந்தக் காவல்துறையில் இருக்கின்ற மதுவிலக்குப் பிரிவினால் புகார்கள்தான் அதிகமாக வருகிறதேயல்லாமல் இந்த மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வெற்றி முகப்பை நாம் காண இயலவில்லை என்று விளக்கம் அளித்து இந்த மதுவிலக்கு செயலாக்கப் பிரிவு கலைக்கப்படுகிறது என்று அறிவித்து

அவையிலே உள்ள அனைவரும் அன்றைக்கு கையொலி செய்து - அன்றைக்கு அனைவரும் கையொலி செய்து - அதை வரவேற்றீர்கள். நான் மறந்துவிடவில்லை. ஆனால் அதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்பட்டுவிட்டாலும்கூட மாநில அளவிலே அந்தப் பணியைச் செய்ய காவல் துறையிலே அவர்களாகவே ஆங்காங்குள்ள காவல்துறையினுடைய அதிகாரிகள், பணியாளர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

அதிலே குறிப்பாக இந்தக் கள்ளச் சாராயத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமேயானால் நம்முடைய ஈஸ்வரன்கூட இந்தக் கள்ளச் சாராயம் இருக்கிற காரணத்தினால்தான் இவ்வளவு தொல்லை, எனவே சாராய கடைகளையே திறந்துவிடுங்கள் என்று ஆதங்கத்தோடு சொன்னதாக அவர்களுடைய கட்சியின் சார்பிலே தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு என்ன பயம் என்றால் சாராயக் கடைகளைத் திறங்கள் என்று சாதாரண மனிதர் அல்ல ஈஸ்வரனே சொன்ன பிறகு (சிரிப்பு) அதை எப்படி மீறுவது என்பதுதான் என்னுடைய பயம். இருந்தாலும் ஆண்டவன் சொன்னாலும் அது அநியாயமாக இருக்குமேயானால் அதை மறுக்கின்றவர்கள்தான் சுயமரியாதைக்காரர்கள் என்ற அதே அடிப்படையில், நானும் தமிழ் மாநில காங்கிரஸினுடைய அந்த உணர்வோடு ஒன்றிப்போகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக சாராயக் கடைகள் திறக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், சாராய அழிப்புப் பணியில் நாம் இந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு என்ற ஒரு பிரிவு கலைக்கப்பட்ட பிறகுகூட சாராயத்தை அழிப்பதில் ஒரு புள்ளிவிவரத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதிலே நான் ஒப்பீடு காட்ட விரும்பவில்லை. முன்பு எப்படி, இப்போது எப்படி என்றெல்லாம் ஒப்பீடு காட்ட விரும்பவில்லை. முன்பும் கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சிகள் நடைபெற்றன.

ஆனால், இன்றைக்கு அதைவிட மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் தீர வேண்டும். சாராயத்தை அழிப்பதில், கலால் வேட்டைகள் நடைபெற்று, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, 13-5-96 முதல் 31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச்சாராயம் 43 லட்சத்து 17 ஆயிரத்து 625 லிட்டர் என்பதை நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.



பிற்பகல் 1-10

சாராய ஊறல்கள் அழிப்பு விவகாரத்தில் 13-5-96 முதல் 31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச்சாராய ஊறல்கள் 3 கோடியே 59 லட்சத்து 18 ஆயிரத்து 119 லிட்டர் என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்கின்றேன்.

சாராவி, ஸ்பிரிட் கழக அரசில் 13-5-96 முதல் 31-3-97 வரை கைப்பற்றி அழிக்கப்பட்ட சாராவி என்ற ஸ்பிரிட் 3 லட்சத்து 61 ஆயிரத்து 426 லிட்டர்.

கள்ளச் சாராயத்தை ஒழிக்கிற சிறப்பு நடவடிக்கையின் அடிப்படையில் 3 நாள் ஒரு தவணையாகவும், 4 நாள் மற்றொரு தவணையாகவும் ஸ்பெஷல் டிரைவ் ஒன்று நடத்தப்படுகிறது.

அந்த வகையில் 13-11-96 முதல் 15-11-96 வரை 3 நாட்கள் தமிழ்நாட்டிலே நடத்தப்பட்ட அந்தச் சிறப்பு கள்ளச் சாராய வேட்டை மற்றும் 14-2-97 முதல் 17-2-97 வரை 4 நாட்கள் நடைபெற்ற அந்தக் கள்ளச் சாராய வேட்டை ஆகியவற்றில் 13 முதல் 15 வரை நடத்தப்பட்ட வேட்டைகளில் 5746 வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டன. 5120 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். 61 ஆயிரத்து 132 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றி அழிக்கப்பட்டிருக்கின்றது. 41 லட்சத்து 93 ஆயிரத்து 25 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக, 14-2-97 முதல் 17-2-97 வரை நடத்தப்பட்ட அந்தச் சிறப்பு வேட்டைகளில் 7,286 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் 7,022 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 58 ஆயிரத்து 125 லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளது. 7 லட்சத்து 39 ஆயிரத்து 427 லிட்டர் சாராய ஊறல்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

இவ்வளவு அதிகமாகக் கைப்பற்றப்பட்டு இருந்தாலும்கூட அறவே சாராயம் ஒழிந்ததா என்றால் இல்லை. அதனுடைய நெடி இன்னமும் தமிழகத்திலே அடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதை அறவே ஒழிப்பதற்கான முயற்சிகளில் இந்த அரசு ஈடுபடுவதற்குக் காவல் துறையும், கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள் நல்லவர்களாக மாற வேண்டும் என்ற நிலையும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளும் பொழுது யாரும் என்னைத் தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால், சில நேரங்களில்

நமக்கு வேண்டியவர்கள் இதில் சிக்கிக் கொண்டால் அவர்களை விடுவிக்க வேண்டும் என்கின்ற அந்த நிலையைக் கூட யாரும் எடுக்காமல், "சிக்கிக் கொண்டாயா, சரி, அதுதான் உனக்குச் சரியான தண்டனை" என்கின்ற அளவிற்கு மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், கள்ளச் சாராயத்தை இந்த அரசு கண்டிப்பாக ஒழித்து விட்டது என்ற ஒரு புதிய சரித்திரத்தை நாம் உண்டாக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கலால் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தாத காவல் துறையினர்மீது, கழக ஆட்சியில் ஜூன் 96 முதல் மார்ச் 97 வரை மொத்தம் 705 காவல் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால், கலால் சட்டத்தைத் தீவிரமாகவும், உண்மையாகவும் செயல்படுத்தாமல் இருந்தமைக்காக 14 காவல் துறையினர்மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் கழக ஆட்சியிலேதான் என்பதை நான் பெருமையோடு கூறிக் கொள்வேன்.

மதுக் கடைகளிலே பார் நடத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். சொன்னது திரு. ஈஸ்வரன்தான் என்று கருதுகிறேன். இந்த பார் நடத்துவதால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை இந்த அரசு எண்ணிப் பார்த்து, பார் நடத்தக் கூடாது என்று குறிப்பிடுகிறது. ஆனால் அங்கே சரக்குகளை வாங்கிக் கொண்டு, பக்கத்திலே உட்கார்ந்து குடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரேகூட போனமுறை பேசும்பொழுது சொன்னார்கள். பார் நடத்தாத காரணத்தால், நடத்திக் கொள் என்று அவர்களுக்கு உரிமை கொடுத்து, மறைமுகமாக உரிமை கொடுத்து, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் உள்ள போலீஸ் அதிகாரிகள் 5 ஆயிரம், 6 ஆயிரம் என்று சம்பாதிக்கிறார்கள் என்ற செய்தியைக்கூட அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்கு நம்மால் முடிந்த அளவிற்கு மதுக் கடைகளில் பார் நடத்தியவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று பார்த்தால் 1-6-96 முதல் 31-3-97 வரையில் மதுக் கடையில் பார் நடத்தியதற்காகப் போடப்பட்ட வழக்குகள் 1,245. மதுக்கடைகளின் உரிமங்களை ரத்து செய்ய அனுப்பிய அறிக்கைகள் 640. மதுக்கடைகளிலே சில்லறை



விற்பனை, போலி மது விற்பனை மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு மேலாக விற்பனை செய்தது குறித்து போடப்பட்ட வழக்குகள் 3,240 ஆகும்.

பிற்பகல் 1-15

கள்ளச் சாராயத்தை முழுவதும் ஒழித்துவிட்டதாகப் பெருமையடித்துக்கொள்கிற கிராமங்கள், தமிழ்நாட்டிலே 1,500 கிராமங்கள் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன். இருக்கின்ற கிராமங்கள், 58 ஆயிரம், 60 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றிலே 1,500 கிராமங்களிலேதான் கள்ளச்சாராயம் இன்றைக்கு அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்களுக்குச் சென்று, யாத்திரைக்குச் செல்வது போலச் சென்று புனித யாத்திரை போலச் செய்து, அவைகளைத் தரிசித்தால்கூட நன்றாக இருக்குமென்று, மதுவிலக்கிலே தீவிர எண்ணம் கொண்டவர்களுக்கு நிச்சயமாக ஒரு மனப்பான்மை ஏற்படும். 1,500 என்பது போதுமானதல்ல. இந்த 1,500-ஐ 15 ஆயிரமாக ஆக்க, எல்லா கிராமங்களிலுமே இன்றைக்கு கள்ளச் சாராயம் இல்லையென்ற நிலையை உருவாக்க, அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்திலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துப்பாக்கிச் சூடுகளைப் பொறுத்தவரையில் இங்கே பேசினார்கள். 1995-ஆம் ஆண்டு துப்பாக்கிப் பிரயோகம் 38 முறை நடைபெற்றிருக்கிறது. 1996 முதல் இந்த ஆட்சி பொறுப்பேற்கின்றவரையில் 11-5-96 வரையில் 4-1/2 மாத காலத்தில் 18 இடங்களிலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. ஆனால், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 13-5-96 முதல் 24-4-97 முடிய, 11-1/2 மாத காலத்தில் 11 துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. இதிலே எண்ணிக்கைப் பெரிதல்ல. அன்றைக்கு அது ஏன், இன்றைக்கு குறைவு என்பதல்ல. ஒரு துப்பாக்கிப் பிரயோகம்கூட நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு காவல் துறைக்கு மாத்திரமல்ல, அனைத்துக் கட்சிகளுக்கும் இருக்கிறது. சமுதாயத்தினுடைய தலைவர்களுக்கும் இருக்கிறது. இன்றைக்கு எப்படியோ, வேறு வழியில்லாமல், என்ன காரணத்தினாலோ ஜாதிகள், அவைகளைக் கட்டிக் காப்பாற்றக்கூடிய தலைவர்கள் அந்த ஜாதியின் பெயரால் இன்றைக்கு உருவாகியிருக்கக்கூடிய சூழ்நிலை, நாம் மறுக்க முடியாத அளவிற்கு இருக்கிறது என்பதை மறைக்கவும் நான் விரும்பவில்லை. அதன் காரணமாக, இங்கே பேசிய நேரத்திலே கூட சில வாக்குவாதங்கள் எல்லாம் ஏற்பட்டன. ஜாதி என்பது தமிழர்களுக்கு அவர்களுடைய

அகராதியிலே இல்லாத ஒன்று. தமிழ் அகராதியிலே, இப்போது வந்த அகராதியிலே இருக்கலாம். அந்தக் காலத்து அகராதியிலே ஜாதி கிடையாது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றுதான் வள்ளுவர் பாடினார். அந்தச் செய்தொழில் வேற்றுமை கூட, அவர் தச்சர், இவர் தயவர், இவர் கருமான் என்று இந்த வகையிலே உள்ள செய்தொழில் அல்ல. எந்த ஒரு தொழிலைச் செய்தாலும், எழுத்தராக இருக்கலாம், அவர் தச்சராக இருக்கலாம், அவர் ஒரு குமாஸ்தாவாக இருக்கலாம். அவர் செய்கின்ற அந்தத் தொழிலில், அந்தக் குமாஸ்தாக்களில் யார் சிறப்புடையவரோ அவர்தான் உயர்ந்தவரே தவிர, 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், தமிழ் அகராதியிலே இல்லாத ஜாதி வந்து புகுந்த சதியின் காரணமாக, சதிக்குக் கால் முளைத்து அது சாதியாக மாறி இருக்கிறதே தவிர வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தச் சதியை வீழ்த்த, சாதியை வீழ்த்த, சாதி வேறுபாட்டை வீழ்த்த, பேதத்தை வீழ்த்த, சாதிச் சண்டைகளை வீழ்த்த, மதபாத வெறித்தன்மைகளை வீழ்த்த, மதச்சார்பற்ற ஒரு நிலை சமுதாயத்திலே உருவாக, சாதி சார்பற்ற நிலை, நாம் எல்லாம் ஒரு குலம், ஒன்றே குலம் என்கின்ற அந்த உண்மை ஒளி நம்முடைய உள்ளத்திலே ஏற்பட அனைவரும் ஒரு உறுதியை எடுத்துக்கொண்டாலொழிய, சட்டத்தால் அல்லது காவல் துறையால் அவர்களுடைய செயலாக்கத்தால் மாத்திரம் சாதிச் சச்சரவுகளை நாம் அகற்றிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னும் வேறு சில செய்திகளுக்கு நான் செல்வதற்கு முன்பு, நேற்றும் இன்றும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்த சில குற்றம் குறைகளுக்கான விளக்கத்தை இங்கே கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்று சட்டமன்ற உறுப்பினர், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் பேசும்போது, மதுரையிலே சந்தனன் என்ற தலைமைக் காவலர் கொலை செய்யப்பட்ட வழக்கில் அண்மையிலே தீர்ப்பு வழங்கப்பட்டு, புலன்விசாரணை முறையாகச் செய்யப்படவில்லையென்று நீதிபதி எழுதியிருப்பதாகக் கூறினார். இந்தச் சந்தனன் என்ற ஹெட் கான்ஸ்டபிள், தலைமைக் காவலர் கொலை செய்யப்பட்டது 1995-ஆம் ஆண்டு, 11-2-1995-லே கொலை நடைபெற்றது. தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தது



13-5-1996, கொலை நடைபெற்று 15 மாதங்களுக்குப் பின்னர்தான் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கொலை வழக்கு நடைபெற்றது. தீர்ப்புதான் தற்போது வந்திருக்கிறது. எனவே, புலன்விசாரணை ஒழுங்காக இல்லையென்று நீதிபதியால் காட்டப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு இந்த ஆட்சிக்கு ஏற்பட்ட களங்கமாக செல்லக்குமார் கருதிக்கொண்டு வருந்தத் தேவையில்லை. பழைய ஆட்சியிலேயே புலன்விசாரணை ஒழுங்காக இல்லாத காரணத்தினாலேதான் இப்படி ஒரு தீர்ப்பு கிடைத்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னொன்று அவர் சொன்னார், வண்ணாரப்பேட்டையிலே ஒரு காவல்துறை அதிகாரி, முதலமைச்சராலேயே பாராட்டப்பட்டவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். முதலமைச்சரே பாராட்டிவிட்டால், அவர் தவறு செய்தால் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிடக் கூடாது. முதலமைச்சரே பெற்ற பிள்ளையாக இருந்தால்கூட நடவடிக்கை எடுக்க வேண்டும், எடுத்தால்தான் அந்த அதிகாரியை நான் பாராட்டுவேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இதே அவையிலே நான் சொன்ன சொல். ஒரு சொல்தான், அதற்கு எந்த மாற்றமும் என்றைக்கும் கிடையாது. அந்த வகையிலேதான் சொல்கின்றேன். நான் பாராட்டினாலும்கூட, மற்றவர்கள் பாராட்டினாலும்கூட, அந்த அதிகாரி வேறு ஒரு தவறைச் செய்யும்போது தண்டிக்காமல் இருக்க முடியாது. அந்த விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

மதுவிலக்கு அமல் பிரிவு மூடப்பட்ட பிறகு, அந்தந்தப் பகுதிகளிலே உள்ள காவல் நிலைய அதிகாரிகள்தான் மதுவிலக்குத் தொடர்பான பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலே உள்ளார்கள். உள்ளூர் காவல்நிலைய அதிகாரிகளும், காவலர்களும் தங்கள் பகுதியிலே சட்டத்திற்குப் புறம்பாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதையும், மதுபானங்கள் வாகனங்களிலே கடத்தப்படுவதையும், கண்காணித்துத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தவறுகள் நடந்தால் அந்தப் பகுதியிலேயுள்ள காவலர்கள்தான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டு, பத்திரிகைகளிலே விளம்பரங்கள், கால்பக்க விளம்பரங்கள் காவல்துறையினால் வெளியிடப்பட்டதையும் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். சென்னை நகரிலேயுள்ள காவல்துறைக்கு இதுபற்றி 12-9-1996, 8-10-1996, 17-10-1996, 26-2-1997, 10-3-1997 மற்றும் 27-3-1997 ஆகிய தேதிகளில் குறிப்பாணைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் 31-3-1997 அன்று, சென்ட்ரல்

புலனாயவுப் பிரிவைச் சேர்ந்த காவலர்கள், துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் புதுவண்ணாரப்பேட்டை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள, எண் 768, சக்தி அண்டு சாவணா மதுபானக் கடை எண் 16, பூண்டி தங்கம்மாள் தெருவிலுள்ள ஓம் சாவணா மதுபானக் கடை மற்றும் எண் 750, திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலுள்ள ஓம் சக்தி அண்டு சாவணா மதுபானக்கடை ஆகிய மூன்று கடைகளைச் சோதனை செய்து, அங்கே 223 பாட்டில்கள், போலியாக லேபிள் ஒட்டப்பட்டு - அதிலிருந்த சரக்கு உண்மையான சரக்கோ, போலியான சரக்கோ, கவலையில்லை - ஒட்டப்பட்ட லேபிள், போலியான லேபிள் ஒட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து அந்த மதுபானக் கடைகள் மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த மூன்று மதுபானக் கடைகளுமே புது வண்ணை காவல்நிலைய எல்லைக்குள் சுமார் 250 மீட்டர் முதல் 500 மீட்டர் தூரத்திலேதான் அமைந்துள்ளன. எனவே, அந்தப் பகுதியின் காவல்நிலைய ஆய்வாளருக்குத் தெரியாமல் அங்கே அந்த வியாபாரம் நடைபெற்றிருக்க முடியவே முடியாது, பல முறை அறிவுறுத்தப்பட்ட பிறகும், மதுவிலக்குச் சட்டங்களை சரியாக அமல்படுத்தாமல, போலியாக லேபிள்களை ஒட்டி மதுபான பாட்டில்களை விற்க மறைமுகமாக உதவியாக இருந்ததற்காகப் புதுவண்ணைக் காவல்நிலைய ஆய்வாளர் - நேற்று அவர் குறிப்பிட்ட அந்த அதிகாரி - மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டு, தற்போது ஜாமீனிலே இருக்கிறார். இவர் மீது நடவடிக்கை எடுக்க எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது என்பதையும், வழக்கு நடைபெறவிருக்கிறது, அதிலே உண்மை விளங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டாக்டர் செல்லக்குமார் சொன்ன மற்றொரு குறைபாடு அல்லது குற்றச்சாட்டு. அவருக்கே பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். ஏனென்றால், இந்தப் பத்திரிகைகள் எல்லாம் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பெரிய அளவிலே வெளியிட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் அப்படி வெளியிடப்பட வேண்டும், அப்பொழுதுதான் மக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்கும் வழி இருக்கும், காவலர்களும் தவறு செய்திருந்தால் திருத்திக்கொள்ளவும், ஒரு வேளை அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், நடவடிக்கை எடுக்கவும் ஏதுவாக இருக்கும் என்ற அந்தக் காரணத்தாலே, எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும், தரவேண்டிய விளக்கங்களையும் இங்கே நான் தர வேண்டியவனாக இருக்கிறேன். அமைந்தகரையில் நடைபெற்ற



நிகழ்ச்சி பற்றி விளக்கமாக அவர் இங்கே குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் பற்றி இதே அவையிலே 24-3-1997 அன்று புரசைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் விரிவாகப் பேசி, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமே கொண்டு வந்தார்கள். நான், ஏதோ தவறான தகவல்களைச் சொல்லிவிட்டதாக டாக்டர் செல்லக்குமார் இங்கே குறிப்பிட்டார். அன்றைக்கு நான் பேசும்போதேகூட இங்கே தவறான தகவல்களைத் தந்ததாகச் சொல்கிற டாக்டர் செல்லக்குமாருக்கும் சொல்கின்றேன், அதை உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கின்றேன். இதுபோன்ற நிகழ்வுகள் வருகின்ற நேரத்தில், அதிகாரிகளிடமிருந்து வருகின்ற அறிக்கைகளை நான் படிக்கும்போது, இந்த அறிக்கையை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை, இதில் தவறுகள் இருக்கலாம், தகவல் சரியற்றவையாகவும் இருக்கலாம், எனவே இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்று சொல்லிவிட்டுத்தான் இவைகளைப் படித்திருக்கிறேன். அதைப் போலவேதான், அன்றைக்கும், அந்த அறிக்கையை நான் படித்திருக்கிறேன். இந்தப் புகாரின்மீது, காவல்துறையினர் சிலரை அடித்ததாகத் தந்துள்ள இந்தப் புகாரின்மீது, ஆர்.டி.ஓ. விசாரணை ஒன்று இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நடைபெற்று முடிந்து, அதனுடைய விவர அறிக்கை மாவட்ட ஆட்சியாளருக்கும் அளிக்கப்படவிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும், தயங்காமல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

திருவான்மியூர் காவல் நிலையத்தில் குணசேகரன் என்பவர் Illegal Custody-ல் வைக்கப்பட்டிருக்கிறார் என்று திரு. செல்லக்குமார் இங்கே சொன்னார். குணசேகரன் யார் என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு பழைய குற்றவாளி. அடையாறு, சாஸ்திரி நகர் ஆகிய காவல்நிலையச் சரகத்தில் குற்றங்கள் இழைத்தமைக்காக ஏற்கெனவே இருபது முறை தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளிதான் குணசேகரன் என்பவர். மேலும் அவர் குற்றங்கள் புரிந்தமைக்காக, 1993-ஆம் ஆண்டிலும், அந்த ஆட்சிக் காலத்திலும், மற்றும் 1996-ஆம் ஆண்டிலும் இரண்டு முறை 'குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ்' தலா ஓராண்டுக் காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர் அந்த குணசேகரன். அவரைத்தான் Illegal Custody-ல் வைத்திருப்பதாக நேற்றையதினம் இங்கே செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

5-1-1997 அன்று பட்டினப்பாக்கம் காவல் நிலையச் சரகத்திலும் 11-1-1997 அன்று சாஸ்திரி நகர் காவல்நிலையச் சரகத்திலும் நடைபெற்ற திருட்டுக்கள் சம்பந்தமான இடங்களில் இந்தக் குணசேகரனுடைய விரல் ரேகை பதிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தவிர, சாஸ்திரி நகரில் நடைபெற்ற மூன்று திருட்டுக்களிலும் அவர் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திருட்டுக்கள் குறித்து விசாரிக்கவும், திருடப்பட்ட சொத்துக்களைக் கைப்பற்றவும் அவர் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தற்போது கைதும் செய்யப்பட்டு, குற்ற எண் 85/97-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது சம்பந்தமாக 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும், மற்றும் சில வழக்குகள் சம்பந்தமாக 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும், அவரிடமிருந்து இப்பொழுது கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அவரிடமிருந்து ஏறக்குறைய 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மேலும், திரு. செல்லக்குமார் தொகுதியில் காவல்துறை அதிகாரி ஒருவர் ஐந்து நாட்களுக்கு முன்பு திடீரென்று அவருடைய தொகுதியிலுள்ள மதுபானக் கடைகள், சூதாட்ட விடுதிகள் இவைகளையெல்லாம் பூட்டியதாகச் சொன்னார். சட்டசபை நடக்கிறது என்பதற்காக ஐந்து நாட்களுக்கு முன்பு பூட்டினாரோ என்னவோ என்ற சந்தேகத்தைக் கிளப்பினார். அவருக்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன். மதுவிலக்கு அமல் பிரிவு மூடப்பட்ட பின்பு, சென்னை மாநகரம் முழுவதிலும் சனவரி மாதத்தில் 218 வழக்குகளும், பிப்ரவரி மாதத்தில் 244 வழக்குகளும், மார்ச் மாதத்தில் 252 வழக்குகளும், ஏப்ரல் மாதத்தில் இதுவரையில் 163 வழக்குகளும் மதுபானக் கடைகள்மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதைப் போலவே, சூதாட்ட விடுதிகள் சம்பந்தமாக சனவரி மாதத்தில் 298 வழக்குகளும், பிப்ரவரி மாதத்தில் 283 வழக்குகளும், மார்ச் மாதத்தில் 282 வழக்குகளும், சூதாட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட்டன. தியாகராய நகர் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டாலும்கூட, சனவரி மாதத்தில் 47 மதுபானக் கடைகள் மீதும், பிப்ரவரி மாதத்தில் 24 மதுபானக் கடைகள் மீதும், மார்ச் மாதத்தில் 43 மதுபானக் கடைகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைப்போலவே, சனவரி மாதத்தில் 91 சூதாட்ட விடுதிகள் மீதும், பிப்ரவரி மாதத்தில் 83 சூதாட்ட விடுதிகள் மீதும், மார்ச் மாதத்தில் 79 சூதாட்ட விடுதிகள் மீதும் நடவடிக்கைகள்



எடுக்கப்பட்டன. 'அடேயப்பா தியாகராய நகரில் இவ்வளவு சூதாட்ட விடுதிகளா!' என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் என்னிடம் ஒரு சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்தார்கள். கோடம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் - அவருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், அவர் யோக்கியமாக பிறகு நடந்து கொண்டார்—அவர் சிலபேரைச் சேர்த்துக்கொண்டு ஒரு இடத்தில், யோகாசன ஆலயம் என்ற அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அங்கே இப்படிப்பட்ட கேளிக்கையை நடத்திக் கொண்டிருந்தார். அதைப்பற்றி அந்த யோகாசன ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், திரு. சொக்கர் மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பினார்கள். "உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இங்கே ஒரு கூடம் அமைத்துக் கொண்டிருக்கிறார், அது எங்களுடைய இடம் என்று கேட்டதற்கு, அவர் வெளியேற மறுக்கிறார். நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று கேட்டார்கள். அந்த வேண்டுகோள் என்னிடத்தில் 20-ஆம் தேதி தரப்பட்டது. 24-ஆம் தேதி அந்த இடம் காலி செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நன்றி தெரிவித்து யோகாசன ஆலயத்தை சேர்ந்தவர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் படிக்கிறேன்:

"Respected Sir, On 20-3-1997, we submitted our prayers to you regarding trespassing and illegal occupation of our premises at No.7 Vanniyarpon Street, Choolaimedu, Chennai. Under Your guidance, the Police personnel have acted immediately, vacated the illegal occupation and restored our property back to us on 24-3-1997. On behalf of the President and Members of our Aalayam and on my own behalf we hereby convey our heartfelt thanks to you and the Police Department for the express action taken and rendering justice. Thanking you, Murugesapandiyan, General Secretary" என்று எழுதியிருக்கிறார்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் நன்றி தெரிவித்துவிட்டார்கள் என்பதற்காக மாத்திரமல்ல. இதைப்போன்ற நன்றிகள் முதலமைச்சருக்கு வராமல், போலீஸ் துறையிலுள்ள அதிகாரிகளுக்கும் வரவேண்டும் என்கின்ற அளவிற்கு அந்த அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற வேண்டுகோளையும் நான் இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். பேரவையின் அலுவல் நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசுகிறபோது சொன்ன கருத்து, திருவான்மியூரிலே 90 நாட்களாக illegal custody-ல் வைத்திருக்கிறார்கள் என்பதுதான். அதைச் சொல்லும்போது மேலும் சொல்லியிருக்கிறேன். என்ன காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்கிற ஆதாரம் என்னிடம் கிடையாது; அதற்கான தகவல் கிடையாது; ஆனால் illegal custody--ல் 90 நாட்கள் வைத்ததுதான் தவறு என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய பேச்சு அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இரண்டாவதாக, தலைமைக் காவலர் சந்திரன் என்பவர் கொலை செய்யப்பட்ட ஆண்டு, மாதம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நீங்கள் 22 பேர் பேசியிருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருடைய கருத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொன்னால், உங்கள் ஒவ்வொருவரையும் நான் திருப்பி விளக்கம் கேட்டால், இது என்ன மானியக் கோரிக்கையா அல்லது வேறு விவாதமா? நீங்கள் குற்றவாளிக்காக வாதாடவில்லை என்று சொல்லிக்கொண்டு நிறுத்துங்கள். (குறுக்கீடு) குற்றவாளிக்காக வாதாடவில்லை என்று சொல்லிக்கொண்டு நிறுத்துங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** குற்றவாளிக்காக வாதாடினார் என்று நான் எங்கும் பேசவில்லை. திரு. செல்லக்குமார் குற்றவாளிக்காக வாதாடினார் என்ற வார்த்தைகளை நான் எங்கும் சொல்லவில்லை. வாக்குப் பிரயோகமாக என்னுடைய உரையிலே எங்கும் இடம் பெறவில்லை. அவர் குறிப்பிட்ட குணசேகரன் என்பவர் எப்படிப்பட்டவர்; அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்; அவரிடமிருந்து 70,000 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்ற கருத்தைத்தான் சொன்னேன்.



பேராசிரியர் தீரன் அவர்கள் பேசும்போது— அவர் இன்றைக்கு அவைக்கு வரவில்லை. வேறு வேலையாக அவர் போயிருக்கிறார். பஞ்சாயத்து யூனியனுக்கு பூட்டு போடுகிற போராட்டத்திற்கு, இப்படிப்பட்ட போராட்டங்களில் காவல் துறை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து நாம்தான் ஒரு முடிவு செய்ய வேண்டும். எத்தனையோ போராட்டங்களை நடத்தலாம். பஞ்சாயத்து யூனியனுக்கு முன்னால் மறியல் செய்கிறோம் என்கின்ற அளவிற்கு போராட்டம் நடத்தலாம். தவறு நடந்திருக்கலாம். தவறுக்காக வக்காலத்து வாங்கவில்லை. பஞ்சாயத்து யூனியனைப் போய் பூட்டு போடுகிறோம் என்றால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இருந்தாலும்கூட அவருடைய போராட்டத்தினுடைய உணர்வை நான் மதிக்கிறேன். நோக்கத்தை நான் மதிக்கிறேன். அவர் இங்கே பேசும்போது, அவருடைய இயக்கத்தினர்மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குவதாகச் சொன்னீர்கள்; எதுவும் வாபஸ் வாங்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் என்னிடத்திலே இருக்கிற குறிப்பின்படி 1994-ஆம் ஆண்டு வரையில் — 1986 முதல் 1994 வரையில்—பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்கள் மீது போடப்பட்ட 722 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது அல்ல; முன்பே திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இவை தவிர வேறு சில வழக்குகளை வாபஸ் வாங்குவதாக இருந்தால், அதற்கு மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சில வழக்குகள் விசாரணைக் குறித்து நோட்டீஸ் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதற்கான விவரங்களைத் தந்தால் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில்பட்டியிலே கலவரம் வெடித்தபோது காவல் துறையினர் கைக்கட்டிக் கொண்டிருந்ததாக திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் நாங்கள் இங்கே தலையிட்டு நடவடிக்கை எடுத்தால் எங்கள்மீதே வழக்கு வரும் என்று சொன்னதாகச் சொன்னார்கள். அவரே சொன்னார், வேறு வழியில்லாமல் இருதலைக்கொள்ளி எறும்பாக இருக்கிறார் முதலமைச்சர் என்று, அந்த நிலையையும் சொன்னார். எனக்காக இரக்கப்பட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலே திரு. சுப்பராயன் போல் இருக்கிறார்கள் என்கிற ஒரு நிம்மதி எனக்கிருக்கிறது. அதற்காக நான் ஆறுதல் அடைகிறேன். அவர் சொன்னார் , காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காவிட்டாலும் என்மீது குற்றம் சாட்டுகிறீர்கள். நடவடிக்கை எடுத்து ஏதாவது

நடந்துவிட்டாலும் நான் குற்றவாளியாக்கப்படுகிறேன். இந்த இரண்டுங்கெட்டான சூழ்நிலையில், இரண்டும் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை எனக்கிருக்கிறது என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. ஏன் அப்படி அவர்கள் இருந்தார்கள் என்றால், அவர்கள் தலையிட்டிருப்பார்களேயானால், அந்தக் கலவரம் பெரிதாக வெடித்து இன்னும் பல இடங்களிலே பரவக்கூடிய சூழ்நிலை வரக்கூடும் என்பதற்காகத்தான் அவர்கள் கைக்கட்டிக் கொண்டிருந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகலே 1-35

இன்னொன்றையும் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்களுடைய கிளர்ச்சியில் போலீசார் ஏன் தலையிட வேண்டும்; ஏன் கைது செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். ஏன் அப்படிக் கேட்டார்களென்றால், தொழிலாளர்களைக் கைது செய்கிறார்கள் என்ற ஆத்திரத்திலே கேட்டார்கள். அதுவும், எடுத்த எடுப்பிலே, ஏன் முதலாளிகளைக் கைது செய்யவில்லை என்றும் கேட்டார்கள். முதலாளிகளைக் கைது செய்தாலும் போலீசாரின் தலையீடு என்று தானே அர்த்தம். ஆனாலும், நான் நேற்றையதினம், மாலையிலே போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு பேசினேன். திரு. சுப்பராயன் அவர்களுடைய பேச்சின் அடிப்படையிலே அவர்களிடத்திலே பேசினேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் போலீசார், போலீஸ் பணிகளான அடிப்பது, உதைப்பது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, கண்ணீர்ப் புகை உபயோகிப்பது என்று மாத்திரம் அல்லாமல், போலீசாரும் அந்த மாவட்ட அதிகாரிகளைப் போல, அமைதியை நிலைநாட்டுகின்றவர்களைப் போல, நடந்து கொண்டு, அவர்களையெல்லாம் அழைத்து பேசி, சமாதானத்தை உருவாக்க முயலலாம், போலீஸ் அதிகாரிகளும் முயலலாம் என்று சொல்லி, அதைப் போலீஸ் அதிகாரிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றதொரு நல்ல உண்மையை, இந்தச் செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. வெங்கடசாமி அவர்கள் பேசும்போது, போலீஸ் துறையைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மனித நேயத்தோடு, மக்களுடைய குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். அதற்காக வேண்டி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மாநில மனித உரிமைக் கழகம், மனித உரிமைகள் ஆணையம் ஒன்றை ஏற்படுத்த



20-12-96-லே அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள். மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கான வரம்புகளும், மற்றும் ஏனைய நிபந்தனைகளும் வரையறை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. நைனார்சுந்தரம் அவர்களைத் தலைவராகவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே.எஸ். சாமிதுரை, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. அப்துல்கனி, திரு.ஆர். ரத்தினசாமி, டாக்டர் எம். சுசிலாராஜ் ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்து, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனி, இப்படிப்பட்ட மனித உரிமை மீறல் காரியங்கள் எங்கு நடைபெற்றாலும், அவைகளை விசாரித்து, நியாயப்பூர்வமாக, அரசின் தலையீடு எள்முனையளவும் இல்லாமல், அதைப்பற்றிக் கருத்தறிவிக்க, நீதி வழங்க இந்த ஆணையம் செயல்படும் என்ற உறுதியையும் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டத்திலே, திருச்சிற்றம்பலம் கிராமத்தில் யாரோ ஒருவர் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற வதந்தியின் அடிப்படையில் முருகையன் என்பவர் கொலைக்கு ஆளானார் என்பதைத் திரு. சந்தானம் அவர்கள் இங்கே குறிப்பிட்டு, அவருடைய குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதைப் பற்றிய விவரங்களை நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, கலந்து பேசி, அதற்கு ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கொடியங்குளம் விசாரணைக் கமிஷன் அறிக்கை என்னவாயிற்று என்றும், சந்தானம் அவர்கள் கேட்டார்கள். கொடியங்குளம் சம்பவம் குறித்து, ஒரு தனி நபர் விசாரணைக் கமிஷன் அமைத்து, கடந்த கால அரசு விசாரணை செய்யத் தூண்டியது. ஆனால், அந்த விசாரணை போதுமானது அல்ல என்று பல கட்சிகளின் தலைவர்களும், பொதுமக்களும், நண்பர் கிருஷ்ணசாமி போன்றவர்களும் அன்றைக்குக் குரல் எழுப்பியதன் காரணமாக 27-6-1996 அன்று மத்திய அரசு தந்த ஒப்புதலின் அடிப்படையில், கழக அரசும், சி.பி.ஐ. அமைப்பதற்கு ஒப்புதலை அளித்து, 30-7-1996 அன்று சி.பி.ஐ.-யிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தற்போது சி.பி.ஐ. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், கோமதிநாயகம் கமிஷன், பழைய கமிஷன், அதனுடைய அறிக்கையை வெளியிடுவது நல்லதல்ல என்ற முறையில், அந்த அறிக்கை வெளியிடப்படாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்கள் நேற்றைக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, ஏராளமான குறைகளைச் சொன்னார்கள். அவர் எப்பொழுதும் குற்றஞ்சாட்டிப் பேசுகின்றவர் அல்ல. அவருடைய வயதும், அவருடைய பண்பும், அனுபவமும் அப்படி. எனவே, அவர் ஏராளமான குறைகளைச் சொல்லி, அவைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதை வைத்து நான் விசாரித்த அளவில், அவர் குறிப்பிட்ட கமலந்தேவி என்பவரை அவரது கணவர் கொலை செய்தது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; எப்.ஐ.ஆருடன் சரி என்று சொன்னார். அதை விசாரித்துப் பார்த்ததில், இதுகுறித்து குற்ற எண் 386/93, பிரிவு 302 இந்திய தண்டனைச் சட்டப்படி இவரது கணவர் லாரன்ஸ் கைது செய்யப்பட்டிருக்கிறார். பிறகு, ஜாமீனிலே வெளிவந்து, தலைமறைவாகியிருக்கிறார் என்ற செய்தி எனக்குத் தரப்பட்டுள்ளது. அதைப்போலவே, அஞ்சுகிராமத்தில் நடந்த மூவர் கொலை பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை, எஃப்.ஐ.ஆருடன் சரி என்று சொன்னார். குற்ற எண் 483/96, பிரிவு 302, இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கிலே மொத்த எதிரிகள் 26 பேர். இதிலே 17 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 1 பேர் நேராக, நீதிமன்றத்திலே சரண் அடைந்திருக்கிறார்கள். 4-1-1997 அன்று குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு விட்டது; எஃப்.ஐ.ஆருடன் நிற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

குழித்துறையிலே, கடைகளை நாசம் செய்ததைப் பற்றி எதுவும் நடவடிக்கை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இந்தக் குற்றத்தினுடைய எண் 823/96-ல், வழக்கு, 436 வது இந்திய தண்டனைச் சட்டப்படி, பதிவு செய்யப்பட்டு, 5 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குழித்துறைப் பகுதியிலே, கள்ளச் சாராயம் பற்றி திரு. மணி குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், கள்ளச் சாராய வேட்டை நடத்தி, 953/96 மற்றும் 954/96 என்ற இரண்டு வழக்குகளைப் பதிவு செய்து, 4 வாகனங்களைக் கைப்பற்றி, 14 பேரைக் கைது செய்திருக்கிறார்கள் என்ற செய்தியை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



அருமனையிலே, 2 கற்பழிப்பு வழக்குகளைப் பற்றியும் திரு. மணி அவர்கள் கூறினார்கள். இதிலேயும், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 3 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; எஃப்.ஐ.ஆரோடு நிற்கவில்லை.

வள்ளியூரில் கொலை வழக்குப் பற்றி கூறினார்கள். அதிலேயும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஒருவர் கைது செய்யப்பட்டு, குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு, நீதிமன்றத்திலே நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு அடுத்துதான் உச்சகட்டம் வரவிருக்கின்றது; பலருடைய கோரிக்கைகள், இங்கே வைக்கப்பட்ட ஆலோசனைகள், இவற்றைப் பற்றியெல்லாம். இதற்கு முன்பு, கடந்த ஆண்டு சொன்னதைச் செய்தோமா, இல்லையா என்று சொன்னால்தான் சொல்லப் போவதைச் செய்வார்களா, இல்லையா என்ற நம்பிக்கை உங்களுக்கு வரும். எனவே, கடந்த ஆண்டில், 26-8-1996 அன்று, நான் இந்த மானியத்திலே பேசியபோது செய்யப்பட்ட அறிவிப்புகள்;

1976-ம் ஆண்டு இளநிலை உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள், கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தப்படுவார்கள் என்று சொன்னேன். இது அறிவிப்பாகவே இல்லாமல், இந்த அறிவிப்பின்படி, அரசு ஆணை வெளியிடப்பட்டு, தகுதிவாய்ந்த 226 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையினருக்கு வழங்கப்படும் சீருடை செலவுப் படி, ரூ.25 என்பது, ரூ.30 ஆக உயர்த்தப்படுமென்று அன்று சொன்னேன். அந்த அறிவிப்பின்படி, சீருடை செலவுப் படியும் ரூ. 30 ஆக உயர்த்தி 30-10-1996-ல், ஆணை வெளியிடப்பட்டு, இச்சலுகை இப்போது காவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓட்டுநர்களுடைய துணைப் படி — டிரைவர்களுடைய துணைப் படி — ரூ. 40-லிருந்து, ரூ.60 ஆக உயர்த்தப்படும் என்று அன்று சொன்னேன். அதன்படி, சலுகைகள் வழங்கி, 30-10-1996-ல் ஆணையிடப்பட்டு, திட்டம் அமல்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆயுத சேமப் படைப் பிரிவில் சிறப்பாகப் பணிபுரியும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகை உயர்த்தல் பற்றி, அன்றைக்குச் சொன்னேன். சேம ஆயுதப் படை — Armed Reserve — காவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் செயல்திறன் ஊக்கத் தொகை ரூ. 3 ஆக இருந்ததை, ரூ.10 ஆக உயர்த்தியும், தலைமைக் காவலர்களுக்கு ரூ.5 ஆக இருந்ததை, ரூ.15 ஆக உயர்த்தியும், 3-10-1996-ல் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையினரின் குடும்பத்திற்கும், சுகாதார நலத் திட்டத்தின்கீழ், மருத்துவ உதவி வழங்கப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டத்தை, காவல் துறையினரின் குடும்பத்திற்கும் விரிவுபடுத்தி, 4-10-1996-ல் அரசாணை வெளியிடப்பட்டு, நடைமுறையிலே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூரில் மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் துணைக் காவல்துறைத் தலைவர் அலுவலகம் புதிதாகக் கட்டப்படுமென்று சொன்னேன். 20-10-1996-ல், அரசு ஆணை அதற்காகப் பிறப்பிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து பொதுப்பணித் துறையால், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறை வீட்டுவசதி வாரியத்திற்கு, அவர்களுடைய பணிகள் மேம்பாடடைய, ஒரு கோடி ரூபாயிலிருந்து, 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தால், 'உங்கள் சொந்த இல்லம்' என்ற திட்டத்தின்கீழ், காவலர்களுக்கு, இதுவரை வீடுகட்ட முன்பணமாக வழங்கப்பட்ட தொகை, ஒரு கோடி ரூபாய் என்று இருந்ததை, 3 கோடி ரூபாயாக உயர்த்தி, 20-12-1996-ல் ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் காவலர்கள், 15 ஆண்டுக் காலம் பணி முடித்த பிறகு, தலைமைக் காவலர்கள் பதவிக்குப் பதவி உயர்வு வழங்கப்படும் என்று அன்றைக்கு சொன்னேன். இதற்கான ஆணை, 3-10-1996 அன்றே வெளியிடப்பட்டு விட்டது. இதன் மூலம், 399 முதல்நிலைப் பெண் காவலர்கள், தலைமைப் பெண் காவலர்களாகப் பதவி உயர்த்தப்பட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நற்பணி சிறப்புப் படி வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்துதல்; இதன்படி, 15 ஆண்டுகள் நற்பணி முடிக்கும் காவலர்களுக்கு 5 ரூபாய் வீதமும், 20 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 7½ ரூபாய் வீதமும், 25 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 10 ரூபாய் வீதமும், 30 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 15 ரூபாய் வீதமும், 35 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு 20 ரூபாய் வீதமும், சிறப்புப் படி வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான ஆணை, 25-10-1996-ல் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, 'நற்பணி' என்றால், 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் நல்ல பெயரோடு, அந்தக் காவல் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்கள் என்று பொருள்.

*பிற்பகல் 1-45*

1989-ஆம் ஆண்டு ஆயுத சேமப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியமர்த்தப்பட்ட தகுதிவாய்ந்த 395 உதவி ஆய்வாளர்களில் எஞ்சியுள்ள 85 பேருக்கும் குறிப்பிட்ட பயிற்சி அளிக்கப்பட்டு, சட்டம் - ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றப்படுவார்கள் என்று அன்றைக்கு அறிவித்தேன். ஆயுத சேமப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றி வரும் 85 உதவி ஆய்வாளர்களைப் பயிற்சிக்கு அனுப்புவது தொடர்பாக அக்டோபர் 1996-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவர்களும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள அனைத்து நபர்களையும், சட்டம் - ஒழுங்கு பிரிவிற்கு மாறுதல் செய்வதற்கு ஏற்ற வண்ணம் பணி விதிகளுக்கான திருத்தங்களும் வெளியிடப்பட்டுவிட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட காலியாக உள்ள 454 காவல் பணிகள் உடனடியாக நிரப்பப்படும் என்று சொன்னேன். அதை அமல்படுத்த ஆணைப் பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1989-ஆம் ஆண்டு காவலர் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறாத - நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அடிக்கடி நம்முடைய திரு. சொக்கர் அவர்களும் மற்றும் நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்களும் திரு. சுப்பராயன் அவர்களும், திரு. அப்துல்

லத்தீப் அவர்களும். திரு. திருநாவுக்கரசு அவர்களும் எடுத்துச் சொன்ன
அந்தக் கருத்தின்படி 1989-ஆம் ஆண்டு காவலர் தேர்வில்
தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறாத—1609 பேருக்கு அவர்கள்
விண்ணப்பித்தால் உரிய விதிகளைத் தளர்த்தி நியமன உத்தரவு
வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) (ஸ்டாலின் பெயரை
விட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள்
சேர்த்துக்கொள்ளுங்கள்.) இந்த 1609 பேர்களில் 1070 பேர் குறிப்பிட்ட
அதிகாரிகள் முன்னிலையில் தக்க சான்று ஆவணங்களோடு வருகை
புரிந்தார்கள். அவர்களுள் 1022 பேர் மருத்துவத் தேர்வு மற்றும் பிற
விசாரணைக்குப் பின் காவலர் பதவிக்குத் தகுதியுடையவர்கள் என்று
கண்டறியப்பட்டார்கள். இதில் 610 பேருக்குச் சம்பந்தப்பட்ட விதிகளைத்
தளர்த்தி அனுமதி உத்தரவு வழங்குவது குறித்து ஆணைகள்
வெளியிடப்பட்டுவிட்டன. 412 பேருக்கு விதிவிலக்குத்
தேவைப்படவில்லை. 610 பேருக்கு கல்வியிலே விதிவிலக்கு, வயதிலே
விதிவிலக்குத் தேவைப்பட்டது. அந்த விதிவிலக்குகளையும் அளித்து
1022 பேருக்கும் பணி வழங்கு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன
ன்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
லி)

5000 காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் நடப்பாண்டிலும்
அடுத்த ஆண்டிலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அன்றைக்குச்
சொன்னேன். சீருடைப் பணியாளர்கள் வாரியம் துவங்கிய 1995-ஆம்
ஆண்டு அந்த ஆட்சியில் 10 ஆயிரம் காவலர்கள் தேர்வு முடித்த பின்னர்
இவ்வளவு உயர்ந்த எண்ணிக்கையிலான அவர்களுக்கு ஒரே நேரத்தில்
பயிற்சி அளிப்பது தொடர்பாக ஏற்பாடுகள் செய்ய இயலாமையால்
இரண்டு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு
ஆணைகள் வெளியிடப்பட்டு முதல் பிரிவினர் 16-4-97 முதல் பயிற்சி
பெற்று வருகிறார்கள். இந்த 6 மாத காலப் பயிற்சி முடிந்ததும் அடுத்தப்
பிரிவினர் பயிற்சிக்கு அனுப்பப்படவுள்ளார்கள். இத்தகைய சூழ்நிலையில்
அடுத்த கட்டக் காவலர்கள் தேர்வினை நடத்த உசிதமில்லையாதலால்
இந்தக் காவலர் தேர்வு வரும் ஆண்டில் நடத்தப்படவுள்ளது.
இதனைப்போல 1,100 உதவி ஆய்வாளர்களில் முதல் பிரிவினரான 500
பேர் மார்ச் 1997-ல் பயிற்சி முடித்துள்ளார்கள். எஞ்சியுள்ள 600 பேர்
விரைவில் பயிற்சிக்கு அனுப்பப்படவுள்ளார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி)



இந்தச் சூழ்நிலையில் உதவி ஆய்வாளர்கள் பதவிக்கான நேரடித்
தேர்வுகளையும் உடனடியாக நடத்த உசிதமில்லையாதலால் இத்தேர்வு
நடப்பாண்டில் நடத்தப்படும் என்பதை உறுதியாகத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

12 இடங்களில் இயங்கி வரும் புறக்காவல் நிலையங்களுக்கு புதிய
காவல் நிலையங்கள் அமைப்பது குறித்து அதற்கான அரசாணையும்
அப்போதே வெளியிடப்பட்டு அமல்படுத்தப்பட்டுவிட்டது.

மீண்டும் காவல் துறை இயக்குநர் அலுவலகம் மெரினா
கடற்கரையில் உள்ள பழம்பெரும் கட்டடத்தில் செயல்பட நடவடிக்கை
எடுக்கப்படும் என்று அன்றைக்குச் சொன்னேன். மெரினா கடற்கரையிலே
உள்ள பழம்பெரும் காவல் துறை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை
தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாகப் புதுப்பிக்க ஒரு
கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு ஒப்பளிப்பு
வழங்கப்பட்டுவிட்டது. அதற்கான ஒப்பந்தப் புள்ளியும்
கோரப்பட்டிருக்கிறது. இடையிலே வழக்கு ஒன்றிருந்தது. தொன்மையான
அந்தக் கட்டடத்தை மாற்றக்கூடாது என்று ஒருவர் வழக்கு
போட்டிருந்தார். அந்த வழக்கு முடிவதற்காக நாம் காத்திருந்து நாமே
அதைப் பயன்படுத்தப்போகிறோம், அந்தத் தொன்மையான கட்டடத்தைப்
பாழாக்கப் போவதில்லை என்று சொன்ன பிறகு அந்த வழக்கு
முடிந்துவிட்டது. எனவே விரைவில் அந்தப் பணி ஆரம்பம் ஆகும்.

திரு. ப. சபாநாயகம் தலைமையிலே அமைக்கப்பட்ட போலீஸ்
கமிஷனின் பரிந்துரைகளில் நிறைவேற்றப்படாத பரிந்துரைகள் மீது
மேல் நடவடிக்கை எடுப்பது பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதில் 100
பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன, 100-வது பரிந்துரை 12 உட்பிரிவுகளைக்
கொண்டதாக இருந்தது. ஆகவே மொத்தம் 112 பரிந்துரைகள். அதில்
54 பரிந்துரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள
பரிந்துரைகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

வன இலாக்கா தனிப் பிரிவைக் கலைத்துவிட்டு அவர்களை மற்ற
காவல் துறை பிரிவுக்கு மாற்றுவது சம்பந்தமாகச் சொன்னேன்.
25-10-96-ல் அதற்கான அரசாணை வெளியிப்பட்டு,
நிறைவேற்றப்பட்டுவிட்டது.

தீயணைப்பு நிலையங்கள் 21 துவங்கப்படும் என்று சொன்னேன். 26-11-96-ல் அரசாணை வெளியிடப்பட்டு 21 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அடுத்து உத்தமர் காந்தி பெயரில் பதக்கம் வழங்குதல். கள்ளச்சாராயம் ஒழித்தல் குறித்து வெகுமதி 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று சொன்னேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

*பிற்பகல் 1-50*

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கலைக்கப்படுகிறது என்று சொன்னேன். அவ்வாறு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. இனி புதிய அறிவிப்புகளோடு என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று இருக்கின்றேன். தமிழ்நாட்டில் தற்போது ஆய்வாளர்கள் வரையிலுள்ள காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 83,825 ஆகும். மேற்படி எண்ணிக்கையில் இதுவரை 25,791 காவல் பணியாளர்களுக்கு மட்டுமே குடியிருப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணியாளர்களுக்கு அந்த வசதியில்லை. ஆண்டு ஒன்றுக்கு 1,500 குடியிருப்புகள் வீதம்தான் கட்டப்படுகிறது. இது நம்முடைய இலக்கை நிறைவு செய்யாது என்பதற்காக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 80 கோடி ரூபாய் செலவில் இனிமேல் 1,500 குடியிருப்புகளுக்குப் பதிலாக 2,500 குடியிருப்புகள் வீதம் காவல் பணியாளர்களுக்கு என்று கட்டித் தரப்படும். அது மாத்திரம் அல்லாமல், தமிழ்நாட்டிலே 98 இடங்களில் உள்ள 2751 காவலர் குடியிருப்புகளில் எல்லா காவல் குடியிருப்புகளுக்கும் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில் நவீன கழிப்பிட வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல். தமிழ்நாட்டில் மொத்தம் 1,323 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 891 காவல் நிலையங்கள் அரசு கட்டிடங்களிலும் எஞ்சியுள்ள 432 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு முதற்கட்டமாக மேலும் 79 காவல் நிலையங்களுக்கு, கட்டிடம் கட்ட அனுமதிப்பது என்றும் மூன்று ஆண்டுகளில் கட்டி முடிப்பது என்றும் ரூ.15 கோடி செலவு ஆகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய காவல் அலுவலகம். நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை அலுவலகத்தில் பழைய கட்டடம் 1992-ல் இடிக்கப்பட்டு விட்டது. தற்போது மாவட்ட



காவல்துறை அலுவலகம் போதுமான வசதிகள் இல்லாத ஒரு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இது மாவட்டக் காவல் துறையின் சிறப்பான நிர்வாகத்திற்கு உகந்ததாக இல்லையென்பதால் மாவட்ட காவல் துறை அலுவலகம் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டுகின்ற பணி நடப்பாண்டில் தொடங்கப்படும்.

கோயம்புத்தூரில் காவல் ஆணையர் அலுவலகம் கட்டுதல். 1989-90-ல் கழக அரசு பொறுப்பிலிருந்தபோதுதான் கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் காவல் துறை ஆணையகங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், கோவையில் இதுவரை காவல் ஆணையர் அலுவலகத்திற்குத் தகுந்த கட்டிட வசதி இல்லை. நடப்பாண்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதற்கான கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்படும்.

காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கு கொலை-கொள்ளை போன்ற அவசரத் தேவைகளின்போது விரைந்து செயல்பட ஏதுவாக இந்த அரசு பொறுப்பேற்றபின் இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபாய் செலவில் 224 புதிய வாகனங்கள் வாங்க ஆணையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து மேலும் 105 வாகனங்கள், மூன்று கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிக்குத் தற்போது வழங்கப்படும் உணவு முன்பணம் ரூ.5,000, இது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாடு காவல் ஆணையத்தின் (தமிழ்நாடு போலீஸ் கமிஷன்) சபாநாயகம் கமிஷன் செய்த பரிந்துரைகள் பலவற்றில் ஒன்றாகத் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிக்கு வழங்கப்பட்டுவரும் உணவு முன்பணத்தை உயர்த்தவும் பரிந்துரை செய்தது. அதை ஏற்றி ரூ.5,000 உணவு முன் பணம் என்பது ரூ.25,000 ஆக நடப்பாண்டிலிருந்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புப் பணியிலே அவசரக் காலங்களிலும் பொது நிகழ்ச்சிகளின்போது ஈடுபடுகின்ற காவல் பணியாளர்களுக்குத் தற்போதைய விலைவாசி நிலவரத்தைக் கருத்திற்கொண்டு, இங்கே திரு. ரங்கநாதன் போன்றவர்கள் எல்லாம் எடுத்து சொன்ன அந்த உருக்கமான வேண்டுகோளையெல்லாம் ஏற்று, இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு உணவுப் படி ரூ.16-லிருந்து ரூ.25 என்றும் தலைமைக் காவலர் முதல்நிலைக் காவலர்களுக்கு ரூ.20-லிருந்து ரூ.30 என்றும், ஆய்வாளர்/ உதவி ஆய்வாளர்களுக்கு ரூ.30 லிருந்து ரூ.45 என்றும் உயர்த்தப்படும்.

காவலர்களுக்கு தற்போது உணவு மானியத் திட்டத்தின் அடிப்படையில் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின்

எண்ணெய் ஆகியவை 50 விழுக்காடு மானியத் தொகையில் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. துவரம்பருப்பு கிலோ ஒன்றுக்கு 4 ரூபாய் வீதமும், உளுத்தம்பருப்புக்கு ரூ.3 வீதமும், ரவை, மைதா ஆகியவைகளுக்கு ரூ.1.50 வீதமும் இப்போது மானியத் தொகை வழங்கப்படுகிறது. தற்போதைய விலைவாசி ஏற்றத்தினைக் கருத்தில்கொண்டும் காவலர்களின் நலன் கருதியும் மானியத்தொகை கிலோ ஒன்றுக்கு, துவரம்பருப்புக்கு தற்போது உள்ளது ரூ.4 என்பது இனிமேல் ரூ.10 ஆக உயர்த்தப்படுகிறது. உளுத்தம்பருப்புக்கு தற்போது உள்ளது ரூ.3 என்பது இனிமேல் ரூ.10 ஆக உயர்த்தப்படும். ரவை, மைதாவுக்கு தற்போது உள்ளது ரூ.1.50 என்பது ரூ.3.00 ஆக உயர்த்தப்படும்.

தமிழகக் காவல் துறையினருக்கு இதுவரை குடும்பக் கார்டுகள் வழங்கப்படுவதில்லை. கழக அரசு காவல் துறையிலுள்ள 80,000 பேர்களுக்கு குடும்பக் கார்டுகளை புதிதாக வழங்குவது என்றும் அவர்கள் அந்தக் கார்டுகளைப் பயன்படுத்தி ரேஷன் கடைகளில் தற்போது பொது மக்களுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்குவதைப் போல பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ரேஷனிலே அவர்களுக்கு மண்ணெண்ணெய் மானிய விலையிலே தரப்படும். அதற்கான ரேஷன் கார்டுகள் அவர்களுக்குத் தனியாக வழங்கப்படும்.

பிற்பகல் 1-55

அதைப்போல, தமிழ்நாடு அரசு காவலர் நல நிதிக்கு மானியத் தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ. 25 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இசைக்குழு. தமிழ்நாடு காவல்துறை இசைக்குழுவில். இப்போது பேண்ட் மாஸ்டருக்கு ரூ. 50; இனிமேல் ரூ.100 வழங்கப்படும். உதவி பேண்ட் மாஸ்டருக்கு இப்போது ரூ. 25; இனிமேல் 75 ரூபாயாக சிறப்பு ஊதியம் வழங்கப்படும். தலைமைக் காவலர்/ஹவில்தார்களுக்கு இப்போது 25 ரூபாய்; இனிமேல் 60 ரூபாயாக வழங்கப்படும். காவலர் நாயக்/ லான்ஸ் நாயக் இவர்களுக்கு இப்போது 15 ரூபாய் என்பது இனிமேல் 40 ரூபாயாக வழங்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரப் படி உயர்த்துதல். மாதப்படி இப்போது 20 ரூபாய் என்பது இனிமேல் 40 ரூபாயாக உயர்த்தப்படும். உள்ளூர் தலைமைக் காவலர் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும்,



ஆயுதப்படை நாயக்/ தலைமைக் காவலர் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும், தமிழ்நாடு சிறப்புக் காவல் நாயக்/ ஹவில்தார் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

வீரதீரச் செயல்களில் காயமடையும்/மரணமடையும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை அதிகரிக்க வேண்டுமென்று மிகுந்த கருணையோடு திரு. ரங்கநாதன் அவர்கள் நேற்று நீண்டநேரம் பேசியிருக்கிறார்கள். வீரமரணம் அடைவோருக்கு இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இனிமேல் இரண்டு இலட்சம் ரூபாயாக—அவர் 1-½ இலட்சம் ரூபாய்தான் கேட்டார் (மேசையைத் தட்டும் ஒலி)—1-½ இலட்சம் வழங்க வேண்டுமென்று சொன்னார். அது இரண்டு இலட்சமாக வழங்கப்படும்.

செயல்பட முடியாத அளவுக்கு நிரந்தர ஊனம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 20 ஆயிரம் என்பது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) படுகாயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 5 ஆயிரம் என்பது 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். சாதாரணக் காயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 3 ஆயிரம் என்பது 5 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல்துறையிலே, வான் தந்திப் பிரிவில் பணியாற்றும் நாயக்குகள் பல ஆண்டுகளாக எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல் தேக்க நிலையிலே இருக்கிறார்கள். இதனால் அவர்களது ஆர்வம் குன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைக் கருத்திலே கொண்டு, 10 சிறப்புக் காவல் அணிகளிலும் மற்றும் ஒரு படைப் பயிற்சி மையத்திலும் 90 நாயக் பதவிகள் ஹவில்தார் பதவிகளாக நிலை உயர்த்தப்படும்.

நான் ஏற்கெனவே அப்பழுக்கற்ற பணிபுரிந்த காவலர்களுக்கு சிறப்புப்படி, 10 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 15 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 20 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 25 ஆண்டுகள் என்றால் எவ்வளவு என்று சொன்னேன். சென்ற ஆண்டு சொல்லி, இந்த ஆண்டு நிறைவேற்றியிருக்கிறோம். இப்போது அறிவிப்பது இன்னும் புதிய அறிவிப்பு.

15 ஆண்டுகள் நற்பணி புரிந்த காவலர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு தரப்படுகிற சிறப்புப்படி— அலவன்ஸ்— 15 ஆண்டுகள் நற்பணி முடித்தவர்களுக்கு ரூ.5 ; 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ.7.50; 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 10;

ஆயுதப்படை நாயக்/ தலைமைக் காவலர் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும், தமிழ்நாடு சிறப்புக் காவல் நாயக்/ ஹவில்தார் மாதப்படி ரூ. 25 என்பது ரூ. 50 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

வீரதீரச் செயல்களில் காயமடையும்/மரணமடையும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகையினை அதிகரிக்க வேண்டுமென்று மிகுந்த கருணையோடு திரு. ரங்கநாதன் அவர்கள் நேற்று நீண்டநேரம் பேசியிருக்கிறார்கள். வீரமரணம் அடைவோருக்கு இதுவரையில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இனிமேல் இரண்டு இலட்சம் ரூபாயாக—அவர் 1-½ இலட்சம் ரூபாய்தான் கேட்டார் (மேசையைத் தட்டும் ஒலி)—1-½ இலட்சம் வழங்க வேண்டுமென்று சொன்னார். அது இரண்டு இலட்சமாக வழங்கப்படும்.

செயல்பட முடியாத அளவுக்கு நிரந்தர ஊனம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 20 ஆயிரம் என்பது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) படுகாயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 5 ஆயிரம் என்பது 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். சாதாரணக் காயம் அடைவோருக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ. 3 ஆயிரம் என்பது 5 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல்துறையிலே, வான் தந்திப் பிரிவில் பணியாற்றும் நாயக்குகள் பல ஆண்டுகளாக எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல் தேக்க நிலையிலே இருக்கிறார்கள். இதனால் அவர்களது ஆர்வம் குன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைக் கருத்திலே கொண்டு, 10 சிறப்புக் காவல் அணிகளிலும் மற்றும் ஒரு படைப் பயிற்சி மையத்திலும் 90 நாயக் பதவிகள் ஹவில்தார் பதவிகளாக நிலை உயர்த்தப்படும்.

நான் ஏற்கெனவே அப்பழுக்கற்ற பணிபுரிந்த காவலர்களுக்கு சிறப்புப்படி, 10 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 15 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 20 ஆண்டுகள் என்றால் எவ்வளவு; 25 ஆண்டுகள் என்றால் எவ்வளவு என்று சொன்னேன். சென்ற ஆண்டு சொல்லி, இந்த ஆண்டு நிறைவேற்றியிருக்கிறோம். இப்போது அறிவிப்பது இன்னும் புதிய அறிவிப்பு.

15 ஆண்டுகள் நற்பணி புரிந்த காவலர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு தரப்படுகிற சிறப்புப்படி— அலவன்ஸ்— 15 ஆண்டுகள் நற்பணி முடித்தவர்களுக்கு ரூ.5; 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ.7.50; 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 10;

30 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 15/-; 35 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 20/- என்று இப்போது இருக்கிறது. இனிமேல், 15 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 15; 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 20/-; 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 25/-; 30 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 30/-; 35 ஆண்டுகள், கடைசிவரை நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ. 40/- என்ற வீதத்திலே வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

15 ஆண்டுக்காலம் பணியாற்றி பதவி உயர்வு கிடைக்காமல் உள்ள காவலர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களுடைய பணித் திறனை மேம்படுத்தவும், ஏற்கெனவே இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மகளிர் காவலர்களுக்குப் பதவி உயர்வு அளித்ததைப் போலவே, ஆண் காவலர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளது. ஆண்கள் எல்லாம் கைத்தட்டலாம். (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆண்டுக்காலம் பணியாற்றிய இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள். 15 ஆண்டுக்காலம் முதல்நிலைக் காவலர்களாகப் பணியாற்றியவர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள். இதனால் மொத்தம் 26 ஆயிரம் காவலர்கள் பயனடைவார்கள்.

மதுரை மாநகருக்கு மேலும் ஒரு ஆயுத சேமப்படைப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டும், அங்கே நடைபெறுகின்ற கோவில் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் இவைகளுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதாலும், தற்போதுள்ள 10 காவல் படைப் பிரிவுகளைக் கொண்டு இவை அனைத்திற்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாக இயற்றுவதில் ஏற்படும் சிரமங்களைக் கவனத்திற்கொண்டும், மதுரை மாநகரக் காவல் பணியினை வலுப்படுத்திட வேண்டியது மிகவும் அவசியமென அரசு கருதுகிறது. அதன் அடிப்படையில், கூடுதல் சேமப்படை ஒன்றினை மதுரை மாநகரில் ஏற்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தென்மாவட்டங்களில் அவ்வப்போது நடைபெற்று வருகின்ற இனக் கலவரங்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உடனுக்குடன் சமாளிப்பதற்குத் தேவையான அளவில் காவல் படையினரை, உரிய நேரத்தில் தேவைப்படும் இடங்களுக்கு அனுப்ப



ஏதுவாக காமராசர் மாவட்டத்தில் சிவகாசி நகரினைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு சிறப்புக்காவல் அணியின் பிரிவு ஒன்றை அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 2 00

இப்புதிய அணி அமைப்பின் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குத் தொடரும் செலவினம் 4 கோடியே முப்பது இலட்சம் ரூபாய் என்பதை நினைவூட்டுகின்றேன். தொடராச் செலவினம் ஐந்து கோடி ரூபாய்.

இந்தக் காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர் பொருத்துவது பற்றி இங்கே பேசப்பட்டது. ஏற்கெனவே பல முறை திரு. சொக்கர் பேசியிருக்கிறார். கடந்த ஆண்டு திரு. ஸ்டாலின் பேசியதை நினைவூட்டி நேற்றைக்கு திரு ரங்கநாதன் பேசினார். திரு திருநாவுக்கரசு அவர்களும் இங்கே நினைவூட்டினார்கள். லத்திப் அவர்களும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய பழனிசாமி அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மனதில் வைத்து ஒவ்வொரு காவலர் குடியிருப்பிலும் தனித்தனி மீட்டர்களைப் பொருத்தி மின் அளவினைக் கணக்கிட வகை செய்வதே நல்லது என்று கருதி, தற்போது தமிழகத்திலே 22,717 காவலர் குடியிருப்புகள் இருக்கின்றன. இதில் கடந்த பல ஆண்டுகளிலே காவலர் குடியிருப்புகளுக்குத் தனி மீட்டர் வைக்கப்பட்டது 8,785 குடியிருப்புகளுக்குத்தான். இன்னும் 13,932 குடியிருப்புகள் பாக்கி இருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் ஆண்டுதோறும் இத்தனை குடியிருப்பு என்று எண்ணலாமா என்று பார்த்து, வேண்டாம் 13,932 குடியிருப்புகளுக்கும் தனி மீட்டர் பொருத்த, ஒரேயடியாக உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு 4 கோடியே 18 இலட்சம் ரூபாய் ஆகும். ரொம்ப குறைவுதான்.

புதிய காவல் சரகம் தோற்றுவித்தல். மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல்-மன்னர் திருமலை, வைகை-வீரன் அழகுமுத்து ஆகிய மாவட்டங்களில் எழும் சட்டம்-ஒழுங்கு போன்ற காவல்துறை பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் காவல்துறை கவனிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இம்மாவட்டங்கள் அடங்கிய சரகங்கள் சீரமைக்கப்படுகின்றன. மதுரை சரகம்: மதுரை மாவட்டம், காமராசர் மாவட்டம்; இராமநாதபுரம் சரகம்: இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்முத்துராமலிங்க தேவர் மாவட்டம்; திண்டுக்கல் சரகம்:

திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வீரன் அழகுமுத்து மாவட்டம். இந்தச் சீரமைப்பின் பலனாக திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய சரகம் காவல்துறை துணைத் தலைவர் தலைமையிலே உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமிஷனர்களைப் பற்றிச் சொன்னார்கள். சேலத்திற்கு இன்னும் புதிய போலீஸ் கமிஷனர் வரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். அங்கு மாத்திரம் அல்ல, எல்லா இடங்களிலும் இப்போது வேகமாக வளர்ந்துவரும் நகரங்களாகிய திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளை எல்லையாகக் கொண்டும் அங்கு பெருகி வரும் குற்றங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள், போக்குவரத்து நெரிசல் முதலியவற்றை அவ்வப்போது கவனித்து பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய வேண்டுமென்ற நோக்கத்திலும் காவல் ஆணையகங்கள் அங்கே அமைக்கப்படும். இந்த நான்கு காவல் ஆணையகங்களும் இந்த ஆண்டு ஜூன் முதல் தேதியிலிருந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:

புறக்காவல் நிலையங்களை முழுக் காவல் நிலையங்களாக அமைக்க வேண்டுமென்று பல உறுப்பினர்களும் இன்றும் இதற்கு முன்பும் என்னிடத்திலே கடிதங்கள் மூலமாக பரிந்துரைகளைச் செய்திருக்கின்றார்கள். தற்போது தமிழ்நாட்டிலுள்ள புறக்காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 134. இதில் பின் வரும் இடங்களில் புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

சிதம்பரனார் மாவட்டம் - தருவைகுளம்; காமராசர் மாவட்டம் - சூலக்கரை; ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் - பாமணி; எம்.ஜி.ஆர். மாவட்டம் திருநின்றவூர்; வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் - தக்கோலம்; சிதம்பரனார் மாவட்டம் கடல்குடி; விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் - திருப்பாளபந்தல்; தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் - சிறுபாக்கம்; அண்ணா மாவட்டம் - கேளம்பாக்கம்; நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் மூன்றடைப்பு; மதுரை மாவட்டம் - எம்.கல்லுப்பட்டி; திண்டுக்கல் - மன்னர் திருமலை மாவட்டம் - சுவாமிநாதபுரம்; திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - வானாபுரம்; கோயம்புத்தூர் மாவட்டம். செட்டிப்பாளையம்; எம்.ஜி.ஆர். மாவட்டம் - பொதட்டூர்பேட்டை.

புதிய காவல் நிலையங்களை அமைத்தல். திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளின்படி கோவை, அனுப்பர்பாளையம், புதிய காவல் நிலையம்; பவானி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் வேண்டுகோளை ஏற்று, பெரியார் மாவட்டத்தில் பவானி டிரான்ஸ்போர்ட் என்கிற அந்த இடத்தில் புதிய காவல் நிலையம்; திருப்போரூர் திரு. ஜி. சொக்கலிங்கம் வேண்டுகோளை ஏற்று அண்ணா மாவட்டத்தில் மானாமதி; தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம் மற்றும் மத்திய இணை அமைச்சர் திரு. பாலு இவர்களுடைய வேண்டுகோளை ஏற்று. அண்ணா மாவட்டத்தில் நீலாங்கரை; திரு. இராசேந்திரன் என்கிற தீரன், ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் இந்தூர்.



பிற்பகல் 2-05

திரு. டி. மணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடையாலுமூடு என்ற இடத்தில் இருந்த புறக்காவல் நிலையத்தையே மூடிவிட்டார்களே என்று கேட்டார்கள்; அதற்குப் பிராயச்சித்தமாக அங்கே மீண்டும் புறக்காவல் நிலையம் வரும் என்று சொல்லவில்லை; புறக்காவல் நிலையத்தையே முழுமையான காவல் நிலையமாக அமைக்க அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ராஜ்குமார் மன்றாடியார் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்டத்தில் வெள்ளோடு;

பால்வளத்துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் காட்டூர்—அமைச்சர்கள் பெயர்களை எல்லாம் சொல்வதற்குக் காரணம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள்தானே?

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர், சி.ஆர். இராமச்சந்திரன், வேண்டுகோளுக்கிணங்க வடவள்ளி;

மீன்வளத்துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க சிதம்பரனார் மாவட்டத்தில் ஆத்தூர்;

சட்டமன்றப் பேரவைத் தலைவர் (சிரிப்பு) அன்புக் கட்டளைக்கு இணங்க மதுரை மாநகரில் கே. புதூர்;

திருத்தணி இ.ஏ.பி. சிவாஜி, வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி போக்குவரத்து, அதாவது டிரான்ஸ்போர்ட் போலீஸ் ஸ்டேஷன்;

நம்முடைய திருநாவுக்கரசு—நம்முடைய என்றால் பயமாக இருக்கிறது. பெயரோடு சொல்வதற்கு; (சிரிப்பு) திருநாவுக்கரசு, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெகதாப்பட்டினம்;

காமராசர் மாவட்டத்தில், வணிகவரிகள் துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க மல்லாங்கிணறு; அவர் சொந்த ஊரிலேயே வைத்துக் கொள்கிறார்;

இராஜாஜி மாவட்டத்தில் கந்தசாமி, எம்.பி., (இராசிபுரம் டி.எம்.சி.,) அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மங்களபுரம்;

இராமநாதபுரம் மாவட்டத்தில் தங்கவேலன் வேண்டுகோளுக்கிணங்க திருப்புல்லாணி;

நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் மோகனதாசன் வேண்டுகோளுக்கிணங்க வைத்தீஸ்வரன்கோயில்;

இவை தவிர மற்றும் துறையின் மூலமாக வைக்கப்படுகின்ற காவல் நிலையங்கள்—

சிதம்பரனார் மாவட்டம் நாரைக்கிணறு, கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு, மதுரை மாவட்டம் கூடலூர் தெற்கு, சென்னை, கொளத்தூர், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், தளவாய் ஆகியவைகள்.

அடுத்து தீயணைப்பு நிலையங்கள்—

செங்கற்பட்டு தமிழ்மணி வேண்டுகோளுக்கிணங்க அண்ணா மாவட்டம், திருக்கழுக்குன்றம்;

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், பள்ளிப்பட்டு அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் பள்ளிப்பட்டுநகர்;

பூந்தமல்லி சுதர்சனம் வேண்டுகோளுக்கிணங்க பூந்தமல்லி, எம்.ஜி.ஆர் மாவட்டம்;

இராதாபுரம் அப்பாவு, வேண்டுகோளுக்கிணங்க— எல்லாம் நீங்களாகவே வருகிறீர்கள்; திசையன்விளை, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்;

மோகனதாசன், பூம்புகார் வேண்டுகோளுக்கிணங்க நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் பூம்புகார்;



துரைசாமி, வரகூர் வேண்டுகோளுக்கிணங்க, வேப்பூர், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம்;

திரு. சுப. தங்கவேலன் வேண்டுகோளுக்கிணங்க சாயல்குடி, இராமநாதபுரம் மாவட்டம்;

துரை. சந்திரசேகரன், திருவையாறு வேண்டுகோளுக்கிணங்க தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு;

கோமதி சீனிவாசன், வலங்கைமான் வேண்டுகோளுக்கிணங்க தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான்;

வீட்டுவசதித் துறை அமைச்சர் மற்றும் ந. பாண்டுரங்கன், பெரணமல்லூர் வேண்டுகோளுக்கிணங்க திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் சேத்துப்பட்டு;

உணவு அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்தில் லால்குடி;

பெருந்துறை நா. பெரியசாமி வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை;

திருப்பூர் சுப்பராயன் வேண்டுகோளுக்கிணங்க— எத்தனை வேண்டுகோள்கள், கோவை மாவட்டத்தில் திருப்பூர் தெற்கு;

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்டத்தில் அந்தியூர்;

வேலூர் ஞானசேகரன் கோபத்திற்கிணங்க, வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஒடுக்கத்தூர்;

உப்பிலியாபுரம் கருப்பசாமி வேண்டுகோளுக்கிணங்க, உப்பிலியாபுரம், திருச்சி- பெரும்பிடுகு முத்தரையார் மாவட்டம்;

அப்துல் லத்தீப், வாணியம்பாடி அவர்களுடைய சீற்றத்திற்கிணங்க வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், ஆலங்காயம்;

திருமங்கலம் முத்துராமலிங்கம் வேண்டுகோளுக்கிணங்க, கள்ளிக்குடி;

வீட்டுவசதித் துறை அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க கீழ் பென்னாத்தூர், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்;

திருநாவுக்கரசு வேண்டுகோளுக்கிணங்க அறந்தாங்கி, தீயணைப்பு நிலையம், ஆவுடையார் கோயில்;

அசோகன், திருவாரூர் வேண்டுகோளுக்கிணங்க வேளாங்கண்ணி;

இ.ஏ.பி. சிவாஜி வேண்டுகோளுக்கிணங்க பேரம்பாக்கம், எம்.ஜி.ஆர். மாவட்டம்;

குழந்தை தமிழரசன், விருத்தாச்சலம் வேண்டுகோளுக்கிணங்க மங்கலம்பேட்டை, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்;

டி. மணி, விளவங்கோடு வேண்டுகோளுக்கிணங்க கொல்லங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம்;

சிவபுண்ணியம், மன்னார்குடி அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில் கூத்தாநல்லூர்;

தீரன் என்கின்ற இராசேந்திரன் வேண்டுகோளுக்கிணங்க பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் செந்துறை;

ஆகவே, காவல்துறையிலே ஆரம்பித்து, தீயை அணைக்கும் துறையிலே வந்து முடித்துவிட்டேன்; தீ அணையட்டும் என்று கூறி இந்த அளவில் அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி 2.10 ஆகிவிட்டது. இனிமேல் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) அதிகம் பேர் எழுந்து நிற்கீறீர்கள். எவ்வளவு சலுகைகள் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்களே. (குறுக்கீடுகள்) பாருங்கள், எத்தனை பேர்? (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இராசிபுரத்தில் புறக்காவல் நிலையம் வேண்டுமென்று என்னிடம் கேட்கப்பட்டிருக்கிறது. என்னுடைய உரையில் அது விடுபட்டுவிட்டது. நிச்சயமாக அதையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு,

**(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 12,92,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 15—காவல்துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 15—காவல்துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விம்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காவல்துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 539,47,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்). மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவேண்டும். நீங்கள் அமைதி காக்கிறவரை நான் அடுத்தபடி படிக்கப்போவதில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) படிக்காமல் மட்டும் இருக்கமாட்டேன், நடவடிக்கையும் எடுப்பேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

144 மானியக் கோரிக்கைகள், 1997-98 விவாதமும், வாக்கெடுப்பும்— தொடர்ச்சி. [1997 ஏப்ரல் 25

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 33,80,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அறிவிப்பு

### சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கும் விருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 25-4-1997 இரவு 7.30 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் (பிலிம் சிட்டி) விருந்தளிப்பார்கள். இதற்கான அழைப்பிதழ் அனைத்து உறுப்பினர்களுக்கும் தனியாக ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து உறுப்பினர்கள் மட்டும் விருந்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக விடுதியிலிருந்து தனிப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

169. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை, 1996-97.

170. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்திரெண்டாவது அறிக்கை, 1996-97.

171. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்துமூன்றாவது அறிக்கை, 1996-97.

172. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1996-97.

173. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1996-97.

174. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை, 1996-97.

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.